REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஒக்டோபர் 3 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

1932 - 2022

வரு. 90 இல. 233 | Monday 03, October, 2022 | 20பக்கங்கள் | 40/-

## வடக்கில் திடீரென அதிகரித்த போதைப்பொருள் பாவனை

### பிரதமர் கவலை; கடும் நடவடிக்கைக்கு பணிப்பு



வடக்கு மாகாணத்தில் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை திடீரென அதிகரித்தமை மிகவும் கவலையளிப்பதாக பிரதமர் 06

---

ஆயுத குறைப்பு, சர்வதேச பாதுகாப்பு தொடர்பிலான

## ஐ.நா சபையின் முதல் குழுவின் தலைவராக மொஹான் பீரிஸ்



ஆயுதக் குறைப்பு மற்றும் சர்வதேச பாதுகாப்பு தொடர்பான விடயங்களைக் கையாளும் ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது குழுவின் இவ்வருடத்திற்கான தலைவராக, இலங்கையின் தூதுவரும் ஐக்கிய நாடுகள் சபைக்கான நிரந்தரப் பிரதிநிதியுமான மொஹான் பீரிஸ் நியமிக்கப்பட்டுள்ளார். ஐக்கிய நாடுகள் சபையின் பணி முதன்மையாக ஆறு (6) முக்கிய 06

---

எதிர்மறை அரசியலால் எதனையும் சாதிக்க முடியாது;

## தேசிய சபை தமிழ் தரப்புக்கு கிடைத்துள்ள அரிய வாய்ப்பு

### பங்கேற்று காரியத்தை சாதிக்க டக்ளஸ் அழைப்பு



பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேசிய சபையில் தமிழ்த் தரப்புக்களும் பங்கேற்க வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பகிரங்கமாக அழைப்பு விடுத்துள்ளார். 1987ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கும் வாய்ப்புக்களை பயன்படுத்தாது, எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டு வரும் தமிழ்த் தரப்புக்கள் மீண்டும் கிடைத்துள்ள 06

---

சமூக வலைத்தளங்களில் விஷமப் பிரசாரம்;

## அரச ஊழியர்களது சம்பள குறைப்பு செய்தி பொய்யானது

### நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிடிய



**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரசாங்க ஊழியர்களின் அடுத்த மாத சம்பளத்தில் எந்த வித குறைபாடுகளும் இருக்காது என்றும், அதனை குறைப்பதற்கான எந்த ஒரு தீர்மானத்தையும் அரசாங்கம் மேற்கொள்ளவில்லை எனவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சிம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார். 06

---

ஐ.நாவில் 06ஆம் திகதி வாக்கெடுப்புக்கு வரவுள்ள

# புதிய பிரேரணைக்கு அரசு கடும் எதிர்ப்பு

## அலிசப்ரி தலைமையில் அரச உயர்மட்டக்குழு ஜெனீவா பயணம்



**இலங்கை தொடர்பான புதிய பிரேரணை நாட்டின் இறைமைக்கு பாதகம் என்பதால் நாம் எமது எதிர்ப்பை வெளியிட்டு நிராகரிப்போம் என அமைச்சர் அலிசப்ரி தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பான புதிய பிரேரணை எதிர்வரும் 6ஆம் திகதி வாக்கெடுப்புக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ள நிலையில், வெளிவகார அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான அரசாங்க உயர்மட்ட குழுவொன்று நேற்றைய தினம் மீண்டும் ஜெனிவாவுக்கு பயணமாகியுள்ளது.

ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் பிரிட்டன் தலைமையிலான இணை அனுசரணை நாடுகள் இலங்கை தொடர்பில் 06

---

நாயன் மார்களால் பாடப்பட்ட சிறப்புமிக்க

## திருக்கோணேஸ்வரர் ஆலய வளர்ச்சிக்கு இந்தியா உதவும்



**ஆலய தரிசனத்தில் இந்திய தூதுவர் கருத்து**

**றொட்டவெவ குறூப் நிருபர்**

எதிர்காலத்தில் திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயத்தினுடைய 06

---

அமெரிக்காவிலுள்ள இலங்கை தூதரகத்தின் முயற்சியில்

## 12 மில். டொலர் பெறுமதியான மருந்து, உபகரணங்கள் அன்பளிப்பு

### இதுவரை மூன்று தடவைகள் சுகாதார அமைச்சுக்கு வழங்கியது

**லோரன்ஸ் செல்வநாயகம்**



அமெரிக்கா இலங்கைக்கு மேலும் 12 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது.

அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதரகம் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் நேற்று குறித்த மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அமெரிக்காவிலுள்ள இலங்கைத் தூதரகம் அமெரிக்காவின் பிரபல மனிதாபிமான உதவி அமைப்புகளுடன் இணைந்து இலங்கைக்கு 06

---

குறைந்த விலையுடன் பாதுகாப்புக்கும் உறுதி;

## சுகாதார அணையாடைகளை உள்ளூரில் தயாரிக்க ஊக்குவிப்பு

### மூலப்பொருட்களுக்கான வரிகளை நீக்கியது அரசு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சுகாதார அணையாடை உற்பத்திகளுக்காக இறக்குமதி செய்யப்படும் ஐந்து மூலப் பொருட்களுக்கான வரிகளை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகளின் சுகாதார நலன்களை உறுதி செய்யும் வகையில் சுகாதார அணையாடைகளை குறைந்த விலையில் தயாரிப்பதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இறக்குமதி செய்யப்படும் சுகாதார அணையாடைகளுக்கு வரிச் சலுகை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. 06

---

பேருவளை ஜாமியா நளீமிய்யாவில்

## இவ்வருட தேசிய மீலாத் தின விழா நிகழ்வுகள்

### பிரதமர் தினேஷ் தலைமையில் அக். 09இல்

**(அஜ்வாத் பாஸி)**



முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஏற்பாட்டிலான இவ்வருடத்திற்கான (2022) தேசிய மீலாதுன் நபி விழா எதிர்வரும் 09ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பேருவளை, ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் 06

---

## இந்தோனேஷிய கால்பந்து போட்டியில் களேபரம்

### மைதானத்தில் 174 பேர் பலி; பலருக்கு காயம்



இந்தோனேஷியாவில் கால்பந்து போட்டியில் ஏற்பட்ட வன்முறையில் 174 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் கிழக்கு ஜாவாவில் மலாங் மாகாணத்தில் உள்ள கஞ்சுருஹான் மைதானத்தில் நேற்று கால்பந்து போட்டி நடந்தது. அதில் உள்ளூர் அணியான 06

---

## மந்தபோஷணை செய்திகள் அப்பட்டமான கட்டுக்கதை

### சுகாதார அமைச்சர் கெஹலிய மறுப்பு



சிலர் கூறுவதைப் போன்று நாட்டில் மந்தபோஷணை பிரச்சினை இல்லை என சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார். உணவுப் பணவீக்கம் காரணமாக ஒரு குடும்பத்தின் உணவு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளதை ஒப்புக் கொண்ட சுகாதார அமைச்சர், இதன் மோசமான விளைவுகள் எதிர்காலத்தில் ஏற்படக்கூடும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் இவ்வாறானதொரு நிலைமை ஏற்படாத வகையில் அனைத்து நடவடிக்கைகளும் 06

---

## பிரபல நடிகர் தர்ஷன் தர்மராஜ் காலமானார்

### திடீர் சுகவீனம் காரணமாக உயிரிழப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தமிழ் ரசிகர்களின் பாராட்டைப் பெற்ற சுனாமி, இனியவன் போன்ற திரைப்படங்கள் மற்றும் சிங்களத் திரைப்படங்கள், நாடகங்களில் நடித்துள்ள பிரபல நடிகர் தர்ஷன் தர்மராஜ் தமது 41 வது வயதில் காலமானார். இறக்குவானை பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட தர்ஷன் தர்மராஜ் திடீர் சுகவீனம் 06

---

## டீசலின் விலையையும் அரசு குறைக்க முயல வேண்டும்

### பஸ் உரிமையாளர் சங்கம் வேண்டுகோள்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

பெற்றோலின் விலை குறைவடைந்துள்ள நிலையில், டீசலின் விலையையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பஸ் உரிமையாளர்கள் சங்கம் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது.

அவ்வாறு டீசல் விலை குறைக்கப்படுமானால் அதன் பிரதிபலனை சாதாரண மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் அந்த சங்கம் 06

---

## தேங்காய் விலைகள் திடீரென அதிகரிப்பு

### ஏல விற்பனையில் 1.9 வீதம் உயர்வு



தேங்காய்களின் விலைகள் தற்போது 1.9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 29ஆம் திகதி இடம்பெற்ற தேங்காய் ஏல விற்பனையின் போது ஆயிரம் தேங்காய்களின் விலை 58,516.87ஆக அதிகரித்துள்ளது. இலங்கை தெங்கு அபிவிருத்தி சபையினால் நடத்தப்பட்ட இந்த ஏலத்தில் கிடைத்த அதிக விலை 68,000 ரூபாவாகும். 06

---

## எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் தடையின்றி மின் விநியோகம்

### பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தலைவர் உறுதி



எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் மின்சாரத்தை தடையின்றி வழங்க முடியும் என இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் பழுதடைந்த இரண்டு மின் உற்பத்தி அலகுகளும் அடுத்த இரண்டு வாரங்களில் மீண்டும் தேசிய மின்னோட்டத்துடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

மேலும் ஒக்டோபர் இறுதிக்குள் நிலக்கரி கையிருப்பு 06

---

யாழில் தம்பதிகள் உயிரிழந்த சம்பவம்;

## அறையிலிருந்த பெற்றோல் தீப்பற்றியதாலேயே உயிரிழப்பு



யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியிலுள்ள வீடொன்றில் அறையில் வைக்கப்பட்டிருந்த பெற்றோலில் தீ பற்றியதால்,தூக்கத்தில் இருந்த கணவனும் மனைவியும் தீக்காயங்களுக்கு உள்ளாகி பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவமொன்று நேற்றுக்காலை பதிவாகியுள்ளது. அறையில் வைக்கப்பட்டிருந்த பெற்றோலில் 06

---

## ஆட்டோ கட்டணத்தை குறைக்க முடியாது

### முச்சக்கர வண்டி சங்கங்கள் அறிவிப்பு



ஆட்டோ வண்டி கட்டணத்தை குறைப்பது தொடர்பான தீர்மானத்தை முச்சக்கரவண்டி சங்கங்கள் வெளியிட்டுள்ளன.

இதன்படி, பெற்றோல் விலையை குறைத்தாலும் முச்சக்கரவண்டி கட்டணத்தை குறைக்கப்போவதில்லை என அந்த சங்கங்கள் தெரிவித்துள்ளன.

வாராந்த எரிபொருள் ஒதுக்கீடு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் முச்சக்கர வண்டி கட்டணத்தை குறைக்க வழி இல்லை 06

# நகர்வலம்



# இரண்டு வருட கால சம்பளப்பணம் மக்கள் பணிகளுக்காக அன்பளிப்பு

## 'மக்களுக்கு சேவை செய்ய அமைச்சுப் பதவி அவசியமில்லை என்கிறார்' கருணாசேன கொடிதுவக்கு எம்.பி

**வெலிகம தினகரன் நிருபர்**

மக்களுக்கு சேவை செய்ய அமைச்சர் பதவி தேவையில்லை சாதாரண பாராளுமன்ற உறுப்பினர் பதவி மட்டும் போதுமானது என மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் (ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன) கருணாதாஸ கொடித்து வக்கு தெரிவித்தார்.

நான் இரண்டு வருட காலமாக பெற்றுக்கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சம்பளம் உட்பட ஏனைய கொடுப்பனவுகளையும் மக்களுக்காக அன்பளிப்பு செய்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



தொடர்ந்து அவர் அங்கு உரையாற்றுகையில், பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில், நான் மக்கள் பக்கம் நின்றே எனது தீர்மானங்களை மேற்கொள்வேன். மக்களுக்கு சேவை செய்ய முடியாவிடின் அப்பதவியில் இருந்து பிரயோசனம் இல்லை. எல்லா சந்தர்ப்பங்களிலும் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கவனம் செலுத்துபவனாகவே நான் பாராளுமன்றத்தில் செயற்படுகிறேன். நான் இராஜாங்க அமைச்சுப் பதவிக்காகவும் அழைக்கப்பட்டேன். எனினும் நான் அதனைப் பெற்றுக் கொள்ள விரும்பவில்லை. தற்போது பாராளுமன்றத்தில் இருக்கும் எனக்கு ஜனாதிபதி, பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பூரண ஒத்துழைப்பு உள்ளது. இதன் மூலம் மக்களின் பிரச்சினைகளை தீர்வு காண முடியும்.

தேர்தல் காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற நான் பின் நிற்கப் போவதில்லை.

இதன் ஒரு கட்டமாகத்தான் எனது இரண்டு வருட சம்பளம் உட்பட சகல கொடுப்பனவுகளையும் மக்களுக்காக தியாகம் செய்தேன். இதனை நிறைவேற்றக் கிடைத்ததை நான் பாக்கியமாக கருதுகிறேன் என்றார்.

## சிறுவர் தின நிகழ்வில் இரத்ததான முகாம்



**கெக்கிராவ குறூப் நிருபர்**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஹோராப்பொல DX சமூக முன்னேற்ற கழகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு (01) ஹோராப்பொல முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் அதிதியாக கலந்து சிறப்பித்தார். தம்புள்ள இரத்த வங்கி அதிகாரிகளின் பூரண ஒத்துழைப் போடு நடைபெற்ற இவ்விரத்த தான நிகழ்வில் 100 இற்கும் அதிகமானோர் கலந்துகொண்டிருந்தாலும் கூட இரத்தம் பெற்றுக்கொள்ளும் பக்கட்டுக்களின் தட்டுப்பாட்டால் 50 பேரிடம் மட்டுமே இரத்தம் தானமாக பெற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



சிரேஷ்ட ஊடகவியலாளரும் எழுத்தாளருமான சுமுது சதுராணி ஜயவர்த்தன சிலுமின பத்திரிகையின் பிரதி ஆசிரியராக (01) பதவியேற்றுள்ளார். இவரை சிலுமின பத்திரிகை பிரதம ஆசிரியர் தர்மன் விக்ரமரத்ன, சண்டே ஒப்சேர்வர் ஆசிரியர் தினேஷ் வீரவங்ச மற்றும் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஆசிரியர் செந்தில் வேலவர் ஆகியோர் சுமுது சதுராணிக்கு வாழ்த்து தெரிவித்த போது எடுத்த படம்.

# 2022ஆம் வருட தேசிய மீலாதுன் நபி விழா இம்முறை பேருவளையில்

## சீனன்கோட்டை பள்ளிவாசலில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம்

இவ்வருடத்திற்கான (2022) தேசிய மீலாதுன் நபி விழா பேருவளை, ஜாமியா நளீமிய்யா கலாபீட மாநாட்டு மண்டபத்தில் எதிர்வரும் 09ஆம் திகதி நடைபெறவுள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் அல்ஹாஜ் இப்றாஹீம் அன்ஸார் தெரிவித்தார்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள், மற்றும் பிரதேச அமைப்புகளின் முக்கிய பிரமுகர்களுடனான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் (01) சீனன்கோட்டை பாஸிய்யா ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.



இக்கூட்டத்தின் இறுதியில் அனைவரினதும் ஏகோபித்த முடிவுகளின் பிரகாரம் இவ்வருடத்திற்கான தேசிய மீலாத் தின நிகழ்வுகள் ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் நடாத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. மேற்படி கூட்டத்தில் சீனன்கோட்டை பள்ளிச்சங்க இணைச் செயலாளர் அல்ஹாஜ் சிஹாப் தலைமையிலான பள்ளிச்சங்க உறுப்பினர்கள், அரச ஹஜ் கமிட்டி தலைவர் அஹ்கம் உவைஸ், சீனன்கோட்டை இரத்தினக்கல் வர்த்தக சங்க பிரதிநிதிகள், சீனன்கோட்டை வாலிபர் ஹழரா ஜெமாத்தின் அங்கத்தவர்கள், பிரதேச சமூக சேவை அமைப்புகளின் பிரதிநிதிகள், இஸ்லாமிய அமைப்புகளின் பிரதிநிதிகள், திணைக்கள அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது மேற்படி தேசிய மீலாத் தின நிகழ்வுகளை சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடாத்துவதற்கு கலந்து கொண்ட பிரதிநிதிகள் பூரண ஒத்துழைப்புகளை வழங்குவதாக இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதோடு இந்நிகழ்வை சிறப்பிக்குமுகமாக ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தை மையப்படுத்தி நினைவு முத்திரையொன்றும் வைபவரீதியாக வெளியிடப்படவுள்ளதாக திணைக்கள அதிகாரி ஷெய்க் முப்தி முர்ஸி தெரிவித்தார்.

## IFM முன்பள்ளியின் விளையாட்டு போட்டி

**புத்தளம் தினகரன் நிருபர்**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புத்தளம் நகரில் தமிழ் மொழி மூலம் முதன் முதலாக ஸ்தாபிக்கப்பட்ட ஐ.எப்.எம். முன்பள்ளியின் 50 வது ஆண்டு நிறைவு பொன்விழாவோடு கூடிய, அதன் வருடாந்த 'டைனி டொட்ஸ்' விளையாட்டு போட்டிகள் இன்று 03 ம் திகதி திங்கட்கிழமை மாலை 3.45 க்கு புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அதன் பொறுப்பாசிரியை திருமதி எம்.எஸ்.பௌசுல் ரூஸி தலைமையில் மிக விமரிசையாக நடைபெறவுள்ளது.

புத்தளம் நகரில் தமிழ் மொழி மூல முன்பள்ளிகள் எதுவுமே இல்லாத ஒரு கால கட்டத்தில் 04.02.1972 ம் ஆண்டு இந்த ஐ.எப்.எம். முன்பள்ளி முதன்முதலாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த விளையாட்டு போட்டியில் 21 மழலை சிறார்கள் தமது திறமைகளை வெளிக்கொணரவுள்ளனர்.

"நாம் இல்லையேல் நாளை என்பதும் இல்லை" என்பது இந்த வருட விளையாட்டு போட்டியின் தொனிப்பொருளாகும்.



106 வது பொலிஸ் தின நிகழ்வினை முன்னிட்டு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வடமத்திய மாகாண நிகழ்வு அநுராதபுரம் பொது விளையாட்டு அரங்கில் நேற்று முன்தினம் (01) மாலை நடைபெற்றது. இதன்போது நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக வருகை தந்த வடமத்திய மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் கித்சிறி ஜயலத் மற்றும் வடமத்திய மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் லக்சிறி விஜேசேன உள்ளிட்டோர் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக் கொள்வதை படத்தில் காணலாம். படம்: அநுராதபுரம் தினகரன் நிருபர்

இலங்கை நிலைவரம் தொடர்பில்

## அருட்தந்தை சந்துரு கனடா உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு

இலங்கையில் தற்போது காணப்படும் இந்த பொருளாதார நெருக்கடி தொடரும்பட்சத்தில் இலங்கையில் நடுத்தர வர்க்கம் காணாமல் போய்விடும் என்று ஜனனம் அறக்கட்டளை பணிப்பாளரும் சர்வதேச இசை கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கை தூதுவரும் அதிவணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ் சந்துரு பெர்னாண்டோ அவர்கள் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தில் கனடாவுக்கான பிரதி உயர் ஸ்தானிகர் மேதகு டேனியல் பூட்டை நேற்று சந்தித்த போதே அருட்தந்தை இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்கள் தற்போது எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்த சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் இலங்கையில் நடுத்தர வர்க்கம் மட்டும் இருக்காது என்றும் மேல்தரப்பு மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினராகி விடுவார்கள் என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்.

குறிப்பாக உலகில் சிறந்த தேயிலையை உற்பத்தி செய்யும் மலையகத்தில் உள்ள தோட்ட தொழிலாளி வர்க்க மக்கள் நாளொன்றுக்கு ஆயிரம் ரூபா சம்பளம் என்பது சிம்மசொப்பனமாகி விட்டது.

மக்களின் தற்போதைய நிலைமையை எடுத்துரைத்த அருட்தந்தை, கனடாவில் உள்ள அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக உயர் ஸ்தானிகர் உறுதியளித்துள்ளார்.

## பொலன்னறுவை வீடுகளில் ஆயுதங்கள், ரவைகள் மீட்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

பொலன்னறுவை புலஸ்திபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அக்பர்புர பங்குரான பகுதியில் உள்ள இரு வீடுகளில் ஆயுதங்கள் மற்றும் ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றிற்கமைய கடந்த (30) அதிகாலை 4.40 மணியளவில் புலஸ்திபுர பொலிசார் மேற்கொண்ட தேடுதலின் போது ஆயுதங்களுடன் 32 மற்றும் 47 வயதுடைய இருவரை கைது செய்துள்ளனர்.

குறித்த வீடுகளில் இருந்து 303 ரக துப்பாக்கி 303 ரக மெகசின் 7,6×39 ரவைகள் 7.62× 51 ரவைகள் இரும்பு துப்பாக்கிச் சன்னங்கள், சொட்கன் துப்பாக்கி தோட்டாக்கள் , வாள்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் செய்ன்கள் போன்றவைகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

## காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

கெப்பித்திகொள்ளாவ பகுதியில் காட்டுயானையின் தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பத்திகொள்ளாவ பொலிஸ் பிரிவிலுள்ள உடங்காவ பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் உயிரிழந்தவர் 44 வயதுடைய உடங்காவ கெப்பித்திகொள்ளாவ பகுதியை வசிப்பிடமாக கொண்டவர் என்பது தெரியவந்துள்ளது. சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உயிரிழந்த நபர் அதேபகுதியிலுள்ள மரண வீடொன்றுக்கு சென்று மீண்டும் வீடு நோக்கி வரும் வழியில் காட்டுயானையின் தாக்குதலுக்கு உள்ளாகி சம்பவயிடத்திலேயே உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கெப்பித்திகொள்ளாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



வாசிப்பு மாதத்தை முன்னிட்டு, சிறுவர்களின் வாசிப்பு திறனை மேம்படுத்தும் நோக்கில் நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலய நூலகத்தின் சிறுவர்களுக்கான நூலக பிரிவு, சமூக சேவையாளர் ருமைஸ் வழங்கிய ஆதரவுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு அண்மையில் மாணவர்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வின் போது பாடசாலை அதிபர் ஆர். எப்.எஸ். ரசூல், சமூக சேவையாளர் ருமைஸ், உட்பட பிரதி அதிபர், உதவி அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் என பலர் கலந்து கொண்டனர். (படம் திறப்பனை தினகரன் நிருபர்

## மத்ரஸதுல் ஸலாஹ் பெண்கள் பிரிவு திறந்து வைப்பு





பேருவளை சீனன்கோட்டை ஸலாஹ் அரபிக்கல்லூரியின் கீழ் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பாடசாலை செல்லும் மாணவிகளுக்கான பகுதி நேர ஹிப்ழ் பிரிவு மத்ரஸா நேற்று (02) சீனன்கோட்டை நளீம் ஹாஜியார் மாவத்தையில் புதிதாக திறந்து வைக்கப்பட்டது.

மத்ரஸதுஸ் ஸலாஹ் மத்ரஸாவின் நிர்வாக சபைத்தலைவர் அல்ஹாஜ் எம்.எஸ்.எம். ரஸ்வி தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழாவில் சீனன்கோட்டை பள்ளிச்சங்கத்தலைவர் முக்தார் ஹாஜியார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் விசேட பேச்சாளராக களுத்துறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா சபைத் தலைவர் அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் (பஹ்ஜி) கலந்து சிறப்பித்ததோடு பள்ளிச்சங்க நிர்வாகிகள் உட்பட ஊர் பிரமுகர்களும் கலந்து சிறப்பித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஒக்டோபர் 3 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**
03 முதல் 06 வரை
சுபஹ் - 04.43
லுஹர் - 12.01
அஸர் - 03.16
மஃரிப் - 06.01
இஷா - 07.11

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் புரட்டாசி 16
ராகுகாலம் : பகல் : 07.30 - 09.00வரை
சுபநேரம் : காலை : 06.00 - 07.30வரை
யோகம்: சித்தமரண யோகம்
திதி: அஷ்டமி




# பரீட்சைகளில் சித்தியடைவோர் வாழ்க்கையில் தோற்று விடுகின்றனர்

## அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பரீட்சையில் சித்தியடைந்துள்ள பெருமளவானோர் வாழ்க்கையில் தோல்வியடைந்துள்ளனர் என ஊடகத்துறை மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.கண்டி குண்டசாலை பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய அமைச்சர்,

நாட்டில் பெருமளவு பிள்ளைகள் கல்விப் பொது தராதர சாதாரண தரம், உயர்தரம் மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளில் சித்தியடைந்துள்ள போதும் அவர்களில் பெரும்பாலானோர் வாழ்க்கையில் தோல்வியடைகின்றனர்.

அதற்குக் காரணம் எமது கல்வி முறை மூலம் உலக நாடுகளில் 

06




கண்டி குண்டசாலையில் அமைந்துள்ள மகநெகும கட்டட இயந்திர உபகரண பயிற்சி பாடசாலையில் பயிற்சி பெற்ற நூறாவது அணியினருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று மத்திய மாகாண கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. போக்குவரத்து பெருந்தெருக்கள் மற்றும் ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன உரை நிகழ்த்துவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# நாட்டில் அவுஸ்திரேலிய நிறுவனங்கள் முதலீடுகளை மேற்கொள்ள முடியும்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கோரிக்கை

இலங்கையில் அவுஸ்திரேலிய நிறுவனங்களின் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் போல் ஸ்டீபன்ஸிடம் தெரிவித்துள்ளார்.

இருவருக்கும் இடையில் நேற்று முன்தினம் சந்திப்பு இடம்பெற்றதாக வெளிவிவகார அமைச்சு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, உள்நாட்டு சவால்களை எதிர்கொள்வதற்காக அண்மையில் அவுஸ்திரேலியாவினால்



வழங்கப்பட்ட உடனடியான மனிதாபிமான உதவிகளுக்கு வெளிவிவகார அமைச்சர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

வலுசக்தி மற்றும் கல்வித்துறையில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

அதேநேரம், பல்தரப்பு மட்டத்தில் பரஸ்பர நலன்கள் உள்ளிட்ட பல்வேறு இருதரப்பு விடயங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

# பீட்டர் கெனமனின் 105வது பிறந்த தினம்



கொழும்பு மாநகர சபையின் கொட்டாஞ்சேனை மேற்கு நகரசபை உறுப்பினராகவும் 1947 தொடக்கும் 1977 வரை மத்திய கொழும்பு பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் ஆரம்ப அங்கத்தவரும் மற்றும் செயலாளருமான பீட்டர் கெனமனின் 105 ஆவது பிறந்த நாள் இன்று (03) அனுஷ்டிக்கப்படுகிறது.

கொழும்பு மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்திற்கு முன்னால் அமைக்கப்பட்டுள்ள பீற்றர் கெனமன் உருவச்சிலைக்கு கொழும்பு நகர மேயர் ரோஸி சேனநாயக்க இன்று மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவார்.

இந் நிகழ்வில் கல்வி அமைச்சர் சட்டத்தரணி சுசில் பிரேம ஜெயந்த, முன்னாள் அமைச்சர் டியூ குணசேகர,இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான செயலாளர் விசேட வைத்திய நிபுணர் ஜீ . வீரசிங்க, கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயர் மொஹமட் இக்பால், எதிர்க் கட்சி தலைவர் எம். எச் மன்சில் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவின் பொருளாளரும் நகர சபை உறுப்பினருமான எல்.ஆர். ஸ்டீபன் தெரிவித்தார்.

**ஆரியரத்ன கனேகொட**

கற்பிட்டி பகுதி படகு விபத்திலிருந்து;

# 38 உள்ளூர் சுற்றுலாப்பயணிகள் கடற்படையால் மீட்கப்பட்டுள்ளனர்

## கடற்படை ஊடகப்பிரிவு தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கடலில் மூழ்கவிருந்த இழுவை படகிலிருந்து உள்ளூர் சுற்றுலாப் பயணிகள் 38 பேரை கடற்படையினர் பாதுகாப்பாக மீட்டுள்ளனர்.

இந்த சம்பவம் கற்பிட்டி பகுதியில் இடம்பெற்றுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் போக்குவரத்திற்காக பதிவு செய்யப்பட்டிருந்த மேற்படி இழுவைப் படகு கற்பிட்டி, பத்தலங்குண்டு தீவுக்கு சுற்றுலாப் பயணிகளுடன் பயணித்த போதே படகிற்குள் நீர் கசிந்து படகு நீரில் மூழ்கும் அபாயத்தை அடைந்துள்ளது. அந்த நிலையில் அதன் உரிமையாளர் கற்பிட்டி கடற்படையினருக்கு அறிவித்ததையடுத்து

06

# இலங்கை மத்திய வங்கியின் அதிரடி அறிவிப்பு

சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலையான வைப்பு வட்டி திட்டம் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கடந்த மாதம் 22 ஆம் திகதி அமைச்சரவை தீர்மானத்திற்கு அமைய, உரிய பணிப்புரைகள் இலங்கை மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

06

# குழந்தையை விற்க முயன்ற இலங்கை பெண் கைது

## துபாயில் மேலும் 03 பெண்கள் சிக்கினர்

துபாயில் 12,000 திர்ஹம்களுக்கு (சுமார் 12 இலட்சம் ரூபா) சமூக ஊடகங்கள் ஊடாக குழந்தையொன்றை விற்பனைசெய்ய முயன்ற இலங்கைப் பெண் ஒருவர் உட்பட மூவருக்கு துபாய் நீதிமன்றம் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளதாக சர்வதேச ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

06

முதலாம் திகதி நள்ளிரவு தொடக்கம்

# மதுபானம் மற்றும் சிகரட் விலைகள் அதிகரிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



முதலாம் திகதி நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மதுபானம் மற்றும் சிகரெட் வகைகளின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

DCSL நிறுவனத்தினால் அனைத்து மதுபான வகைகளின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் 750 மில்லி லீற்றர் விசேட மதுபான போத்த லொன்றின் விலை 150 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.அதற்கிணங்க ஏனைய மதுபானங்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சிகரெட்டுக்களின் விலைகளை முதலாம் திகதி நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளதாக இலங்கை புகையிலை

06

# சொகுசு காரில் கடத்தப்பட்ட 06 கோடி ரூபா போதைப்பொருள்

## தெற்கு அதிவேக பாதையில் பொலிசாரால் மீட்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த அதி சொகுசு காரொன்றிலிருந்து ஆறு கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருளை பொலீசார் கைப்பற்றியுள்ளனர்.

அக்மீமன பொலிசாருக்கு கிடைத்த தகவலையடுத்து அதிவேக நெடுஞ்சாலையில் பயணித்த மேற்படி கார் தடுத்து நிறுத்தப்பட்டு பரிசோதனை மேற்கொண்ட போதே அதிலிருந்து

06

# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2022ஆம் ஆண்டு யூலை மாதத்திற்காக பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடையதான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே. பிரபாத் சந்திரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு -05.**

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28ம் திகதி

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய் மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலில் | வேலையாள் ஒரு நாளைக்கு ரூபா 1638.61 |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.


நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு
நகர அபிவிருத்தி அதிகார சபை
**முதலீட்டு முன்மொழிவுகளுக்கான அழைப்பு**
மாதிவெல உடஹமுல்ல
குடியிருப்பு அபிவிருத்தித் திட்டம்

**மாதிவெல நடைப்பயிற்சி தடத்திற்கு**
**இணைவாக குடியிருப்பு அபிவிருத்தி**
**திட்டத்திற்கான சிறந்த முதலீட்டு வாய்ப்பு**






- காணியின் அளவு : **0A 2R 23.33** (103.33 பேர்ச்)
- குத்தகைக் காலம் : 99 வருட குத்தகை அடிப்படையில்
- அடிப்படை விலை ரூபா : 335,000,000.00
- பிணை முறி ரூபா : 5,000,000.00

- இதில் ஆர்வம் காட்டும் விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய மேலதிக தகவல்களை உள்ளடக்கிய முதலீட்டுப் பிரேரணைகள் கோரும் ஆவணமொன்றை பெற்றுக்கொள்வதற்கு பெறுமதி சேர் வரி (VAT) உள்ளடக்கிய மீளளிக்கப்படாத 100,000.00 ரூபா தொகையை பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 6வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் நிதிப் பிரிவிற்குச் செலுத்தி, 8ஆம் மாடியில் அமைந்துள்ள அந்த அதிகார சபையின் ஆதன முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்திப் பிரிவிலிருந்து 2022 ஒக்டோபர் மாதம் 05ஆம் திகதி முதல் 2022 நவம்பர் மாதம் 18ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம்.
- விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் பத்தரமுல்ல, செத்சிறிபாய, கட்டம் 1, 9வது மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி அதிகார சபையின் கேட்போர் கூடத்தில் 2022 நவம்பர் 08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
- அபிவிருத்திப் பிரேரணைகள் ஏற்றுக்கொள்ளல் 2022 டிசம்பர் மாதம் 09ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு நிறைவுறும். அபிவிருத்தி முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்ளல் நிறைவுற்றதன் பின் கிடைக்கப்பெற்றுள்ள தொழில்நுட்ப முன்மொழிவுகள் பத்தரமுல்ல ''சுஹுருபாய'', 17ஆம் மாடியில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்பம்) அவர்களின் அலுவலகத்தில் உடன் திறக்கப்படும். இதில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

***மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்:***
பணிப்பாளர் (ஆதன அபிவிருத்தி), ஆதன அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ பிரிவு,
நகர அபிவிருத்தி அதிகார சபை, 8ஆம் மாடி,
செத்சிறிபாய, கட்டம் 1, பத்தரமுல்ல.
தொலைபேசி: 011-2875921, 077-0399654 மற்றும் 011-2875916-20 நீடிப்பு 2960-2968
தொலைநகல் இல. 011-2875900 மின்னஞ்சல் முகவரி: directorred@uda.gov.lk / இணைய தளம்: www.uda.gov.lk

**தலைவர், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பேச்சுவார்த்தை இணக்கக் குழு,**
**17ஆம் மாடி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு, 'சுஹுருபாய', பத்தரமுல்ல.**

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் புரட்டாதி மாதம் 16ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் அவ்வல் பிறை 06



**குறள் தரும் சிந்தனை**

உயர்வகலம் திண்மை அருமைஇந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்

பகைவர் ஏற முடியாத உயரம், காவலர் நிற்க இயங்க வசதியான அகலம், இடிக்கமுடியாத வலிமை, கடக்க முடியாத பொறிகளின்அருமை...இந்நான்கையும்மிகுதியாக உடைய கோட்டையையே செயற்கைஅரண்என்றுநூல்கள்கூறும்.

## வளரிளம் பிள்ளைகளின் போஷாக்கு மீதான கரிசனை

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள தற்போதைய சூழலில் நாட்டு மக்களின் உணவுப் பாதுகாப்பையும் போஷாக்கையும் உறுதிப்படுத்துவதில் விஷேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் இந்நாட்டில் உள்ள பாலர் பாடசாலைகளில் கல்வி கற்கும் முன்பள்ளி சிறார்களுக்கு காலை உணவை இலவசமாக வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் விஷேட வேலைத்திட்டமொன்றை அறிமுகப்படுத்துவது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

தற்போதைய சூழலில் இந்நாட்டின் இளம் பராயத்தினரின் நலன்களைக் கருத்தில் கொண்டு இவ்வாறான வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தவென முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை பெரும்பாலானோர் வரவேற்றுள்ளனர்.

அந்த வகையில் இலங்கையின் முன்பள்ளிப்பருவ பிள்ளைகளது அபிவிருத்தி மையங்கள் தொடர்பான தேசிய கணக்கெடுப்பின்படி, நாட்டில் சுமார் 20 ஆயிரம் பாலர் பாடசாலைகள் உள்ளன. இப்பாடசாலைகளில் 02 வயது முதல் 05 வயதுக்கு இடைப்பட்ட சுமார் 05 இலட்சத்து 70 ஆயிரம் சிறுவர்கள் பாடசாலைக் கல்விக்காகத் தயார்படுத்தப்படுகின்றனர். இப்பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களில் 83 வீதமானவர்கள் தொழில்வாண்மை பயிற்சியைப் பெற்றவர்களாவர். ஆனால் 9.5 வீதமானவர்கள் முறையான பயிற்சியைப் பெற்றிராதவர்களாவர். நாட்டிலுள்ள பாலர் பாடசாலைகளில் 20 வீதமானவை உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளிட்ட பொது நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்ற அதேநேரம், பெரும்பாலானவை அரசசார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

இந்நாட்டில் 05 வயது முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட ஒவ்வொரு பிள்ளையும் கல்வி பெறுவது கட்டாயமாகும். இது முற்றிலும் இலவசமாக அளிக்கப்படும் கல்வி. இதன் நிமித்தம் நாட்டில் சுமார் 10 ஆயிரம் பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருப்பதோடு, இப்பாடசாலைகளில் 02 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

ஒவ்வொரு பிள்ளையும் கல்வி பெறுவது கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. அக்கல்விக்காக 02 தொடக்கம் 05 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைகளை கல்விக்கு தயார்படுத்தும் நிலையங்களாகவே பாடசாலைகள் உள்ளன.

இந்நிலையில் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடியின் விளைவாக சிறுவர்கள் போஷாக்கு தொடர்பான அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்கக்கூடிய நிலைமை காணப்படுகிறது. ஆனால் ஆரோக்கியமானதும் வளமானதுமான சமூகத்தை உருவாக்குவதில் போஷாக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. குறிப்பாக வளரிளம் பிள்ளைகளின் போஷாக்கு குறித்து உரிய கவனம் செலுத்தத் தவறும் பட்சத்தில் ஆரோக்கியமான எதிர்கால சமூகத்தை உருவாக்குவது பெரும் சவாலுக்குரிய விடயமாகி விடும். போஷாக்கானது குழந்தைகளின் ஆற்றல் மற்றும் திறன்களின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாகும்.

அதன் காரணத்தினால்தான் தற்போதைய பொருளாதார நெருக்கடிச் சூழலிலும் இந்நாட்டு இளம் பராயத்தினர் போஷாக்கு தொடர்பான அச்சுறுத்தலை எதிர்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளும் வகையில் விஷேட கவனம் செலுத்தப்பட்டு இருக்கின்றது. இந்நிலையில்தான் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் பாலர் பாடசாலை பிள்ளைகளுக்கு காலை உணவை இலவசமாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க தெரிவித்து இருக்கின்றார்.

இது நாட்டினதும், எதிர்கால சந்ததியினரதும் நலன்களை முன்னுரிமைப்படுத்தி முன்னெடுக்கப்படும் திட்டம் என்பதில் ஐயமில்லை. இத்திட்டமானது இந்நாட்டு இளம்பராயத்தினர் முகம் கொடுக்கக் கூடிய போஷாக்கு தொடர்பான அச்சுறுத்தலை முறியடிப்பதற்கு பக்கத்துணையாக அமையும்.

அரசாங்கமானது பொருளாதார நெருக்கடிக்கு நாடு முகம்கொடுத்துள்ள சூழலிலும் வளரிளம் சிறார்களின் நலன்கள் குறித்தும் கவனம் செலுத்தத் தவறவில்லை என்பதை இத்திட்டத்தின் ஊடாக நாட்டுக்கு எடுத்துக் கூறியுள்ளது. அதேநேரம் கர்ப்பிணித் தாய்மாரின் போஷாக்கு உணவுக்காக பத்து மாதங்களுக்கு 20 ஆயிரம் ரூபா தற்போது வழங்கப்படுகிறது. இத்தொகையை ரூ 250.00 ஆல் மேலும் அதிகரிகரித்து வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கின்றன.

இவ்வாறு வளரிளம் சிறார்களின் போஷாக்கு மேம்பாடு தொடர்பில் விஷேட கவனம் செலுத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்ற போதிலும், பெற்றோரும் உறவினர்களும் தம் பிள்ளைகளின் போஷாக்கு குறித்து கூடுதல் கவனம் செலுத்தத் தவறக்கூடாது. அதனைத் தம் பொறுப்பாகக் கருத வேண்டும். அதுவே முன்பள்ளி சிறார்களின் நலன்கள் குறித்து அக்கறை கொள்ளும் பெரும்பாலான ஆர்வலர்களின் கருத்தாகும்.

editor.tkn@lakehouse.lk

**உலக குடியிருப்பு தினம்:**

# ஜனாதிபதியின் பங்கேற்புடன் இன்று அலரிமாளிகையில் பிரதான வைபவம்

உலக குடியிருப்பு தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதத்தின் முதலாவது திங்கட்கிழமையில் உலகநாடுகளில் கொண்டாடப்படுகின்றது. இலங்கையில் உலக குடியிருப்பு தினம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பங்குபற்றுதலுடன் இன்று கொண்டாடப்படுகின்றது. நகர அபிவிருத்தி மற்றம் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, வீடமைப்பு இராஜாங்க அமைச்சர் தேனுக விதானகமகே ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்கின்றனர்.

அலரிமாளிகையில் உள்ள கூட்ட மண்டபத்தில் வைத்து பல்வேறு நிகழ்வுகள் இன்று நடைபெறுகின்றன. வீடமைப்பு நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை, நகர குடியிருப்பு நிறுவனம் ஆகியன இணைந்து நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்கு செய்துள்ளன.

உலக குடியிருப்பு தினம் பற்றி பாடசாலை மாணவ, மாணவியருக்கிடையே நடத்தப்பட்ட சித்திரம் வரைதல், கட்டுரைப் போட்டிகளில் முறையே முதலாம், இரண்டாம் மூன்றாம் இடங்களில் வெற்றி பெற்றவர்களுக்கு பணப்பரிசில்களும் சான்றிதழ்கள் மற்றும் விருதுகளும் அதிதிகளினால் வழங்கி வைக்கப்படும்.

அத்துடன் தேசிய வீடமைப்ப அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள வீடமைப்புத் திட்டங்களில் வாழும் சில குடும்பங்களுக்கான வீட்டுரிமைப் பத்திரங்களும் இத்தினத்தில் வழங்கி வைக்கப்படுகின்றன.

உலக குடியிருப்பு தினம் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு இந்த வருடத்துடன் 36 வருடங்கள் நிறைவடைகின்றது. வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு இவ்வருடத்தின் குடியிருப்பு தினத்தை 'பாரபட்சம் காட்டாதிருப்போம். யாரையும் எந்த இடத்தையும் கைவிடாது பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளில் கொண்டாடுகின்றது.




வாழ்க்கைக்குப் பொருத்த மற்ற வீடுகளில் வாழுகின்ற மக்களின் வீட்டுத் தேவையையும் அதனோடு தொடர்புடைய சுற்றாடல் பிரச்சினைகளையும் கருத்திற்கொண்டு அவற்றைத் தீர்த்து வைப்பதற்கானதொரு சந்தர்ப்பத்தினை வழங்குவதே உலக குடியிருப்பு தினத்தின் நோக்கமாகும்.

தற்காலகட்டத்தில் சனத்தொகை இரட்டிப்பாக அதிகரித்துள்ளதால் உலக நாடுகளில் உள்ள இயற்கையான காடுகள், இயற்கை வளங்கள் அழிக்கப்பட்டு அங்கு மனிதன் குடியிருப்புக்களை அமைத்துக் கொள்கின்றான். நகரமயமாக்குதலினால் கிராமத்திலிருந்து நகரத்தை நோக்கி மக்கள் படையெடுக்கின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் இயங்குகின்ற ஹெபிடாட் இது விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தி செயற்படுகின்றது.

உலகில் உள்ள எந்தவொரு அபிவிருத்தியடைந்த அல்லது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலோ தத்தமது நாட்டில் வாழும் சனத்தொகைக்கேற்ப வீடமைப்புத் திட்டங்களை பூர்த்தி செய்த அல்லது வீட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் கண்ட நாடுகள் இதுவரையும் ஒன்றுமே இல்லை என ஐக்கிய நாடுகள் உலக குடியிருப்பு அமையம் அன்மையில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொழும்பு மாவட்டத்தில் மட்டும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான குடும்பங்கள் வீடில்லாது வாழ்ந்து வருகின்றன. கொழும்பில் சாதாரனமாக 4 பேர் கொண்ட குடும்பம் ஒன்று வாழ்வதற்கு மாதமொன்றுக்கு வீட்டு வாடகையாக 30 ஆயிரம் முதல் 50ஆயிரம் ரூபா வரையில் உள்ளது. அவர்கள் தங்களது மாதாந்தம் பெரும் சம்பளத்தினை வீட்டு வாடகைக்கே செலுத்த வேண்டியுள்ளது. இதனால் அவர்கள் தங்களது பிள்ளைகளின் கல்வி மற்றும் வாழ்க்கைச் செலவுகளுக்கு பணமின்றி திண்டாடுகின்றனர்.

கொழும்பில் நகர அபிவிருத்தி அதிகார சபை கடந்த 10 வருடங்களாக தொடர்மாடி வீடுகளை நிர்மாணித்து வருகின்றது.

**தெஹிவளை, கல்கிசை விசேட நிருபர்**

# தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவினால் யாழ் மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல்

உலகளாவிய தகவல் அணுகலுக்கான சர்வதேச தினத்தை முன்னிட்டு, இலங்கையின் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு கடந்த செப்டம்பர் 28, 29 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம், முல்லைத் தீவு மற்றும் கிளிநொச்சி பத்திரிகைக் கழகங்கள் மற்றும் வடமாகாண கல்வியாளர்களுடன் இணைந்து தொடர் கலந்துரையாடலை நடத்தியது.

யாழ் மாவட்ட செயலகத்தில் RTI ஆணைக்குழு மற்றும் மாவட்ட செயலாளர் மகேசன் தலைமையில் வடமாகாண பிரதேச செயலகங்கள், அரச அதிகாரிகள் மற்றும் சமூகத்தினருடன் இணைந்து கடந்த ஐந்து வருடங்களாக RTI சட்டத்தை அமுல்படுத்துவதில் ஏற்பட்ட வெற்றிகள் மற்றும் சவால்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

தகவலுக்கான உரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட ஆணைகள், நிலவிவகாரங்கள், பொதுநிதி முகாமைத்துவம் தொடர்பான நிர்வாகப் பிரச்சினைகள், ஊழல்களை வெளிப்படுத்துவதில் அரச நிறுவனங்களின் முறையான தொழிற்பாடு போன்ற பல்வேறு வழக்குகளில் தகவல்களை வெளியிடுவதற்கு வழிவகுத்தது. கூட்டத்தில் பேசிய சமூகப் பிரதிநிதிகள், தகவல் கோரிக்கையை செயல்படுத்தும் வகையில் பகிரங்க அதிகார சபை இன்னும் திறமையாக செயல்பட வேண்டியதன் அவசியத்தை சுட்டிக்காட்டினர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தும் போது, சில பகிரங்க அதிகார சபைகளால் ஊக்கமளிக்கப்படாத நிகழ்வுகளையும் அவர்கள் எடுத்துரைத்தனர்.

உரிய கால வரையறையினுள் பகிரங்க அதிகார சபை தகவல்களை வழங்குவதன் முக்கியத்துவத்தை ஆணைக்குழு வலியுறுத்துகிறது. மேலும் காலவரையறையினை புறக்கணித்தால் அல்லது ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு கீழ்ப்படியவில்லை என்றால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறியது.





29ஆம் திகதி, வடமாகாண பத்திரிகை ஆசிரியர்கள், இதழாசிரியர் தலைவர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுடன் விரிவான கலந்துரையாடல் இடம்பெற்றது. அதிக எண்ணிக்கையிலான வழக்குகளில் தகவல்களை வெளியிடும் ஆணைக்குழுவின் பணியைப் பாராட்டினாலும், பகிரங்க அதிகார சபையின் தகவல் கோரிக்கையை புறக்கணிக்கும் போக்கு தொடர்ந்தால், தகவல் அறியும் சட்டம் குடிமக்களுக்கு சிறியளவிலேயே பயன்படும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதற்கான அனைத்து குறிப்பிட்ட நிகழ்வுகளும் ஆணைக்குழுவின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று பதிலளித்த ஆணைக்குழு, மேலும் அத்தகைய விடயங்களைஆணைக்குழு விசாரணை செய்யும் என்று கூறியது. கொவிட் 19 தொற்று மற்றும் நிதி நெருக்கடியால் ஏற்பட்ட அனைத்து சிரமங்களையும் பொருட்படுத்தாமல், வடமாகாணத்தில் உள்ள குடிமக்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை தீவிரமாகப் பயன்படுத்துவதைக் கண்டு ஆணைக்குழு மகிழ்ச்சியடைகிறது.

சட்டத்தின் இடைவெளி காரணமாக, ஆணைக்குழுவால் நாடளாவிய ரீதியில் மாகாண அலுவலகங்களை அமைக்க முடியாவிட்டாலும், நாடளாவிய ரீதியில் மாகாண அமர்வுகளை தொடர்ந்து நடத்துவதற்கு ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

உண்மையில், இது கடந்த எட்டு மாதங்களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மூன்றாவது அமர்வு ஆகும். வருங்காலத்தில் இதுபோன்ற செயல்பாடுகளை அதிகரிக்க ஆணைக்குழு எதிர்பார்க்கின்றது, மேலும் RTI சட்டத்தைப் பயன்படுத்துவதில் குடிமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைக்க மின்னஞ்சல் மூலம் முறையீடுகளை ஏற்றுக்கொண்டு, Zoom தொழில்நுட்பத்தின் மூலம் கொழும்பில் அதன் வழக்கமான மேன்முறையீட்டு அமர்வுகளை நடத்தியும் வருகின்றது.

# மூதூரில் க.பொ.த உயர் தரத்தில் பல்கலைக்கழக தகைமை பெற்ற மாணவர்களுக்கு வழிகாட்டல்

அண்மையில் வெளியான க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் பல்கலைக்கழகத்திற்கு தகைமை பெற்றுள்ள மற்றும் போதிய வெட்டுப் புள்ளிகளை பெறாத மாணவர்களுக்குமான வழிகாட்டல் கருத்தரங்கு மூதூரில் நடத்தப்பட்டது.

மூதூர் அப்ரார் சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் மூதூர் அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் அனுசரணையுடன் நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷேஹ். எம்.எம். மனாஸீர் (நத்வி) தலைமையில் மூதூர் பெரல்கிரேன்ட் மண்டபத்தில் அண்மையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

க.பொ.த உயர்தர மாணவர்களின் பல்கலைக்கழக தகுதிக்கான நுழைவுகளின் அடிப்படையில் பல்துறை சார்ந்த பிரிவுகளுக்குமாக மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்கு பயிலச் செல்கின்றர். இந்நிலையில் தேவையான வழிகாட்டல், ஆலோசனைகளை மாணவர்கள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக இவ்வேற்பாடு செய்யப்பட்டு இருந்தது.



இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எப்.எச்.ஏ. சிப்லி விளக்கம் அளித்தார். கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் விஞ்ஞானம் உள்ளிட்ட பல துறைகளுக்குமாக மாணவர்கள் பல்கலைக்கழங்களுக்கு உயர் கல்வி பயில்வதற்காக செல்கின்றனர். இந்நிலையில் மாணவர்கள் அதன் ஊடாக பெற்றுக் கொள்ளும் உயர்கல்வி, தொழில் வாய்ப்பு, அதனை வெற்றிகொள்ளும் ஏனைய வழிகள் குறித்து மாணவர்களுக்கு கலாநிதி சிப்லியினால் சிறப்பாக விளக்கம் அளிக்கப்பட்டது.

போதிய வெட்டுப் புள்ளிகளை பெறாத காரணத்தினால் பல்கலைக்கழ பிரவேச சந்தர்ப்பத்தை மாணவர்கள் இழந்தாலும், பல்வேறு வகையான உயர் கற்கைகளையும், தொழில் கற்கைகளையும் அறிந்து கற்றுக்கொள்ள வேண்டும். இவற்றையும் எவ்வாறு வெற்றி கொள்வது என்பது பற்றியும் விளக்கப்பட்டது.

மேலும் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்ட பல ஐயங்களுக்குமான கேள்விகளுக்கும் தெளிவான பதில்களும் கூறப்பட்டன.

மூதூர் அப்ரார் சமூக அபிவிருத்தி நிறுவனத்தினர் இனமத வேறுபாடுகளுக்கு அப்பால் பல்வேறு பொது சமூகப் பணிகளை மூதூர் பிரதேசத்தில் ஆற்றி வருகின்றனர்.

இதேபோல் எதிர்கால மாணவர் சமூகம் உயர்கல்வி தொடர்பான திட்டமிடலையும் தெளிவாக அறிந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதில் ஆர்வம் காட்டி வழங்கப்பட்ட இப்பணி பாராட்டத்தக்கது.

முஸ்லிம், தமிழ் மாணவர்கள் உட்பட 200 இற்கும் அதிகமான மாணவர்கள் கலாநிதி எப்.எச்.ஏ. சிப்லி மூலமாக பெற்றுக் கொண்ட உயர்கல்வி வழிகாட்டலினால் பயனடைந்தனர். மாணவர்கள் அதனை பெரிதும் பாராட்டியதுடன் இதனை ஏற்பாடு செய்த ஏற்பாட்டுக் குழுவினருக்கும் நன்றி தெரிவித்தனர்.

**எஸ்.கஸ்ஸாலி**
மூதூர் தினகரன் நிருபர்

# இராவணனும், சிவவழிபாடும் இலங்கையில் இருந்ததில்லையென்று நான் கூறவேயில்லை!

'இராவணன் என்ற அரசன் இருந்ததில்லை என்றோ, இலங்கையில் சிவ வழிபாடு இருந்ததில்லை என்றோ எந்தவொரு இடத்திலும் எதனையும் நான் ஒருபோதும் கூறவில்லை' என்று முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர எம்.பி நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

'இராவணன் (இராவணேஸ்வரன் அல்ல) என்று அழைக்கப்படும் ஒரு மன்னன் இலங்கையில் ஆட்சி செய்தவர் என்று நான் உறுதியாக நம்புகிறேன். புராணக்கதைகளின்படி, அவர் இந்தியாவில் சீதையை (இராமரின் மனைவி) கடத்தி, தனது புகழ்பெற்ற யந்திரயாவில் (மயில் விமானம்) இலங்கைக்கு அழைத்து வந்தார். இராவணன் இந்து வரலாற்று நூலான இராமாயணத்தின் முக்கிய எதிரியாக குறிப்பிடப்படுகின்றார்' என்றும் சரத் வீரசேகர எம்.பி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்தின் கடைகளை குத்தகைக்கு வழங்கும் விடயத்தில் இழுபறிநிலைமை ஏற்பட்டுள்ளது. குறித்த கடைகளை பெரும்பான்மையின வியாபாரிகளுக்கு வழங்குவதற்கு தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில், அது தொடர்பில் கடந்த செப்டம்பர் 22 ஆம் திகதி சரத் வீரசேகர எம்.பி உரையொன்றை ஆற்றியிருந்தார்.

அவர் தனது உரையில் இலங்கையில் இராவணேஸ்வரன் என்ற அரசர் இருந்ததில்லை என்னும் கருத்தொன்றினையும் பதிவு செய்திருந்தார். அக்கருத்து தொடர்பாக தமிழ் சமூக ஆர்வலர்கள் மற்றும் அமைப்புகள் தரப்பிலிருந்து எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பாக சரத் வீரசேகர எம்.பி நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'சமூக நல்லிணக்கத்திற்கான தேசிய அமைப்பு' என்ற அமைப்பின் செயற்பாட்டாளர் வினோத் பாலச்சந்திரன் ஊடகங்களுக்கு தமது அமைப்பின் ஊடக அறிக்கையொன்றினை வழங்கியிருந்தார்.

குறித்த ஊடக அறிக்கையில் இராவணன் என்ற அரசன் இல்லை என்றும், இலங்கையில் சிவ வழிபாடு இல்லை என்றும் நான் கூறியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

> ‘எனது பாராளுமன்ற உரையை 'சமூக நல்லிணக்கத்திற்கான தேசிய அமைப்பு' செயற்பாட்டாளர் வினோத் பாலச்சந்திரன் முழுமையாக கேட்பது அவசியம்’

செப்டெம்பர் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையை கவனமாகக் கேட்குமாறு சமூக நல்லிணக்கத்திற்கான தேசிய அமைப்பினரையும், அதன் செயற்பாட்டாளர் பாலச்சந்திரனையும் கேட்டுக் கொள்கிறேன். எனது உரையில் எந்தவொரு இடத்திலும் இராவணன் என்றழைக்கப்படும் அரசன் இல்லை என்றோ சிவவழிபாடு சம்பந்தமாக எதனையுமோ நான் ஒருபோதும் கூறவில்லை. இராவணேஸ்வரன் என்று ஒரு அரசன் இருந்ததில்லை என்றே கூறியுள்ளேன்.

பாலச்சந்திரன் என்னை இனவாதி என்று கூறி, சிறுபிள்ளைத்தனமாக இராவணன் உண்மையில் இருந்தான் என்பதை ஆவணங்களில் உள்ள பல்வேறு புத்தகங்களைக் குறிப்பிட்டு நிரூபித்துக் காட்டுகிறார். இராவணன் என்று ஒரு மன்னன் இல்லை என்று நான் ஒருபோதும் குறிப்பிடாமையினால், அவருடைய முழு அறிக்கையும் அர்த்தமற்றதாகிறது.



இராவணன் (இராவணேஸ்வரன் அல்ல) என்று அழைக்கப்படும் ஒரு மன்னன் இலங்கையில் ஆட்சி செய்தவர் என்று நான் உறுதியாக நம்புகிறேன். 'ரா' என்றால் சூரியன் மற்றும் வன என்றால் வன்ஷயா அல்லது பழங்குடி என்று அர்த்தமாகும். எனவே இராவணன் என்றால் 'சூரியனின் பழங்குடி' என்று பொருள். அவர் எல்லாத் திறமைகளிலும் கலைகளிலும் வல்லவராக இருந்தார். மன்னன் இராவணன் எப்போதும் இராவணன் என்றே அழைக்கப்படுகிறார், இராவணேஸ்வரன் என்று அல்ல.

பாலச்சந்திரன், சமூக நல்லிணக்கத்தில் உண்மையாக அக்கறை கொண்டவராக இருந்தால், கண்ணியமான, அமைதியை விரும்பும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதைத் தவிர்க்குமாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை (பெரும்பாலும் TNA மற்றும் ACTC) கேட்டுக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தமிழ் எம்.பி ஒருவர் இராவணேஸ்வரனைக் குறிப்பிட்டு தனது இனவாதச் செயலை நியாயப்படுத்த முயன்றார். அதனால்தான் அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை என்றேன்.

முல்லைத்தீவு குருந்து விகாரையில், தொல்பொருள் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்ட 2000 வருடங்கள் பழைமையான தூபி உள்ளது. புத்தரின் திருவுருவங்களை அதில் வைப்பதற்கு சமய வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களின் குண்டர் குழுக்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. மேலும் தூபிக்கு ஒரு மலர் கூட வைக்க முடியாமல் தலைமைப் பீடாதிபதிகளும் மகாசங்கத்தினரும் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்பும் இதே குண்டர்கள் குழுக்கள் அதிகாரபூர்வமான இடத்தை ஆய்வு செய்வதற்கு வருகை தந்த குழுவைத் தாக்கி விரட்டியடித்தனர்.

போரின் உச்சக்கட்டத்தில் அம்பாறை கோணகலையில் கருவுற்றிருந்த சிங்கள தாய்மார்களைக் கூட பயங்கரவாதிகள் கொன்று குவித்த போது, கொழும்பில் வீதிகளில் 'இந்து வேல்விழா' ஊர்வலம் நடத்துவதற்கு சிங்களவர்கள் ஒருபோதும் இடையூறு செய்யவில்லை என்பதை பாலச்சந்திரனுக்கு ஞாபகப்படுத்த வேண்டும். அப்படித்தான் ஏனைய மதங்களை நாங்கள் மதிக்கிறோம்.

திருகோணமலையில் கோணேஸ்வரர் கோயிலுக்குச் செல்லும் வீதியில் 60 பெட்டிக்கடைகளில் சிங்களவர்களே அதிகம் காணப்படுகின்றனர். தினமும் ஏராளமான உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் கோயிலுக்கு வந்து செல்கின்றனர். குறித்த பெட்டிக்கடைகள் பொலித்தீன் மற்றும் மரத்துண்டுகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதனால் கடலின் அழகு பார்வைக்கு இடையூறாக உள்ளது. இதனை மறுபுறம் மாற்றி புதிய ஒரு ஒழுங்கில் நிர்மாணிப்பதற்கு ஆளுநர் முடிவு செய்துள்ளார்.

## உறுதியாகக் கூறுகின்றார் சரத் வீரசேகர எம்.பி

குறித்த கடைகளை அதே நபர்களுக்கு கொடுக்க திருக்கோணஸ்வர கோயில் குழு உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் அனுமதி வழங்கியபோதும், தமிழ்த் தரப்பு எம்.பி.க்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து அங்குள்ள அனைத்து சிங்களவர்களின் கடைகளையும் அகற்றுவதற்கு முயற்சித்துள்ளனர். தங்கள் வாதத்தை நியாயப்படுத்த இராவணேஸ்வரன் என்ற அரசனைக் குறிப்பிட்டார்கள்.

பாலச்சந்திரன் உண்மையில் சமூக நல்லிணக்கத்தில் அக்கறை கொண்டிருந்தால், என்னை இனவாதி என்று கூறும் முன், அது தொடர்பாக நான் பாராளுமன்றத்தில் ஆற்றிய அனைத்து உரைகளையும் முழுமையாக கேட்குமாறு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

பாலச்சந்திரனின் தகவலுக்கு இன்னுமொன்றினை கூறிக்கொள்கின்றேன். நான் கடற்படையில் பணியிலிருந்த காலத்தில் வடக்கு, கிழக்கில் பல வருடங்கள் கடமையாற்றியுள்ளேன் என்று கூறுவதை பொருமையாகக் கருதுகிறேன். நானும் சிங்கள பௌத்த சகாக்களும் பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு இரத்த தானம் செய்துள்ளோம். அப்படியானால் யார் உண்மையான இனவாதிகள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

புலிகளால் மனிதக் கேடயமாக வைக்கப்பட்டிருந்த 2,95,000 தமிழ் மக்களை மீட்டு போரில் வெற்றி பெற்றோம். அந்தப் பணியில் ஈடுபட்ட பல சிங்களப் படையினர் தம் உயிரைத் தியாகம் செய்தனர். பாலச்சந்திரனின் கூற்றுப்படி இனவாதிகளாகிய நாங்கள் அதைச் செய்யும் போது, 'சமூக நல்லிணக்கத்திற்காக தமிழர்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதை நிறுத்துங்கள் அல்லது இராணுவத்தை நோக்கி தப்பிச் செல்ல முயன்றவர்களைக் கொல்வதை நிறுத்துங்கள் என்று புலிகளிடம் வேண்டுகோள் விடுத்திருந்தால் சிறப்பானதாக இருந்திருக்கும் .

தமிழர்களுக்கு வீடுகள் கட்டுவதற்காக 4,95,000 ஆயிரம் கண்ணிவெடிகளை அகற்றிய போது, பாலச்சந்திரனோ அல்லது எந்த ஒரு தமிழ் எம்.பியோ வந்து தமிழ் சகோதரர்களுக்காக உயிரை பணயம் வைக்கும் இராணுவ வீரருக்கு ஒரு தேநீரையாவது வழங்கியதை நான் காணவில்லை.

இராணுவ வீரர்களாகிய நாம் எமது தனி மனிதர்களின் பணத்தைப் பயன்படுத்தி வடக்கில் தமிழர்களுக்காக சுமார் 8000 வீடுகளைக் கட்டிக்கொடுத்த போது, பாலச்சந்திரனோ அல்லது எந்தவொரு தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினருமோ அந்தத் திட்டத்திற்கு ஒரு கூரை ஓடு கூட நன்கொடையாக வழங்கியதை நான் கவனித்ததில்லை.

நீண்ட காலத்துக்கு முன்னர், நான் காரைநகர் கடற்படை முகாமில் கட்டளை அதிகாரியாக கடமையாற்றிய போது, தீவில் உள்ள அனைவராலும் நேசிக்கப்பட்ட ஒருவராக இருந்தேன். மேலும் என்னை தொடர்ந்து கட்டளை அதிகாரியாக பணியாற்ற அனுமதிக்குமாறு காரைநகர் மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை ஒன்றினையும் விடுத்தனர். இவ்வாறு பணியாற்றிய என்னை நோக்கி பாலச்சந்திரன் போன்றவர்கள் என்னை இனவாதி என்று கூறுவது வேடிக்கையாகவுள்ளது.

இவ்வாறு சரத் வீரசேகர எம்.பி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

றிசாத் ஏ காதர் ...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

## கிழக்கின் குரல்

# காத்தான்குடி பள்ளிவாசல்களுக்கு இந்திய தூதுவர் கோபால்பாக்லே விஜயம்

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

காத்தான்குடி பத்ரிய்யாஹ் ஜும்ஆப்பள்ளிவாசல், முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பெரிய பள்ளிவாசல்களுக்கு நேற்றுமுன்தினம் (01) சனிக்கிழமை இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே விஜயம் செய்தார்.

முதலில் காத்தான்குடிபத்ரிய்யாஹ் ஜும்ஆப்பள்ளிவாசலுக்கு விஜயம் செய்த தூதுவருக்கு அப்துல் ஜவாத் ஆலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தினால் வரவேற்பளிக்கப்பட்டது.ரபான் அடித்து தூதுவர் வரவேற்கப்பட்டார்

அப்துல் ஜவாத் ஆலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் தலைவர் மௌலவி ஏ.ஜே. அப்துர் ரஊப் மிஸ்பாஹி தலைமையிலான முக்கியஸ்தர்கள் இந்திய தூதுவரை வரவேற்றனர்,பின்னர், பள்ளிவாசல் வளாகத்தில் அடக்கம் செய்யப்பட்டுள்ள அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் அவர்களின் அடக்கஸ்தலத்துக்கு போர்வை போர்த்திய தூதுவர் பிராத்தனையிலும் ஈடுபட்டார்.

இதையடுத்து, இலங்கை, இந்திய ஸுபி நட்புறவு ஒன்றிய அலுவலகத்தை திறந்து வைத்த இந்திய தூதுவர், அதன் நினைவுப் பலகையையும் திரை நீக்கம் செய்து வைத்தார்.

இந்நிகழ்வில், காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய சிறீதர், காத்தான்குடி நகரசபை பிரதி தவிசாளர் எம்.ஐ.எம்.ஜெசீம் உட்பட அப்துல் ஜவாத் ஆலீம் வலியுல்லாஹ் நம்பிக்கை பொறுப்பு நிறுவனத்தின் முக்கியஸ்தர்கள், உலமாக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். பள்ளிவாசலை முழுமையாக பார்வையிட்ட பின்னர் தூதுவருக்கு இங்கு நினைவுச் சின்னம் ஒன்றும் வழங்கப்பட்டது.





இதன் பின்னர் காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப்பள்ளிவாசலுக்கும் இந்திய தூதுவர் விஜயம் செய்தார்.அங்கு,தலைவர் ரஊப் ஏ மஜீத் தலைமையில் பள்ளிவாசல் நிர்வாகிகள் அவரை வரவேற்றனர்.

இவ்வைபவத்தில், காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத் தலைவர் மௌலவி எம்.ஐஆதம்லெவ்வை, காத்தான்குடி ஜம்இய்யத்துல் உலமா சபை தலைவர் மௌலவி ஏ.எஸ். எம்.ஹாறூன், சம்மேளன செயலாளர் மௌலவி ரமீஸ், காத்தான்குடி நகர சபை செயலாளர் திருமதி ரிப்கா ஷபீன் உட்பட உலமாசபை மற்றும் சம்மேளன பிரதிநிதிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# இடமாற்ற சபையின் சிபார்சு பட்டியல் மேன்முறையீடு செய்ய காலஅவகாசம்

(ஒலுவில் விஷேட நிருபர்)

வருடாந்த இடமாற்றம் (2023) வழங்குவது தொடர்பில் கோரப்பட்ட விண்ணப்பங்களுக்கு, இடமாற்ற சபையால் சிபார்சு செய்யப்பட்டது பட்டியல் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளதாக கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளர் (நிருவாகம்) ஏ. மன்சூர் தெரிவித்தார்.இது தொடர்பில் மேன்முறையீடுகளை செய்ய விரும்புவோர்

இம்மாதம் (13) திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

மேன்மறையீடுகள் தொடர்பான இறுதித் தீர்மானங்கள் அனைத்தும் அறியத்தரப்படுமெனவும், இவ்விடமாற்றம் (2023,01,02) முதல் நடைமுறைக்கு வரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கால தாமதமாக கிடைக்கப்பெறும் மேன்முறையீடுகள் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொவிட்19 தொற்று காரணமாக 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவில்லை.

அத்துடன் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் (அதி சிறப்பு) பதவிக்கான இடமாற்றப்பட்டியல் விபரங்கள் விரைவில் வெளியிடப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பான விபரமடங்கிய சுற்றுநிருபம் கிழக்கு மாகாணத்திலுள்ள சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், பிரதிப் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில், ஒரு நிலையத்தில் தொடர்ச்சியாக பல வருடங்களாக சேவையாற்றும் அரச முகாமைத்துவ உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகஸ்தர், மொழி பெயர்ப்பாளர், சாரதியர், அலுவலகப் பணியாளர், தொழில்நுட்ப உத்தியோகஸ்தர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் ஆகியோர் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

2023ம் ஆண்டுக்கான வருடாந்த இடமாற்றத்தை சிறப்பாக நடைமுறைப்படுத்த ஒத்துழைக்குமாறும், இடமாற்றம் வழங்கப்பட்ட அலுவலகர்கள் புதிய சேவை நிலையத்தில் உரிய திகதியில் கடமையை பொறுப்பேற்கும் வண்ணம் விடுவிக்க நடவடிக்கை எடுக்கும்படியும் திணைக்கள தலைவர்களை அவர் கேட்டுள்ளார்.

# பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய தீமிதிப்பு வைபவம்

(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

கிழக்கில் 600 வருடங்கள் பழமை வாய்ந்த பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த தீமிதிப்பு வைபவம் எதிர்வரும் (07) வெள்ளிக்கிழமை மாலை நடைபெறவுள்ளது.

பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயமானது மகாபாரத இதிகாச கதையை நினைவு கூரும் முகமாக 18 தினங்கள் உற்சவம் நடைபெறுவது வழக்கமாகும். கடந்த செப்டெம்பர் (20) திருக்கதவு திறத்தல், பூர்வாங்க கிரியைகள், ஊர்க்காவல் பண்ணல், கொடியேற்றம் ஆகியவற்றுடன் இந்த உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றது.

இவ்வாலய உற்சவத்தின் முக்கிய திருவிழாக்களான பாண்டவர்கள், ஸ்ரீ கிருஸ்ணர், திரௌபதை, தேவாதிகள் சகிதம் வனவாசம் செல்லல்,(05) புதன்கிழமையும் அருச்சுனன் பாசுபதம் பெறுவதற்காக தவநிலை செல்லல், (06) வியாழக்கிழமை நள்ளிரவும், வெள்ளிக்கிழமை (07) மாலை 5 மணிக்கு தீப்பள்ளயத்தின் சிகரம் என மதிக்கப்படும் தீ மிதிப்பு வைபவமும் நடைபெறும். மறுநாள் (08) தருமருக்கு முடி சூட்டும் நிகழ்வு, தீக்குழிக்கு பால்வார்க்கும் சடங்கு, அம்மன் முத்துச்சப்புறத்தில் எழுந்தருளி ஊர்வலம் செல்லல் ஆகியவற்றுடன் உற்சவம் நிறைவு பெறவுள்ளது.

நாட்டின் நாலாபாகங்களிலிருந்தும் அதிகளவிலான பக்தர்கள் பாண்டிருப்பு திரௌபதை அம்மன் ஆலயத்திற்கு வருகைதருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.









கிழக்கு மகாண தமிழ்த்தின போட்டிகள் இம்முறை மட்டக்களப்பு சிசிலியா பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையில் நடைபெற்றன.நேற்று (02) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இப்போட்டிகளில்,மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி நகுலேஸ்வரி புள்ள நாயகம் மற்றும் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் உட்பட உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.இவர்கள் வரவேற்கப்படுவதையும், அரங்கத்தில் இடம்பெற்ற கலை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஆரையம்பதி தினகரன் நிருபர்)

## 38 உள்ளூர் சுற்றுலா... (03 ஆம் பக்கத் தொடர்)

அவர்கள் 38 பேரும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கடற்படையினர் உடனடியாக செயல்பட்டதையடுத்து வட மேற்கு கடற்படை பிரிவின் இரு படகுகளும் கடலோர பாதுகாப்பு படையின் கண்காணிப்பு படகு ஒன்றும் சம்பவ இடத்திற்கு உடனடியாக சென்றுள்ள நிலையில் உள்ளூர் சுற்றுலா பயணிகள் 38 பேரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக கடற் படையினர் தெரிவித்துள்ளனர். அதன் போது படகில் 32 ஆண்களும் ஆறு பெண்களும் இருந்துள்ளதாகவும் அவர்கள் கற்பிட்டி துறைமுகத்திற்கு பாதுகாப்பாக அழைத்து வரப்பட்டதாகவும் கடற்படை ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## இலங்கை மத்திய... (03 ஆம் பக்கத் தொடர்)

அத்துடன், நேற்று முதல் சிரேஷ்ட பிரஜைகளுக்கான விசேட நிலுவை வைப்பு மற்றும் புதுப்பித்தல் செயல்பாடுகளை ஏற்றுக்கொள்ள வேண்டாம் எனவும் வர்த்தக வங்கிகள் பணிக்கப்பட்டுள்ளன.

முன்னதாக நிலையான வைப்பாளர்களுக்கு 14.5 சதவீதமான வட்டி வழங்கப்பட்டுள்ள நிலையில் 60 வயதிற்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு 15 சத வீத வட்டி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சொகுசு காரில்... (03 ஆம் பக்கத் தொடர்)

ஆறு கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

சில பைகளில் பொதிகளாக்கப்பட்டு மிக இலாவகமாக இந்த ஹெரோயின் போதைப் பொருள் கடத்தப்பட்டுள்ளதாகவும் காரை நிறுத்தி பைகளை இறக்கி சோதனை செய்து கொண்டிருந்த போது குறித்த கார் தப்பிச்சென்றுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பாணந்துறை பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவரைத் தேடி கைது செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## பரீட்சைகளில் சித்தி... (03 ஆம் பக்கத் தொடர்)

உள்ள தொழில் வாய்ப்புகளுக்கு பொருத்தமான கல்வியாளர்கள் உருவாகாமையே. அதே வேளை இருக்கும் கற்றவர்களுக்கு வழங்குவதற்கும் தொழில்கள் இல்லாதுள்ளது. இந்த இடைவெளி காரணமாக நாட்டில் பெரும்பாலானோர் பயிற்சியற்றவர்களாக அமைந்து விட்டனர்.நான் கல்வியமைச்சராக பதவி வகித்தபோது உயர்கல்வியில் தொழில் நுட்ப பாட நெறியை கொண்டு வந்து அதன் மூலம் உலகிற்கு பொருத்தமான அறிவை பெற்றுக் கொடுப்பதை இலக்காகக் கொண்டிருந்தேன். இப்போது உயர் தர மாணவர்கள் மத்தியில் முக்கியமான பாடமாக தொழில்நுட்பம் அமைந்துள்ளது.

## மந்தபோஷணை செய்திகள்...

எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உணவில் ஏற்பட்ட மாற்றங்களால், நாட்டு மக்களின் ஊட்டச்சத்து நிலை வீழ்ச்சியடைந்து, அதிக ஊட்டச்சத்து குறைபாடு திடீரென உருவானது என்பதை நம்ப முடியாது என்றும் 85 சதவீத மந்தபோசணை குறைபாடு பற்றிய கதைகள் அப்பட்டமான பொய் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## டீசலின் விலையையும்...

தெரிவித்துள்ளது. நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பெற்றோலின் விலை குறைக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க ஒக்டேன் 92 ரக பெட்ரோல் ஒரு லீட்டரின் விலை 40 ரூபாவால் குறைவடைந்துள்ளதுடன் ஒக்டேன் 95 ரக பெட்ரோல் ஒரு லீட்டரின் விலை 30 ரூபா வால் குறைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே டீசலின் விலையையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என பஸ் உரிமையாளர் சங்கம் அரசாங்கத்தை கேட்டுக் கொண்டுள்ளது.

எவ்வாறெனினும் பெட்ரோல் விலைகள் குறைவடைந்தாலும் முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை உடனடியாக குறைக்க முடியாது என முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## இந்தோனேஷிய....

அரேமா மற்றும் பெர்செபயா சுரபயா ஆகிய அணிகள் மோதின.

இப்போட்டியின் போது வன்முறை வெடித்தது. இப்போட்டியில் அரேமா அணி 23 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தது. சொந்த மண்ணில் தங்கள் அணி தோல்வியடைந்ததை தாங்கிக்கொள்ள முடியாத அரேமா அணியின் தீவிர ரசிகர்கள், கடும் கோபமடைந்துள்ளனர்.

கால்பந்து போட்டியில் தங்கள் அணி தோல்வியடைந்ததையடுத்து ஆயிரக்கணக்கான ரசிகர்கள் ஆடுகளத்திற்கு சென்றுள்ளனர். அப்போது களத்தில் இருந்த பல அரேமா வீரர்கள் தாக்கப்பட்டுள்ளனர்.

இதை கட்டுப்படுத்த மக்கள் கூட்டத்தின் மீது பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியதை அடுத்து அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டுள்ளது. கலவரம் மற்றும் கூட்ட நெரிசலில் சிக்கி பலர் படுகாயமடைந்துள்ளனர். சுமார் 180 பேர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

பாதிக்கப்பட்டவர்களில் பலர் அதிக நெரிசல் மற்றும் மூச்சுத் திணறல் ஆகியவற்றால் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் என்று நேரில் பார்த்தவர்கள் கூறியுள்ளனர்.

உயிரிழந்தவர்களில் 2 பேர் பொலிஸ் அதிகாரிகள். 34 பேர் மைதானத்திற்குள் உயிரிழந்துள்ளனர். மீதமுள்ளவர்கள் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர். இதனால் அப்பகுதியில் பெரும் பதற்றம் நிலவியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## அரச ஊழியர்களது...

அரசாங்க ஊழியர்களின் அடுத்த மாத சம்பளம் குறைக்கப்பட உள்ளதாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்கள் மற்றும் செய்திகளில் எந்தவித உண்மையும் கிடையாது என தெரிவித்துள்ள அவர் அத்தகைய கூற்றை முற்றாக மறுப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டு மக்களை தூண்டிவிடும் வகையில்

சில தரப்பினர் இதுபோன்ற திட்டமிட்ட செயற்பாடுகளை மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ள அவர், அவ்வாறான ஒரு தீர்மானத்தை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றும் அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை உண்மைக்கு புறம்பானவை என்றும் தெரிவித்துள்ளார். அரச ஊழியர்களின் தொழில் உரிமையை பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் தெரிவித்துள்ள அவர் மக்களைத் தூண்டிவிடும் வகையில் மேற்கொள்ளப்படும் அத்தகைய பிரசாரங்களை வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன,அரசாங்க ஊழியர்களுக்கு அடுத்த மாதம் அரை மாத சம்பளமே வழங்கப்படும் என சில சமூக வலைத்தளங்கள் செய்திகளை வெளியிட்டு வருவதாகவும் அந்த செய்திகள் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானவை என்றும் தெரிவித்துள்ளார்.

## மதுபானம் மற்றும்... (03 ஆம் பக்கத் தொடர்)

நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க கோல்ட் லீப் மற்றும் பென்ஸன் என்ட் ஹேஜஸ் ஆகிய சிகரெட்டுக்களின் விலைகளே ஐந்து ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி கோல்ட் லீப் சிகரெட் ஒன்றின் விலை 85 ரூபாவாகவும் பென்ஸன் என்ட் ஹேஜஸ் சிகரெட் ஒன்றின் விலை 90 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சமூக பாதுகாப்பு வரியானது இம்மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் நிலையில் அதற்கிணங்கவே மேற்படி இருவகை சிகரெட்டுக்களின் விலைகளை ஐந்து ரூபாவால் அதிகரித்துள்ளதாகவும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

எவ்வாறெனினும் நிறுவனத்தின் ஏனைய தயாரிப்புகளான சிகரெட்டுக்களின் விலைகள் அதிகரிக்கப்படவில்லை என்றும் அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

## குழந்தையை விற்க... (03 ஆம் பக்கத் தொடர்)

35 வயதுடைய இந்தோனேசியப் பெண் ஒருவர் தனக்கு புதிதாகப் பிறந்த குழந்தையை பணத்திற்காக விற்க முயன்றுள்ளார் என்றும் குழந்தையை விற்பதற்கான நபரை தேடிக் கண்டுபிடிக்க உதவிய 45 வயதுடைய இலங்கைப் பெண் உட்பட 3 பெண்கள் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு மாதக் குழந்தையை விற்பனை செய்வதாக கடந்த பெப்ரவரியில் இணையத்தில் வெளியான விளம்பரத்தின் அடிப்படையில் துபாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். இந்த விளம்பரம் இலங்கையைச் சேர்ந்த பெண் ஒருவரால் வெளியிடப்பட்டதாக விசாரணைகளின் மூலம் தெரியவந்தது.

அதன்படி, துபாய் நீதிமன்றத்தில் நடைபெற்ற வழக்கு விசாரணையில், மூன்று சந்தேக நபர்களும் ஆட்கடத்தல் குற்றவாளிகள் என கண்டறியப்பட்டதுடன், மேற்படி நீதிமன்றம் ஒரு சந்தேக நபருக்கு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையும் 4000 திர்ஹாம் அபராதமும் விதித்து தீர்ப்பளித்தது.

அத்துடன், அவர்கள் ஐக்கிய அரபு இராச்சியத்தில் சட்டவிரோதமாக தங்கியிருந்தமைக்காக ஒரு மாத சிறைத் தண்டனையும் 1,000 திர்ஹம் அபராதமும் விதிக்கப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## பிரபல நடிகர்...

காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளதாக அவரது குடும்பத்தினர் தெரிவித்தனர்.

தர்ஷன் தர்மராஜ் 2008ஆம் ஆண்டு சிட்னி சந்திரசேகர என்பவரினால் தயாரிக்கப்பட்ட தொலைக்காட்சி நாடகமான ஏ9 தொலைக்காட்சி நாடகம் மூலம் கலைத்துறைக்கு அறிமுகமானவர்.

அதேஆண்டில் பிரபாகரன் என்ற சிங்கள மொழி திரைப்படத்தில் அவர் நடித்திருந்தார். அத்துடன் இனியவன், சுனாமி, கோமாளி கிங்ஸ் போன்ற படங்களிலும் ரெல்ல வெரலட ஆதரே என்ற சிங்கள தொலைக்காட்சி நாடகத்திலும் அவர் நடித்துள்ளதுடன் தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் அமோக பாராட்டுகளையும் பெற்றுள்ளார்.

நேற்றைய தினம் அவரது பூதவுடல் கொழும்பு பொரளையிலுள்ள ஜயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டதுடன் இன்று அவரது பிறப்பிடமான இறக்குவானைக்கு எடுத்துச் செல்லப்படவுள்ளது.

அவரது இறுதிக்கிரியைகள் தொடர்பான தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

## ஐ.நா சபையின் முதல்...

குழுக்களால் மேற்கொள்ளப்படுகின்றது. முதலாவது குழு ஆயுதக் குறைப்பு, உலகளாவிய சவால்கள் மற்றும் அமைதிக்கான அச்சுறுத்தல்கள், சர்வதேச சமூகத்தைப் பாதிக்கும் மற்றும் சர்வதேச பாதுகாப்பில் உள்ள சவால்களுக்கு தீர்வுகளைத் தேடுகின்றது. இந்தக் குழு ஐக்கிய நாடுகளின் ஆயுதக் குறைப்பு ஆணைக்குழு மற்றும் ஜெனீவாவை தளமாகக் கொண்ட ஆயுதக் குறைப்பு மாநாட்டுடன் நெருக்கமான ஒத்துழைப்பில் செயற்படுகின்றது.ஐக்கிய நாடுகள் சபையின் முதலாவது குழு இன்று (03) ஆந் திகதி அதன் முக்கிய பணியைத் தொடங்கவுள்ளது.

தூதுவர் மொஹான் பீரிஸ், ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாக 2021 ஜனவரியில் நியமிக்கப்பட்டார். இவர் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் பிரதம நீதியரசராகவும் அதற்கு முன்னர் சட்டமா அதிபராகவும் பதவி வகித்துள்ளார்.

## புதிய பிரேரணைக்கு...

பிரேரணை ஒன்றை சமர்ப்பித்துள்ளன.

பொறுப்புக் கூறல், மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலேயே அந்த பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அதனை இலங்கை முழுமையாக நிராகரிக்கும் என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

இலங்கை தொடர்பான புதிய பிரேரணை எதிர்வரும் 6ஆம் திகதி கொண்டு வரப்படவுள்ள நிலையில் அது தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அங்கு தெளிவுபடுத்தும் வகையிலேயே வெளிவகார அமைச்சர் தலைமையிலான குழு நேற்று ஜெனிவா சென்றுள்ளது.

அதேவேளை மேற்படி பிரேரணைக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் உறுப்பு நாடுகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் அமைச்சர் தலைமையிலான குழுவினர் மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பிரேரணை இறுதி வடிவம் பெறுவதற்கு முன்பதாக இணை அனுசரணை வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி இலங்கையின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தவும் அமைச்சர் தலைமையிலான குழு நடவடிக்கை எடுக்க உள்ளது.

ஏற்கனவே கடந்த செப்டம்பர் மாத ஆரம்பத்தில் ஜெனிவாவுக்கு சென்றிருந்த அமைச்சர் தலைமையிலான மேற்படி குழுவினர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை உயரஸ்தானிகரின் அறிக்கைக்கு பதிலளித்ததுடன் சர்வதேச தரப்பினருடனும் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர்.

அதனையடுத்து அமைச்சர் அலி சப்ரி ஐக்கிய நாடுகள் பொது சபை கூட்டத்திலும் பங்கேற்றார்.

அந்த நிலையில் நேற்றைய தினம் மீண்டும் அமைச்சர் தலைமையிலான குழுவொன்று ஜெனீவா சென்றுள்ளது.

## அறையிலிருந்த...

தீ பற்றியதாலேயே இம்மரணம் ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சம்பவ இடத்தில் இடம்பெற்ற தடயவியல் விசாரணை மற்றும் உடற்கூற்று பரிசோதனையின் பின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

சம்பவத்தில் வல்வெட்டித்துறை நெடியகாடு, ஏஜிஏ ஒழுங்கையைச் சேர்ந்த சரவணபவா ரஞ்சித்குமார் (வயது 30) அவரது மனைவி கிருசாந்தினி (வயது 26) என்ற இருவருமே சடலமாக மீட்கப்பட்டனர்.

தம்பதி உறங்கிய அறையில் தீ பற்றி எரிவதைக் கண்ட வீட்டிலிருந்தவர் அறையை உடைத்து உள்நுழைந்த போது இருவரும் தீயில் எரிந்து சடலமாகக் காணப்பட்டனர் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவ இடத்தில் இடம்பெற்ற தடயவியல் விசாரணையில் அறையில் மின் ஒழுக்கு ஏற்பட்டமை மற்றும் பெற்றொல் பரவியமை தொடர்பில் கண்டறியப்பட்டன. அத்துடன் உயிரிழந்த மனைவியின் கையில் அலைபேசி சார்ஜர் வயர் இருந்துள்ளமை மீட்கப்பட்டது.

கணவனின் அலைபேசி கொழும்பில் தவறவிடப்பட்டுள்ளது. அதனால் அவர் சீனாவின் தயாரிப்பிலான அலைபேசி ஒன்றை கொள்வனவு செய்துள்ளார். அந்த அலைபேசி வெப்பமாகி அல்லது சார்ஜர் வெப்பமாகி தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும் படுக்கை அறையில் பெரிய கேனிலும் மற்றும் போத்தலிலும் பெற்றோல் சேமித்து வைக்கப்பட்டிருந்துள்ளன என்று தடயவியல் விசாரணையில் அறிக்கையிடப்பட்டுள்ளது.

## ஆட்டோ கட்டணத்தை...

எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் (30) நள்ளிரவு முதல் பெற்றோல் விலை குறைக்கப்பட்டது. இதன்படி, ஒக்டேன் 92 பெற்றோல் லீட்டர் ஒன்றின் விலை 40 ரூபாவால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 410 ரூபாவாகும்.

ஒக்டேன் 95 பெற்றோல் லீட்டர் ஒன்றின் விலையும் 30 ரூபாவினால் குறைக்கப்பட்டு அதன் புதிய விலை 510 ரூபாவாகும்.

## 12 மில். டொலர்...

மருந்துகளை வழங்க தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது.

இதுவரை 03 தடவைகளில் சுகாதார அமைச்சுக்கு மருந்துப்பொருட்கள் அனுப்பப்பட்டுள்ள நிலையில் அதன்இறுதிக்கட்டமாக மேலுமொருமொருதொகைமருந்துப்பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் நேற்று இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அதே வேளைஇலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க முன்வந்துள்ள அமைப்புகள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் தொடர்ந்தும் இணைந்து பணியாற்ற விரும்புவதாக அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் Heart to Heart International, Hope Worldwide மற்றும் Americaresஆகிய நிறுவனங்களுக்கு தனது நன்றிகளையும் அவர் தெரிவித்துள்ளார். Heart to Heart International நிறுவனம் கடந்த ஜூலை மாதம் 9.131 மில்லியன் டொலர் பெறுமதியான மருந்துகளை இலங்கைக்கு கையளித்திருந்தது. Americares நிறுவனம் கடந்த செப்டம்பர் மாதம் இலங்கைக்கு வழங்கிய உதவியின் பெறுமதி 773,000 அமெரிக்க டொலர்களிலும் அதிகமாகும். மேலும் Hope Worldwide நிறுவனம் ஒக்டோபர் மாதம் முதல் வாரத்தில் இலங்கைக்கு அனுப்பும் உதவிப் பொருட்களின் பெறுமதி 1.74 மில்லியன் அமெரிக்க டொலர்களை விட அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## எதிர்வரும் ஜனவரி...

தீர்ந்துவிட்டதால் மின்வெட்டை நீடிக்க வேண்டும் என்று நாங்கள் நினைத்தோம். ஆனால் நிலக்கரி கொள்முதல் சாத்தியம் காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை தற்போது தினசரி இரண்டு மணித்தியாலங்கள் 20 நிமிடங்கள் மின்சாரம் தடைப்படுவதோடு, அனல் மின் நிலையத்தில் உள்ள 3 வது அலகு எதிர்வரும் திங்கட் கிழமைக்குள் மீண்டும் தேசிய மின்தொகுப்புடன் இணைக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தேங்காய் விலைகள் ...

ஏற்கனவே அதற்கு முந்திய வாரத்தில் 1,000 தேங்காய்களுக்கு 63,700 ரூபாவே ஏலத்தில் கிடைத்துள்ளன.

இந்நிலையில் இந்த ஏலத்தின் போது 10 இலட்சத்து 18 ஆயிரத்து 186 தேங்காய்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டன.

அதில், 7 இலட்சத்து 6 ஆயிரத்து 9 தேங்காய்கள் விற்பனை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் வரையான காலப்பகுதியில் தேங்காய் அடிப்படையிலான பொருட்களின் ஏற்றுமதி 7 சதவீதத்தால் அதிகரித்து அதன் வருமானம் 573 மில்லியன்களாக உயர்ந்துள்ளமை தெரிந்ததே.

## இவ்வருட தேசிய...

வெகுவிமர்சையாக நடைபெற ஏற்பாடாகியுள்ளதாக முஸ்லிம் சமய கலாசார திணைக்கள பணிப்பாளர் அல்ஹாஜ் இப்றாஹீம் அன்ஸார் நேற்று தெரிவித்தார்.

இவ்வருட மீலாத் தின நிகழ்வுகள் தொடர்பாக சீனன்கோட்டை பள்ளிச்சங்க நிர்வாகிகள் மற்றும் ஊர் பிரமுகர்கள், பிரதேச அமைப்புகளின் முக்கியஸ்தர்களுடனான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் (01) சீனன்கோட்டை பாஸிய்யா பெரிய ஜும்ஆ பள்ளிவாசலில் நடைபெற்றது.இதன்போதே மேற்படி இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தின் நீண்டகலந்துரையாடலின் பின்னர் அனைவரினதும் ஏகோபித்த முடிவாக தேசிய மீலாத் தின நிகழ்வுகளை ஜாமியா நளீமிய்யா கலாபீடத்தில் நடாத்துவதெனவும் இதற்காக பூரண ஒத்துழைப்புகளை சீனன்கோட்டை பள்ளிச்சங்கம் தலைமையிலான ஊர் பிரமுகர்கள், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் இணைந்து வழங்க முன்வந்துள்ளதை தான் மனப்பூர்வமாக வரவேற்பதாக திணைக்கள பணிப்பாளர் இப்றாஹீம் அன்ஸார் மகிழ்ச்சி தெரிவித்தார்.

மேலும் விழாவில் பிரதம அதிதியாக மாண்புமிகு பிரதமர் தினேஷ் குணவர்தன பிரதம அதிதியாகவும் கௌரவ அதிதியாக கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, வெளிநாட்டு அமைச்சர் அலிசப்ரி மற்றும் விசேட அதிதிகளாக கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிசாந்த, பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரும் கலந்து சிறப்பிப்பர். நிகழ்வில் மேலும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், பள்ளிவாசல் சங்க பிரதிநிதிகள், நளீமிய்யா கலாபீட முக்கியஸ்தர்கள், உலமாக்கள், சர்வமத தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக திணைக்கள பணிப்பாளர் இப்றாஹீம் அன்ஸார் தினகரனுக்கு தெரிவித்தார். மேலும் விழாவை சிறப்பிக்குமுகமாக நளீமிய்யா கலாபீடத்தை பிரதிபலிக்கும் வகையில் முதல் நாள் முத்திரையொன்றும் வெளியிடப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## திருக்கோணேஸ்வரர்...

வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் இந்திய அரசாங்கம் உதவுவதற்கு காத்துக் கொண்டிருக்கின்றது என இந்திய தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்திற்கு நேற்று (02) விஜயம் செய்து பூசை வழிபாட்டில் கலந்து கொண்டதுடன் ஆலய நிர்வாக பணிகளையும் பார்வையிட்டார்.

இதனையடுத்து கோயில் நிர்வாகத்தினரையும் சந்தித்து கலந்துரையாடியதுடன் கோயில் நிர்வாகத்தினர் இந்திய தூதுவரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். இன்றைய நாள் ஒரு விசேட நாள். நவராத்திரி காலம் விரதம் அனுஷ்டிக்கப்படுகிற அதே காலத்தில் காந்தி ஜெயந்தி நடைபெறுகின்ற இன்றைய நாளில் இந்த இடத்துக்கு நான் விஜயம் செய்து பூஜை வழிபாடுகளிலும் மிக நேர்த்தியாக நான் கலந்து கொண்டது மாத்திரமல்ல இந்த ஆலயத்தினுடைய தொன்மையான வரலாறு பூர்வீகமான விடயங்கள் அனைத்தையும் அறிஞர்களும் ஆலய நிர்வாகிகளும் எனக்கு நிறைந்த தெளிவுடன் அறிய தந்தனர்.

## சுகாதார அணையாடைகளை...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கிணங்க இந்த வரிச்சலுகையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் சுகாதார அணையாடை உற்பத்திகளுக்காக இறக்குமதி செய்யப்படும் ஐந்து மூலப் பொருட்களுக்கான வரிகளை நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பெண்கள் மற்றும் பாடசாலை மாணவிகளின் சுகாதார நலன்களை உறுதி செய்யும் வகையில் சுகாதார அணையாடைகளை குறைந்த விலையில் தயாரிப்பதற்காக இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் இறக்குமதி செய்யப்படும் சுகாதார அணையாடைகளுக்கு வரிச் சலுகை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கிணங்க இந்த வரிச்சலுகையை வழங்குவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகவும் அந்த பிரிவு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில் சுகாதார அணையாடைகளை தயாரிப்பதற்காக ( Sanitary Napkin ) இறக்குமதி செய்யப்படும் பிரதான 05 மூலப் பொருட்களுக்கு விதிக்கப்பட்டிருந்த அனைத்து வரிகளையும் நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரசாங்கத்தின் மேற்படி தீர்மானத்திற்கமைய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் 10 சுகாதார அணையாடைகள் அடங்கிய ஒரு பக்கற்றின் விலை 50 தொடக்கம் 60 ரூபாவால் குறைவடையும். அதற்கமைய அதன் அதிகபட்ச சில்லறை விலை 260 தொடக்கம் 270 ரூபாவாக இருக்கும்.அதேபோன்று, இறக்குமதி செய்யப்படும் முடிவுப் பொருட்களின் நுகர்வோர் சில்லறை விலைகளும் 18வீதம் அல்லது 19 வீதத்தால் குறைவடையும்.

உற்பத்தியாளர்கள் இந்த மூலப் பொருட்களைஇறக்குமதி செய்யும் சந்தர்ப்பத்தில் உரிய வரிச் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்கு தொழில் அமைச்சின் செயலாளரின் பரிந்துரைகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனால் அதற்கான செயன்முறைகளை தயாரிக்கும் பணிகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## தேசிய சபை தமிழ்...

வாய்ப்பினை இழந்து விடக்கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார். தேசியசபையின்கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றிருந்த நிலையில், பாராளுமன்றத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ் மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகள் யாரும் அதில் பங்கேற்றிருக்கவில்லை.

இந்நிலையில் கருத்துவெளியிடும்போதே அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உரிமைகளுக்காக போராடிக்கொண்டிருக்கும் தமிழ்த் தரப்புக்களின் போராட்டத்திற்கு உரிய தீர்வு கிடைப்பதற்கான சாத்தியமான எந்தவொரு விடயங்களையும் எதிர்மறையாகவே கருதுகின்றார்கள். இதனால், பிரச்சினைகள் தீர்க்கப்படாது நீடித்துக்கொண்டே இருக்கின்றது. இதற்கு அவர்களின் சுயலாப அரசியலே காரணமாகின்றது. பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டால் அவர்களால் அரசியல் களத்தில் நிற்கமுடியாது என்பதற்காகவே எதிர்மறையான கருத்துக்களை வெளியிட்டவண்ணமுள்ளனர். தென்னிலங்கையின் எந்தவொரு தலைவர்களும், தனிநாட்டிற்கான கோரிக்கையை அங்கீகரிக்கப்போவதில்லை. ஆகவே, குணாம்ச ரீதியான அணுகுமுறைகள் ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண்பதற்கு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

அதற்காக, கிடைக்கும் வய்ப்புக்களை முறையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது.

## வடக்கில் திடீரென...

தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

“நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் விற்பனையாளர்களையும், பாதாள உலகக் குழுவினரையும் தேடிக்கண்டுபிடிக்கும் நடவடிக்கையில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் முப்படையினர் களமிறங்கியுள்ளனர்.

இந்த நிலையில், வடக்கில் ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்பவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படும்.

முதலில் போதைப்பொருள் விற்பனையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தால்தான் போதைப்பொருள் பாவனையை முடிவுக்குக் கொண்டுவர முடியும்” என்றார்.

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**சுத்திகரிப்புப் பிரிவு**

**சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்திற்கான பாதுகாப்புச் சேவையை வழங்குதல் (11 ஏக்கர் மற்றும் 5 ஏக்கர் புளெக்குகள்)**

**பகிரங்கக் கேள்வி குறிப்பீட்டிலக்கம்: PD/SER/05/2022**

12 மாத காலப் பகுதிக்கு சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டத்திற்கான பாதுகாப்புச் சேவையை (11 ஏக்கர் மற்றும் 5 ஏக்கர் புளெக்குகள்) வழங்குவதற்காக தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ரூ. 869.57 + 15% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2022-10-12ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2022-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09**
**தொலைபேசி: 0094-11-5455332**
**தொலைநகல்: 0094-11-5455424**

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**சுத்திகரிப்புப் பிரிவு**

**சப்புகஸ்கந்த முனையத்திற்கு துப்புரவேற்பாட்டு மற்றும் சுத்திகரிப்பு சேவைகளை வழங்குதல்**

**பகிரங்கக் கேள்வி குறிப்பீட்டிலக்கம்: PD/SER/06/2022**

2022-11-04ஆம் திகதி ஆரம்பித்து 12 மாத காலப் பகுதிக்கு சப்புகஸ்கந்த முனையத்திற்கு துப்புரவேற்பாடு மற்றும் சுத்திகரிப்பு சேவையை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ரூ. 869.57 + 15% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2022-10-12ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2022-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை),**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09**

# அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

கிம்புலாபிட்டிய, கல்மங்கட, சூரியலோக வீதி, இல. 326/1 என்ற விலாசத்தில் நிரந்தர வதிவிடத்தையும், வர்த்தமானிய, அவுஸ்திரிரேலியா, விக்டோரியா, ஏசூகா, ஸ்டுவ் கோட், இல. 05ல் வசிக்கும் **பல்லே கெதர பிரபாத் மதுசங்க ஜயசேன** ஆகிய நான், 78/87 என்ற இருமடிப்புத் தாளில் நாட்குறிப்பு இல. 1050 கீழ் 2019.03.25ந் திகதி பதியப்பட்ட பிரசித்த நொத்தாரிசு **டி.பி.எஸ்.ஏ. சகுல குணதிலக** அவர்கள் மூலம், எழுதி உறுதிப்படுத்தப்பட்ட இல. 175 மற்றும் 2019.03.25ந் திகதியிடப்பட்ட அற்றோணி தத்துவத்தின் மூலம் எனது அற்றோணித் தத்துவக்காரரான கிம்புலாபிட்டிய, கல்மங்கட, சூரியலோக வீதி, இல. 326/1 என்ற விலாசத்தில் வசிக்கும் **பல்லே கெதர ஜயசேன** என்பவருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தை இன்று முதல் இரத்துச் செய்யப்படுவதோடு ஸ்ரீலங்கா ஜனநாயக குடியரசிற்கும், பொது மக்களுக்கும் இத்தால் அறியத் தருகிறேன்.

**பல்லே கெதர பிரபாத் மதுசங்க ஜயசேன**

**வ/ப புளுகஹகொட சணச சங்கம்**

## காணி ஒன்றை விற்பனை செய்வதற்கான விலைமனுக் கோரல்

கனேமுல்ல புளுகஹகொட ஏ. டி. பஸ்நாயக்க மாவத்தைக்கு அருகில் அமைந்துள்ள 10 பேர்ச் சகல வசதிகளுடனான காணி விற்பனைக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

1. 2020 ஒக்டோபர் 01 முதல் ஒக்டோபர் 28ம் திகதி பகல் 2.00 வரை மாத்திரம் விலைமனுக்கள் ஏற்கப்படும்.
2. 2022 ஒக்டோபர் 28 பி.ப. 3.00 இற்கு விலை மனுக்கள் திறக்கப்படுவதுடன் சகல விண்ணப்பதாரிகளும் அவ்வேளையில் சமுகமளித்தல் வேண்டும்.
3. சகல விலைமனுக்களும் கௌரவ தலைவர், வ/ப புளுகஹகொட சணச சங்கம், 85/பீ, புளுகஹகொட கனேமுல்ல என்ற முகவரிக்கு நேரில் வருகை தந்து அல்லது பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
4. காணி மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரீட்சித்தல் அலுவலக நேரங்ளில் இடம் பெறலாம்.
5. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதித்தீர்மானமாவதுடன் மேலதிக தகவல்களுக்கு 011-2249903 என்ற தொ.பே. இலக்கத்தை அழையுங்கள்

**கௌரவ தலைவர்,**
**வ/ப புளுகஹகொட சணச சங்கம்.**
**புளுகஹகொட**. 2022.09.21

**அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச்செய்தல்**

பொரலஸ்கமுவ, தேவலமுல்ல, 301ஆம் இலக்கத்தில் வசிக்கும் கிரிவத்துடுவகே நிலந்தி பெரேரா (தே.அ.அ.இல. 737081001V) ஆகிய நான் இஸ்ரேல், டெல் அவிவ், இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் முதலாம் செயலாளர் டபிள்யூ. டீ. மகேஷ் குணவர்தன அவர்களால் உறுதி செய்யப்பட்ட 2021-07-20ஆம் திகதியைக் கொண்ட விசேட அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் பொரலஸ்கமுவ, தேவலமுல்ல, கே. ரூபன் பெரேரா ஒழுங்கை, 30/18 (301) இலக்கத்தில் வசிக்கும் ரத்நாயக்க முதியன்சேலாகே சுரங்கி நெலும் ரத்நாயக்க (தே.அ.அ.இல. 19926360313l) என்பவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை 2022ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் இரத்துச் செய்துள்ளதாகவும் அன்றைய தினத்தின் பின் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புகூற மாட்டேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கிரிவத்துடுவகே நிலந்தி பெரேரா**

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**சுத்திகரிப்புப் பிரிவு**

**சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டம் மற்றும் சுத்திகரிப்பு வளவிலிருந்து திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்துதல்**

**பகிரங்கக் கேள்வி குறிப்பீட்டிலக்கம்: PD/SER/08/2022**

ஒரு வருட காலப் பகுதிக்கு சுத்திகரிப்பு வீடமைப்புத் திட்டம் மற்றும் சுத்திகரிப்பு வளவிலிருந்து உக்கிப் போகும் மற்றும் உக்கிப் போகாத (பெற்றோலிய உற்பத்திகள் அற்ற) திண்மக் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்காக தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம் பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து இலவசமாக தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

சகல விலைமனுதாரர்களும் 2022.10.18ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2022-10-26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் கலந்துகொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை),**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09**
**தொலைபேசி: 0094-11-5455332**
**தொலைநகல்: 0094-11-5455424**

# கேள்வி அறிவித்தல்

**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்**

**சுத்திகரிப்புப் பிரிவு**

**இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புப் பிரிவிற்கு துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்**

**பகிரங்கக் கேள்வி குறிப்பீட்டிலக்கம்: PD/SER/07/2022**

2022-11-04ஆம் திகதி ஆரம்பித்து 12 மாத காலப் பகுதிக்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்புப் பிரிவிற்கு துப்பரவேற்பாடு சேவையை வழங்குவதற்காக தகுதி வாய்ந்த சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்குத் தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர்கள் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவிருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் தகைமைத் தகவுத்திறன்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விலைமனுதாரர்கள் விலைமனு ஆவணங்களை CPC இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம். உ-ம் http://ceypetco.gov.lk/public-tenders/. விலைமனுதாரர்கள் மீளளிக்கப்படாத கட்டணமான 1,000.00 ரூபாவை (ரூ. 869.57 + 15% VAT) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் மக்கள் வங்கியில் (தலைமை அலுவலகம்) பேணப்படும் 004100110208633 எனும் கணக்கிலத்திற்குச் செலுத்தலாம். தயவு செய்து வங்கிப் பற்றுச்சீட்டை மூலப் பிரதியை விலைமனுவுடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

சகல விலைமனுதாரர்களும் 2022-10-12ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு களனி, சப்புகஸ்கந்த, சுத்திகரிப்புப் பிரிவில் இடம்பெறும் தள விஜயத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விலைமனுக்கள் 2022-10-21ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பின்வரும் முகவரியிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் (பெறுகை மற்றும் களஞ்சியசாலை) முகாமையாளரின் அலுவலகத்தில் முடிவுறுத்தல் நேரத்தின் பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் நேரத்தில் கலந்துகொள்ளலாம்

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (கீழ்நிலை),**
**மே/பா முகாமையாளர் (பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள்),**
**இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்,**
**இல: 609, கலாநிதி டனிஸ்டர் டி சில்வா மாவத்தை, கொழும்பு-09.**

# சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி பகிரங்க ஏல விற்பனை

சிங்கர் பினான்ஸ் (லங்கா) பீ.எல்.சி மூலம் பெற்றுக்கொண்ட தங்கக் கடனில் ஈடு வைக்கப்பட்ட கால எல்லைக்குள் பணத்தை செலுத்தத் தவறியதால், அந்தத் தங்கக் கடன் வசதிக்காக பத்திரங்களாக அடமானம் வைக்கப்பட்ட தங்கப் பொருட்கள் கீழ் குறிப்பிடப்பட்ட திகதிகளில் மு.ப. 10.00 க்கு பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**திகதி மற்றும் ஏல விற்பனை இடம்**

**திகதி: 12/10/2022**

இல. 28,30, இரண்டாம் குறுக்குத் தெரு. வவுனியா.
இல. 163C/1/1, கொழும்பு வீதி, நீர்கொழும்பு.
விக்டோரியா கட்டிடம், சிலாபம் வீதி, வென்னப்புவ.
இல. 179/1/1, ஹெட்டிபொல வீதி, குளியாப்பிட்டி.
இல. 103, நீர்கொழும்பு வீதி, கிரியுள்ள.
இல. 86, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
இல. 140/B, கொழும்பு வீதி, குருணாகல்.
இல. 311/J, ரன்வல சந்தி, கேகாலை.
இல. 05, மைத்திரிபால சேனநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.
இல. 328, ரஜின சந்தி, தம்புத்தேகம.
இல. 65, மாஹவ வீதி, நிக்கவரட்டி
இல. 343, மாத்தளை வீதி, தம்புள்ளை.
இல. 80, யாழ்ப்பாணம் வீதி, மதவாச்சி
இல. 103, டி.எஸ் சேனநாயக்க வீதி, அம்பாறை
இல. 34, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்

**திகதி: 13/10/2022**

இல. 579, காலி வீதி, வெள்ளவத்தை.
இல. 14, மங்கல வீதி, கம்பஹா.
இல. 348, காலி வீதி, பாணந்துறை.
இல. 837E, புதிய கண்டி வீதி, தலங்கம வடக்கு, மாலபே.
இல. 173, இரத்தினபுரி வீதி, ஹொரன.
இல. 18B, பிலியந்தல வீதி, மஹரகம.
இல. 546, காலி வீதி, தெற்கு களுத்துறை, களுத்துறை.
இல. 106/1, துட்டுகெமுனு வீதி, கொஹுவளை.
இல. 34, ஹொரன வீதி, பிலியந்தல
இல. 30A, நாவல வீதி, நுகேகொடை.
இல. 362, கோட்டை வீதி, ராஜகிரிய

**திகதி: 14/10/2022**

இல. 498, ஆர்.ஏ. டி மேல் மாவத்தை, கொழும்பு 03.
இல. 64, மாகொல வீதி, கிரிபத்கொடை.
இல. 493, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
இல. 310/2A, ஜோர்ஜ் ஆர் டி சில்வா மாவத்தை, கொழும்பு 13.
இல. 49, சைமன்ட்ஸ் வீதி, மருதானை, கொழும்பு 10.
இல. 120, நீர்கொழும்பு வீதி, ஜாஎல
இல. 143 J, கண்டி வீதி, கடவத்த

**திகதி: 15/10/2022**

இல. 01, அநகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை.
இல. 131, நுவரெலியா வீதி, கம்பளை.
இல. 115/1, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய.
முத்துகுமாரண கட்டிடம், கீழ் வீதி, திஸ்ஸமகாராம.
இல. 46/1/1, கொழும்பு வீதி, கலுவெல்ல, காலி.
இல. 80, கண்டி வீதி, நுவரெலியா.
இல. 271/1, 1ஆவது மாடி, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி.
இல. 18/2, பதியத்தலாவ வீதி, மஹியங்கனை.
இல. 186. டி.எஸ். சேனநாயக்க மாவத்தை, கண்டி

எந்த ஒரு முன் அறிவித்தலும் இன்றி ஏல விற்பனையை இரத்துச் செய்வது அல்லது ஒத்திவைக்கும் உரிமை சிங்கர் பினான்ஸ் (லங்கா) நிறுவனத்தின் வசமானதாகும்.

தங்கக் கடன் முகாமையாளர்

**SINGER FINANCE**

இல. 498, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.

**வழங்குநர்கள்/ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்**
**2023ஆம் ஆண்டு**

## நகர அபிவிருத்தி அதிகார சபை

# நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

1. நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு 2023ஆம் ஆண்டிற்காக பொருட்கள், வேலை மற்றும் சேவைகளை வழங்குதல் சார்பாக பிரதேச ரீதியில் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதை முன்னிட்டு தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உள்ளூர் உற்பத்தியாளர்கள், உள்ளூர் வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள், சனசமூக சங்கங்கள், ஆலோசனை நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு வழங்குநர்களிடமிருந்து அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகளிடமிருந்து சந்தை விலை முறைமை (Shopping Bidding method) இன் கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. விண்ணப்பங்கள்/ ஆலோசனைகள் மற்றும் நிபந்தனைகள்
   அ. விண்ணப்பதாரிகளுக்கு 2022.10.03 முதல் 2022.10.31ம் திகதி வரையான காலத்திற்குள் கீழ்க்காணும் 'இணைய' தளத்திற்கு பிரவேசித்து அதன் Procurement Notice ஊடாக பதிவு செய்வதற்கு தேவையான விண்ணப்பங்கள் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்களை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். (Download) நகர அபிவிருத்தி அதிகார சபை www.uda.gov.lk
   ஆ. பதிவு செய்வதுடன் சம்பந்தப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் ஆவணத் தொகுதியை கீழ்க்காணும் பகுதிகளைக் கொண்டிருக்கும்
      i. பிரதான விண்ணப்பப் படிவம்
      ii. அறிவுருத்தல்கள் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய பத்திரம்
      iii. உருப்படி பட்டியல் (ஆங்கில மொழியில்)

மேலே குறிப்பிடப்பட்ட ஆவணங்களை 'இணைய' தளத்தின் ஊடாக பெற்றுக் கொள்ளல் பற்றி விண்ணப்பதாரி ஒருவருக்கு ஏதேனும் சிக்கல்கள் ஏற்படின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகத்தில் கீழ்க்காணும் அதிகாரியை அழையுங்கள் (அலுவலக நேரங்களில் மட்டும்)

- பிரதிப் பணிப்பாளர் (பெறுகை) நகர அபிவிருத்தி அதிகார சபை
  நேரடி தொ. பே. இலக்கம் - 011 3049008
  011 2875916-20, 011-2873651-2, 011 2873644 } நீடிப்பு
  011 2873649, 011 2875333, 011-2797200 } 2681
- உதவிப் பணிப்பாளர் (நிதி) நகர அபிவிருத்தி அதிகார சபை, நீடிப்பு - 2683

3. பதிவிற்கான உருப்படி கட்டணம் செலுத்துதல்
   அ. ஒரு உருப்படிக்காக பதிவு செய்தல் சார்பாக விண்ணப்பதாரியொருவரிடமிருந்து அறவிடப்படும் கட்டணம் ரூ. 1,000.0 (வரியுடன்)
   ஆ. 2023ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்வதற்காக உருப்படி கட்டணம் இலங்கை வங்கியின் நிறுவனக் கிளையில் இல. 1534 எனும் கணக்கிற்கு வைப்பிலிடுமாறு இலங்கை வங்கியின் எந்தக் கிளையிலும் அல்லது நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைமையகம், மாகாண/ மாவட்ட அலுவலகங்களில் செலுத்தலாம்.
   இ. உருப்படிக் கட்டணம் செலுத்தும் போது சமர்ப்பிக்கப்படும் நிதி வைப்பு பத்திரம்/ பற்றுச் சீட்டின் மூலப் பிரதி விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
   உ. விண்ணப்பதாரியினால் 2022.11.15ம் திகதி அல்லது அதற்கு முன்பு உருப்படி கட்டணத்தை செலுத்தி முடித்தல் வேண்டும். 2022.11.15ம் திகதிக்கு பின்னர் செலுத்தப்படும் உருப்படிக் கட்டணம் பற்றிய நகர அபிவிருத்தி அதிகார சபையினால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது.
4. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை குறித்த ஆவணங்களுடன் 2022.11.30ம் திகதி அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023ம் ஆண்டு' என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**பெறுகை பிரிவு, 7ஆம் மாடி,**
**'செத்சிரிபாய', பத்தரமுல்ல.**

5. 2023 ஆண்டிற்கு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு பொருட்கள், வேலை மற்றும் சேவை வழங்குதல் சார்பாக வழங்குநர்களைப் பதிவு செய்தல் சம்பந்தமாக இறுதித் தீர்மானம் எடுக்கும் உரிமை தலைவர், நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு உரியது.

**தலைவர்,**
**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு.**

**நகர அபிவிருத்தி அதிகார சபை,**
**பெறுகை பிரிவு**
**7ஆம் மாடி, 'செத்சிரிபாய',**
**பத்தரமுல்ல.**
2022 ஒக்டோபர் 03ஆம் திகதி

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**



தினகரன்
வடக்கின் உதயம்
Vadakkin Uthayam
2022 ஒக்டோபர் 3
திங்கட்கிழமை





நெடுந்தீவு கத்தோலிக்கத் திருஅவையும் கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இணைந்து நடத்திய தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் புலமைப் பகிர்வு. நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

## முகமாலை சிவபுர வளாகத்தில் சிறுவர்,முதியோர் தினம்!

கரவெட்டி தினகரன் நிருபர்

முகமாலை சிவபுரவளாகத்தில் அமைந்துள்ள மூதாளர் அன்பு இல்லத்தில் சர்வதேச சிறுவர் முதியோர் தினம் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

"மூதாளர்களுக்கு மதிப்பளிப்போம் சிறுவரை பாதுகாத்திடுவோம்" என்ற கருப்பொருளில் நேற்றைய தினம் மூதாளர் அன்பு இல்லத்தில் சிறுவர் முதியோர் தினம் கொண்டாடப்பட்டது.

நேற்று முன்தினம் ( 2022.10.01) நடைபெற்ற இந்நிகழ்வில் அன்பேசிவம் அறக்கட்டளையின் தொண்டர்கள் கலந்துகொண்டதோடு மூதாளர்களுக்கு சிறப்புணவுகள் மற்றும் இனிப்புகள் பரிமாறப்பட்டு மூதாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். சிவபுரவளாகத்தினை சுற்றியுள்ள சிறுவர்களும் இணைந்து விழாவை சிறப்பித்தமை சிறப்பம்சமாகும்.



மூதாளர்கள் தம்மையும் சமூகத்தின் அங்கமாகக் கருதி முன்னெடுத்த மேற்படி நிகழ்விற்கு அன்பே சிவம் தொண்டர்களுக்கு நன்றிகளை தெரிவித்ததோடு தமது அன்பினையும் பரிமாறிக் கொண்டனர்.

## குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு அக்கராயன் மக்கள் கோரிக்கை

(பரந்தன் குறுாப் நிருபர்)

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் நிலவும் குடிநீர் தேவைகளைப் பூர்த்தி செய்து தருமாறு பாதிக்கப்பட்ட பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிளிநொச்சி அக்கராயன் பிரதேசத்திற்கு உட்பட்ட கோணாவில் யூனியன்குளம் அக்கராயன்; மத்தி சுபாஸ்குடியிருப்பு கெங்காதரன் குடியிருப்பு போன்ற பகுதிகளில் குறிப்பிட்ட சில பகுதிகளில்; குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகின்றது,

அண்மைய நாட்களாக நிலவி வரும் தொடர் வரட்சி காரணமாக கிணறுகளில் நீர் வற்றிக்காணப்படுவதுடன் சில கிணறுகளில் நீர் நிறம் மாறியும் உவர்த்தன்மை கொண்டும் காணப்படுகின்றது.

இதனால் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என்றும் தமக்கான குடிநீரைப்பெற்றுக்கொள்வதில் பெரும் சிரங்களை எதிர்கொள்வதாகவும் தமது பகுதிகளுக்கான குடிநீரை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை அண்மைய நாட்களாக நிலவும் கடும் வறட்சி காரணமாக பயன்தரு மரங்கள் பல அழிவடையும் நிலை காணப்படுவதுடன் கால்நடைகளும் குடிநீர் தேடிஅலையும் நிலையும் காணப்படுவதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

## போதைப் பொருள் அற்ற உலகை கையளிக்ககோரி கிளிநொச்சி கோரக்கண் கட்டுச் சிறுவர்கள் விழிப்புணர்வு பேரணி

(பரந்தன் குறுாப் நிருபர்)

போதைப் பொருள் அற்ற உலகை தமக்கு பரிசாக கையளிக்குமாறு கோரி கிளிநொச்சி கோரக்கண் கட்டுச் சிறுவர்கள் விழிப்புணர்வு பேரணி ஒன்றை முன்னெடுத்துள்ளனர்.

சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினமான நேற்று முன்தினம் (01.10.2022) குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது கிளிநொச்சி மாவட்டத்தின்கண்டாவலைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கோரக்கண் கட்டு கிராமத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் அதிகரித்து காணப்படுகின்ற சட்டவிரோத மதுபான உற்பத்திகளால் தங்களது எதிர்காலம் பாதிக்கப்படுவதாகவும் அவற்றை தடுத்து தங்களுக்கு போதையற்ற சூழலை உருவாக்கித் தருமாறு கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



ஏ35 வீதியின் கோரக்கண் கட்டுச் சந்தியிலிருந்து கோரக்கண் கட்டு கிராமம் வரை குறித்த விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டதுடன் குறித்த பிரதேசத்தை சேர்ந்த ஏராளமான சிறுவர்கள் போதைப் பொருளுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு பேரணியில் கலந்து கொண்டிருந்தனர் மேற்படி கவனயீர்ப்பு போராட்டத்தில் கிரமா அலுவலர் கோ. சேகர் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் சிறுவர் கழகங்களின் பிரதிநிதிகள் எனப்பலர் கலந்து கொண்டனர்



அளவெட்டி சைவ வாலிபர் சங்கம் நடத்திய 105 ஆவது ஆண்டு விழாவும் முதியோர் மற்றும் சிறுவர் கௌரவிப்பு நிகழ்வும் சனிக்கிழமை சைவ வாலிபர் சங்கத் தலைவர் ஓய்வு நிலை மருந்தாளர் க நாகலிங்கம் தலைமையில் அளவெட்டி கும்பிழாவளைப் பிள்ளையார் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ் சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசன் கலந்து கொண்டார். கும்பிளாவளைப் பிள்ளையார் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இராம. சூரியபிரபாகர குருக்கள் ஆசியுரை வழங்கினார். கும்பிழாவளை முன்பள்ளியின் சிறார்கள் பரிசுப் பொருள்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அளவெட்டி கிராமத்தின் முதுபெரும் ஓதுவாரும் ஓய்வு பெற்ற மருத்துவ சேவையாளரும் ஆகிய நாகலிங்கம் சபாரத்தினம் மூத்த சமய பணியாளர் என்ற வகையில் கௌரவிக்கப்பட்டார். இவருக்கான கௌரவத்தை பிரதம விருந்தினர் வழங்கினர். நிகழ்வின் நிறைவில் அளவெட்டி சைவ வாலிபர் சங்கத்தின் 105 ஆம் ஆண்டு பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

## மன்னார் கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி



மன்னார் மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் இடம்பெற இருக்கின்ற மாவட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை முன்னிட்டு அதற்கான ஆரம்ப அறிமுக நிகழ்வொன்று (01) மன்னார் உப்புக்குளத்தில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு ஆரம்ப நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். குறித்த கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதலிடங்களை பெறும் அணியினருக்கான பணப்பரிசினை அல்ஹாஜ் S. K காதர் பவுண்டேசனினால் அன்பளிப்பு செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் விநோநோகராதலிங்கம், மன்னார் மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, தேசிய கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்கள், தேசிய நடுவர்கள் உள்ளிட்ட பலரும் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சாவகச்சேரிப் பொலிஸாரால் ஹெரோயினுடன் மூவர் கைது

சாவகச்சேரி விஷேட நிருபர்

சாவகச்சேரிப் பொலிஸாரால் 30/09 வெள்ளிக்கிழமை இரவு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் ஹெரோயின் போதைப்பொருளுடன் மூவர் கைதாகியுள்ளனர்.

இதன்போது நாவற்குழிப் பகுதியில் தலா 40 மில்லிகிராம் ஹெரோயினுடன் இருவரும் மறவன்புலவு பகுதியில் 15 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவரும் கைதாகியுள்ளனர். கைதான சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

## யாழ்ப்பாணத்தில் மகாத்மா காந்தியின் 153வது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள்



பருத்தித்துறை விசேட நிருபர்

மகாத்மா காந்தியின் 153 வது பிறந்த நாள் கொண்டாட்ட நிகழ்வுகள் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியில் உள்ள மகாத்மா காந்தியின் உருவச்சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரியாதை செலுத்தப்பட்டது.

நிகழ்வில் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன், யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசன், நாடாளுமன்ற உறுப்பினர் க.வி.விக்னேஸ்வரன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர்கள், யாழ் மாநகர பிரதி முதல்வர், மாநகர ஆணையாளர் மற்றும் அரசியல் சமூக பிரதிநிதிகள், இந்திய துணைத்தூதரக அதிகாரிகள், அகில இலங்கை காந்தி சேவா சங்க பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது காந்தீயம் ஏடு யாழ்ப்பாண மாவட்ட செயலர் க.மகேசனால் வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் இந்திய துணைத்தூதர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் முதல் பிரதியை பெற்றுக்கொண்டார்.

மேலும் மகாத்மா காந்திக்கு மிகவும் பிடித்தமான “ரகுபதி ராகவ ராஜாராம்” பாடலும் மாணவர்களினால் இசைக்கப்பட்டது.

## யாழ்.போதனா வைத்தியசாலையில் மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்.விசேட நிருபர்

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையினுள் இயங்கும் சிற்றுண்டி சாலைக்கு சிற்றுண்டி வழங்கும் வியாபாரியின் மோட்டார் சைக்கிள் திருட்டு போயுள்ளது.

போதனா வைத்திய சாலை வளாகத்தினுள் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு, சிற்றுண்டிகளை,சிற்றுண்டி சாலைக்கு கொண்டு சென்று வழங்கி விட்டு, மோட்டார் சைக்கிளை நிறுத்தி வைத்த இடத்திற்கு திரும்பி வந்து பார்த்த போது, மோட்டார் சைக்கிள் திருட்டு போனதை அறிந்து கொண்டார். அது தொடர்பில் யாழ்.போதனா வைத்திய சாலை நிர்வாகத்திடமும் , யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்திலும் மோட்டார் சைக்கிள் உரிமையாளர் முறைப்பாடு செய்துள்ளார்.

## யூரியா வழங்கலுக்கான பதிவுகள் மேற்கொள்ளல்

சாவகச்சேரி விஷேட நிருபர்

எழுதுமட்டுவாழ் தெற்கு கமக்கார அமைப்பிற்குட்பட்ட 2022/23 காலபோக நெற்செய்கையாளர்களுக்கு யூரியா உரம் வழங்குவதற்கான பதிவுகள் 03/10 திங்கட்கிழமை இடம்பெறவிருப்பதாக கமக்கார அமைப்பின் செயலாளர் இ.தெய்வேந்திரம்பிள்ளை தெரிவித்துள்ளார். சாவகச்சேரி கமநல சேவை நிலைய உத்தியோகத்தர்களினால் திங்கட்கிழமை காலை 9மணி தொடக்கம் பிற்பகல் 3மணி வரை எழுதுமட்டுவாழ் பொதுச் சந்தை கட்டடத்தில் பதிவுகள் மேற்கொள்ளப்படவிருப்பதால் உரிய விவசாயிகள் 2022ஆம் ஆண்டிற்கான ஏக்கர் வரி பற்றுச்சீட்டு,2022ஆம் ஆண்டிற்கான சந்தா பணம் செலுத்திய பற்றுச்சீட்டு,தேசிய அடையாள அட்டை மற்றும் வங்கி புத்தகம் ஆகியவற்றுடன் வருகை தருமாறும்அன்றைய தினம் மாத்திரமே பதிவுகள் இடம் பெறும் எனவும் மேலும் அவர் தெரிவித்துள்ளார்.

# நவராத்திரி விரதம்



ஒவ்வோராண்டும் புரட்டாதி மாதம் வருகின்ற பூர்வபட்ஷ பிரதமை முதல் நவமி ஈறாக உள்ள ஒன்பது தினங்கள் நவராத்திரி தினங்களாகும்.நவராத்திரி நாட்களான ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் கிரியா சக்தியான அன்னை துர்க்கையை யும், அடுத்த மூன்று நாட்கள் இச்சா சக்தியான திருமகளையும், இறுதி மூன்று நாட்கள் ஞான சக்தியான கலைமகளையும் வேண்டி வழிபட வேண்டும் என சாஸ்திரங்கள் சொல்கின்றன.

உலகின் முக்கிய தேவையான ஞானம்,செல்வம், வீரம் இவை மூன்றும் பெற்றுச் சிறந்திட முப்பெருந் தேவியரையும் மும்மூன்று நாட்கள் முறைப்படுத்தி, வேண்டி வழிபட்டாலும் மூன்று சக்தியரும் ஒன்றான ஆதிசக்தியே எனக் கருதி சக்தியின் ஒன்பது ரூபங்களையும் ஒன்பது நாட்களிலும் வழிபடுவது இன்னும் சிறப்பாகும்.

நவராத்திரி யின் சிறப்பம்சமாக பெண் குழந்தைகளில் பத்து வயதுக்குட்பட்ட ஒன்பது குழந்தைகளைத் தேர்ந்தெடுத்து,அவர்களை நாளொன்றுக்கு ஒருவராக நீராட்டி,புத்தாடை அணிவித்து அவர்களைத் தேவியாக நினைத்து வணங்க வேண்டும்.

இதுபோல் ஒன்பது நாட்களும் அன்னைக்குகந்த பிரசாதங்களை ,சித்ரான்னங்களைப் படைத்து வழிபடுவதும் சிறப்பாகும்.ஒவ்வொரு நாளும் மாலை நேரத்தில் வீட்டில் வைத்திருக்கும் கொலு முன்பாக ,திருவிளக்கேற்றி அம்மன் படம் வைத்து அன்னையின் திருமுன் அமர்ந்து பக்திப் பாடல்கள் பாடி முறைப்படி வழிபட வேண்டும்.முதல் நாள் அம்பிகையை குமாரி வடிவமாக அலங்கரித்து மல்லிகை மலர்ச் சூடி வெண்பொங்கல் படைத்து வணங்குதல் வேண்டும்.இரண்டாம் நாளில் இராஜராஜேஸ்வரியாக அம்மனை வழிபட வேண்டும். மல்லிகை , துளசி சாற்றி,புளியோதரை படைத்து அம்மனை வழிபடலாம். மூன்றாம் நாள் அம்பிகையை கல்யாணியாக வழிபட வேண்டும்.சம்பங்கி,மரிக்கொழுந்து போன்றவற்றால் அன்னையை அலங்கரித்து சர்க்கரைப் பொங்கல் நிவேதனம் செய்யலாம்.ரோகினி தேவியாக அம்மனை வழிபடும் நாள் நான்காம் நாளாகும்.ஜாதி மல்லிப் பூச்சூடி, கதம்ப சாதம் படைத்து அம்மனை வழிபடலாம்.ஐந்தாம் நாளன்று காளிகாதேவியாய்ப் பாவித்து அம்மனுக்கு பாரிஜாத மலர் சூடி,தயிர்ச் சாதம் படைத்து வழிபட வேண்டும்.ஆறாம் நாளில் சண்டிகா தேவியாய் தேவியை வழிபட வேண்டும். இநாநாளில் செம்பருத்திப் பூவோடு தேங்காய்ச்சாதம் படைத்து அம்மன் அருள் பெறலாம்.ஏழாம் நாளில் தேவிக்கு தாழம்பூ பூமாலை போட்டு, எலுமிச்சை சாதம் நிவேதனம் செய்து அன்னபூரணியாய் வழிபடுதல் வேண்டும்.எட்டாம் நாள் அஷ்ட தேவிகளுடன் எழுந்தருளும் துர்க்கையாய் அம்மனைப் போற்ற வேண்டும்.ரோஜாப்பூ சாற்றி,பாயாசம் படைத்து வழிபட வேண்டும்.ஒன்பதாம் நாள் காமேசுவரி எனும் சிவசக்தி கோலத்தில் அம்மனை சுபத்திரா தேவியாகப் பாவித்து செந்தாமரை மலரால் அர்ச்சித்து திரட்டுப்பால் நிவேதனம் செய்து பூஜிக்க வேண்டும்.

சைவ மஞ்சரி

## மானுடவியல்

(தொடர்)

### கழறிற்றறிவார் நாயனார்



90

அளவில்லாப் பெருங்கூத்தராகிய இறைவரது திருக்கூத்தினை ஐம்புலன்களும் ஒன்றிய ஒருமையுணர்வாற் கண்டு உருகிப் போற்றித் திருவருளின் பக்கடலில் திளைத்து இன்புற்றார்.

தாம் பெற்ற பேரின்பத்தை வையத்தார் அனைவரும் பெற்று மகிழும் வண்ணம் கூத்தப்பெருமானது கீர்த்தியை விரித்துரைக்கும் செந்தமிழ்ப் பனுவலாகிய பொன்வண்ணத் திருவந்தாதியினைப் பாடியருளினார். சேரர் பாடிய திருவந்தாதியினைக் கேட்டு மகிழ்ந்த தில்லையம்பலவர் அதற்குப் பரிசிலாகத் தூக்கிய திருவடியிலணியப் பெற்ற திருச்சிலப்பொலியை நிகழ்த்தியருளினார்.

ஆடற்சிலம்பொலியினைச் செவிமடுத்து அளவிலாப் பேருவகையுற்ற சேரமான்பெருமாள் காலந்தோறும் கூத்தப்பெருமானைக் கும்பிட்டுத் தில்லையம்பதியிற் சில நாள் தங்கியிருந்தார்.

பின்னர் நம்பியாரூரரைக் கண்டு வணங்குவதற்கு விரும்பித் தில்லையினின்றும் புறப்பட்டுப் பல தலங்களை வணங்கி திருவாரூரை அடைந்தார் சேரமான்பெருமானாகிய கழறிற்றறிவார் நாயனார். நம்பியாரூரர், சிவனடியார்களுடன் அவரை எதிர்கொண்டழைத்தார்.

நம்பியாரூரைக் கண்ட சேரவேந்தர் நிலமிசை விழுந்திறைஞ்சினார். தம்மை வணங்கிய சேரமான்பெருமாளைத் தாமும் வணங்கித் தம் இரு கைகளாலும் தூக்கியெடுத்துத் தம் இரு கைகளாலும் ஒருவரொவரிற் கலந்த பெரும் நட்பினராய்ப் பெருமகிழ்ச்சியுற்றார்கள்.

இங்கனம் இருவரும் உயிர் ஒன்றி உடம்பும் ஒன்றாம் என அன்பினால் அளவளாவி மகிழும் தோழமைத் திறத்தைக் கண்ணுற்ற சிவனடியார்கள், நம்பியாரூரரைச் 'சேரமான் தோழர்' என்ற பெயரால் அழைத்து மகிழ்ந்தனர். சேரமான் தோழராகிய சுந்தரர் சேரமான் பெருமானது கையினை பற்றி அழைத்துச் சென்றார்.

இருவரும் திருவாரூர்க் திருக்கோயிலை அடைந்து அடியார்கள் வீற்றிருக்கும் தேவாசிரிய மண்டபத்தைப் பணிந்து திருக்கோயிலை வலம் வந்தனர்.

சேரமான் பெருமாள் உடைய நம்பியாராகிய சுந்தரைத் தொடர்ந்து சென்று பூங்கோயிலமர்ந்த பெருமானை நிலமிசைப் பல முறை விழுந்திறைஞ்சினார். புற்றிடங்கொண்ட பெருமானைப் போற்றிக் கண்களில் அன்பு நீர் பொழியத் திருமும்மணிக் கோவையென்னுஞ் செஞ்நூல் மாலை புனைந்தேத்தினார். **(தொடரும்)**

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்

# அக்கரைப்பற்று சின்னக்குளம் ஸ்ரீ வீரமாகாளியம்மன் ஆலய அலங்காரத் திருச்சடங்கு



அக்கரைப்பற்று சின்னக்குளம் ஸ்ரீ வீரமாகாளியம்மன்; ஆலய வருடாந்த அலங்காரத் திருச்சடங்கு திருவிழாவின் பாற்குடபவனி நேற்று முன் தினம் (01) பெருந்திரளான பக்தர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

அக்கரைப்பற்று ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலயத்தில் இருந்து ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ ப.கு.கேதீஸ்வரக்குருக்களின் தலைமையிலான பூஜை வழிபாடுகளோடு ஆரம்பமான பாற்குடபவனியில் வீரம்மாகாளியம்மன் ஆலய தலைவர் பி.பிராசந்தன் மற்றும் ஸ்ரீ வம்மியடிப்பிள்ளையார் ஆலய தலைவர் வி.சுகிர்தகுமார் உள்ளிட்ட ஆலய அறங்காவலர்கள் உற்சவகாலகுரு உற்சாடனபானு சிவத்திரு இ.யோகானந்தம் உதவிக்குருமார்களான சக்தி பிரியன்; சிவத்திரு சோ.கஜேந்திரன் இளஞ்சுடர் சிவத்திரு யோ.மோகன்ராஜ் காளியின் மைந்தன் சிவத்திரு ஜெ.ஜெயரூபன் சக்திதாசன் ;சிவத்திரு வி.நிசாந் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு பாற்குடபவனியை ஆரம்பித்து வைத்தனர்.



வம்மியடிப்பிள்ளையாருக்கான விசேட பூஜைகள் இடம்பெற்றதுடன் பாற்குடபவனி பக்தர்களின் ஆரோகாரா எனும் வேண்டுதலுக்கு மத்தியில் ஆரம்பமானது.

கணபதி ஹோமம் மற்றும் திருக்கதவு திறத்தலுடன் திருச்சடங்கானது ஆரம்பமானது. இன்று 03ஆம் திகதி காவடி ஆட்டங்களுடன் வலம் வருதல் இடம்பெறும். 04ஆம் திகதி இடம்பெறும் சக்தி மகா யாகம் நோர்ப்பு நெல் நேர்தல் ஆகிய கிரியைகளுடனும் 05ஆம் திகதி அதிகாலை இடம்பெறும் பக்தி ததும்பும் தீமிதிப்புடனும் 12ஆம் திகதி இடம்பெறும் எட்டாம் சடங்குடனும் இவ்வுற்சவம் நிறைவுறும்.

ஆலய தலைவர் பி.பிராசந்தன் தலைமையில் இடம்பெற்ற திருக்கதவு திறக்கும் நிகழ்வினையும் வருடாந்த அலங்காரத் திருச்சடங்கினையும் ஆலய வழிபாட்டு பிரதான கிரியைகள் யாவற்றையும் ஆலய பிரதமகுரு க.சிவராசா, உற்சவகாலகுரு சிவத்திரு இ.யோகானந்தம் உள்ளிட்ட பிரதம குருமார்களாலும் சிவத்திரு சோ.கஜேந்திரன் சிவத்திரு யோ.மோகன்ராஜ் சிவத்திரு ஜெ.ஜெயரூபன் சிவத்திரு வி.நிசாந் உள்ளிட்ட உதவி பூசகர்களாலும் நடாத்தி வைக்கப்படவுள்ளதுடன் வாத்ம சாந்தி, கிராம சாந்தி, சக்தி பூஜை ஆகியவற்றை சிவஸ்ரீ சீ.கு. கௌரிசங்கர் குருக்கள் நடாத்தி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வி.சுகிர்தகுமார் ...
வாச்சிக்குடா விஷேட நிருபர்

## "யுகரிஷியின் ஆன்மீகச் சிந்தனைகள் - 8



அனுபவமும் ஞானத்தை பெறுவதற்கான வழியே உலக வாழ்க்கையை உற்று நோக்கி பார்த்தால். இதை நாம் உணர முடியும். பிறிதொருவரின் குணம், செயல், இயல்பு ஆகிவைகளை அறிந்து கொண்டு, அதன் மூலம் அவன் பெறுகின்ற பலன்கள். விளைவுகளை அறிந்து கொண்டால், அதுவே நமக்கு அனுபவ பாடத்தைக் கற்றுக் கொடுக்கும். நற்செயல்களால் மேலோங்கி வளர்பவர்களை, சமுதாயத்தில் நற்பெயர் பெற்ற சான்றோர்களின் வாழ்வை வழிக்காட்டும் பாடமாக நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இதே போல் மனிதன் ஒருவன் தனது நடை, உடை, பாவனை, நடத்தை. குணம் செயல் ஆகியவைகளால் உருவாகும் நற்பலன்களின் மூலமும் அனுபவ பாடம் கற்றுக் கொள்ள முடியும். தன்னை சீர்த்திருத்திக் கொண்டு பிறப்பின் நோக்கத்தை அடைவதற்கான வழியில் நடந்து ஒருவன் நற்கதி பெற வேண்டும். அதாவது நற்சேர்க்கை, சுய ஆய்வு, சிந்தனை, அனுபவம் ஆகியவைகளை ஆதாரமாகக் கொண்டு நல்லறிவு பெற வேண்டும். இம் முயற்சியை தொடர்ந்து செய்திட வேண்டும்.

ஞானமில்லாத வாழ்வு பொருளற்றது. அறியாமையானது இம்மை (உலக வாழ்க்கை) மற்றும் மறுமை (ஆன்மீக வாழ்க்கை) ஆகியவற்றை நாசமாக்கி விடும். எனவே அறியாமை இருளிலிருந்து விலகி, ஞான தீபத்தின் ஒளியை நோக்கி நாம் முன்னேறிக் கொண்டிருக்க வேண்டும். தனது சோம்பலையும் கவனமின்மையையும் நீக்கி விட்டால் தன்னுடைய பலவீனம் அகன்று விடும் என்பதை மனிதன் உணர வேண்டும். பின்னர் அவன் வாழ்வு சிறப்புற்று விளங்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மனிதன் தனக்குத் தானே ஒரு முழுமையான மூலக்கூறு ஆவான். அவனுக்குள்ளேயே அனைத்து சக்திகளும், பிறந்ததிலிருந்தே உள்ளன.

அந்த சக்தியை ஆதாரமாகக் கொண்டு, எந்த நிலையிலும் நாம் முழுமையான வெற்றியின் சிகரத்தை தொட்டுவிட முடியும்.

மனிதனுடைய உள்ளத்தின் விழிப்புணர்வே, அனைத்து தெய்வங்களின் பிரதிநிதியாகும். உந்தன் சக்தி உன் உள்ளத்தில் உறங்கி கிடக்கும் வரை, அதற்கு எவ்வித மதிப்பும் இருக்காது. அந்த சக்தி விழித்துக் கொள்ளும் போது, நம்மை சுற்றி நாலாபுறமும் அதிசய ஞான ஒளி பிரகாசிக்கும்.

நம் நற்குணங்களோ அல்லது தீயகுணங்களோ தான், நாம் பெற்றிருக்கும் உன்னத நிலை அல்லது அவலநிலைக்கு காரணம் ஆகும். வெளிப்புற லாபநட்டங்கள், உதவி இடைஞ்சல்கள் இவை யாவும் நம்மை உயர்த்துவதில்லை அல்லது தாழ்த்துவதில்லை.

நம் உயர்வுக்கும் தாழ்வுக்கும் நாமே பொறுப்பு. எவன் தன்னை உணர்ந்து, தன் குறைகளை களைந்து நேர்மறை சிந்தனையுடன் செயல்படுகிறானோ அவன் வெற்றிக் கோட்டைக்கு மிக அருகில் இருக்கிறான். எவன் ஒருவன் தனது உள்ளாற்றலை புரிந்து கொண்டு அதனை தட்டி எழுப்புகிறானோ அவனிடம் அபரிதமான தெய்வ சக்தி மிகுந்து காணப்படும்.

வெளிப்புற உதவிகளை புறந்தள்ளி, மனிதனின் உள்ளே பொதிந்துள்ள நல்லியல்புகளை வெளிக் கொணர்ந்து, உயர்வதே சிறப்பு. முன்னேற்றத்திற்கான அனைத்து ஆதாரங்களும் மனிதனின் உள்ளாற்றலின் விழிப்புணர்வில் தான் உள்ளது. இவ்வகையில் மனிதன் அளப்பரிய சக்தி கொண்டவனாவான்.

பண்டிட் ஸ்ரீ ராம் சர்மா ஆச்சார்யா
தமிழில்: ஸ்ரீ ஸக்தி சுமனன்





உடப்பு,ஆண்டிமுனையில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் வருடாந்த நவராத்திரி விழா அண்மையில் இடம்பெற்றது. (படங்கள்: உடப்பு குறூப் நிருபர்)

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**(19287) பொதுவாக கோவில்களில் தெய்வ தரிசனத்தை முடித்து விட்டு சிறிது நேரம் அமர்ந்து விட்டு வருவது வழக்கம். ஆனால் எந்த கோவில்களில் இவ்வாறு அமரக்கூடாது?** மகாலட்சுமி வீற்றிருக்கும் விஷ்ணு கோவில்களில்

**(19288) இது ஏன்?**

இந்தக் கோவிலில் இருந்து நாம் வீட்டிற்கு செல்லும் பொழுது மகாலட்சுமி ஆனவள் நம்முடன் வருவதாக ஐதீகம் உள்ளது. எனவே எங்கும் அமராமல் நேராக வீட்டிற்கு திரும்ப வேண்டும்.

**(19289) வீட்டில் கணபதி ஹோமத்தை நடத்துவதாக இருந்தால் எப்போது செய்வது நல்லது ?**

பிரம்ம முகூர்த்தம் என்னும் அதிகாலை 4.30 முதல் 6 மணிக்குள் நடத்துவது நல்லது. விநாயகருக்குரிய சதுர்த்தி திதி, அஸ்தம் நட்சத்திர நாளில் நடத்துவது இன்னும் சிறப்பு

**(19290) கிரகப்பிரவேசத்தின் போது முதலில் பசுமாட்டை வீட்டிற்கு அழைத்து வருவது ஏன்?** பசு லட்சுமியின் அம்சம். தர்ம தேவதையின் அடையாளம். பால் தருவதால் "கோமாதா' என்று தாயாகப் போற்றுவர். வீட்டில் லட்சுமி கடாட்சம் நிலைக்கவும், தர்மம் தழைக்கவும் பசுவை வீட்டுக்குள் அழைத்துச் செல்கிறார்கள்

**(19291) மதுரையில் உள்ள சிவாலயத்தை மீனாட்சி அம்மன் கோயில் என்று குறிப்பிடுகிறோம். சுவாமி பெயரால் வழங்கப்படாதது ஏன்?**

திருமணம் செய்து கொண்டு கணவன் வீட்டிற்குச் சென்றிருக்கும் நம் பெண்ணைப் பார்க்கச் செல்கிறோம். அப்பொழுது ""என் பெண் வீட்டிற்குச் செல்கிறேன்,'' என்று தான் கூறுவோமே தவிர, ""மாப்பிள்ளை வீட்டிற்கு செல்கிறேன்,'' என்று கூறுவதில்லையே! மதுரையை ஆண்ட மலையத்வஜ பாண்டியனுக்கு மகளாக அவதரித்து மதுரையின் அரசியாக மகுடம் சூடி, திக்விஜயமாக கைலாயத்துக்கே சென்றவள் மீனாட்சி. அந்த வீரத்திருமகளை திருமணம் செய்தவர் சிவன். எனவே, அம்பாளுக்கு இங்கே முக்கியத்துவம் தரப்பட்டிருக்கிறது.

**19292) பிரதோஷம் என்பதன் பொருள் என்ன?**

""ப்ரளீயந்தே அஸ்வின் தோஷா'' என்பது பிரதோஷம் என்ற சொல்லின் வடமொழி இலக்கணம். அதாவது அனைத்து தோஷங்களும் ஒடுங்கும் காலம் என்று பொருள். பகல் முழுவதும் மனிதர்கள் எவ்வளவோ செயல்களைச் செய்கிறார்கள். அவற்றில் நல்லவை, கெட்டவை கலந்தே இருக்கின்றன. அறியாமல் செய்த தீமைகளைப் பொறுத்துக் கொள்ளுதலும், நல்ல செயல்களுக்கு இறைவன் அருள் செய்தலும் இந்த பிரதோஷ காலத்தில் தான்.

# சிறு விளம்பரம்





**மோட்டார் வாகனங்கள்**

**107 டொயோட்டா கார்கள்** விற்பனைக்கு

15 - 8409 டொயோட்டா கொறொல்லா கார். சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்ஸி, 254, கட்டுகஸ்தொட்ட வீதி, கண்டி. 081 2234234 058076



**117 வேன்கள்** விற்பனைக்கு

609254 Nissan Caravan 1987, கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0714542 958. 057504



**122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள்** விற்பனைக்கு

WP BIF-1779 Suzuki Burgman 2019 Motor Cycle கூடிய விலைக் கோரிக்கைக்கு. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ.பே 0711210 810. 057507

Best way to fulfil your Future Dreams

Marriage Proposals

in the

Sunday Observer

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2022ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடையதான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**பீ.கே. பிரபாத் சந்தரகீர்த்தி**
**தொழில் ஆணையாளர் அதிபதி**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு -05.**

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 28ம் திகதி

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய் மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழிலில் | வேலையாள் ஒரு நாளைக்கு ரூபா 1732.80 |

இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில்தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## விண்ணப்பம் தொடர்பான அறிவித்தல்
### கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

**வழக்கிலக்கம்: 104/2022/DTS**
**நடவடிக்கை முறை: சுருக்கம்**
**தன்மை: மரணசாதனம்**
**பெறுமதி ரூ. 74,850.000.00**

இல. 90 எப்பொட்ஸ் வீதி, எப்பொட்ஸ் லேங்லி WD5 0BH ஐக்கிய இராச்சியம் என்ற முகவரியைச் சேர்ந்த இறந்த அனுலா தமயந்தி நிகபொத என்பவரின் இறுதி விருப்பாவணம் தொடர்பில் பிரித்தானிய வேல்ஸ் உயர் நீதிமன்றத்தின் ஒக்ஸ்போர்ட் மாவட்ட மரணசாதன அதிகாரப்பத்திர பதிவகத்தால் ஹேரத் முதியன்செலாகே விஜித லொகு பண்டார நிகபொத என்பவருக்கு 2020 ஜனவரி மாதம் 20ஆம் திகதி வழங்கப்பட்ட மரண சாதனப் பத்திரத்தினை மீள் இலச்சினை இடுவதற்காக குடியியல் நடவடிக்கை சட்டக் கோவையின் XXXVIIIB அத்தியாயத்தின் 554U பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற விண்ணப்பம் தொடர்பில்

ஹேரத் முதியன்செலாகே விஜித லொகு பண்டார நிகபொத

இல. 90, எப்பொட்ஸ் வீதி
எப்பொட்ஸ் லேங்லி WD5 0BH,
ஐக்கிய இராச்சியம்

பின்வரும் அற்றோணி தத்துவக்காரர் மூலம் தோன்றுகின்றார்

அயோமி மானெல் அலுவிஹார
11/4, பார்க் லேன், ராஜகிரிய, இலங்கை.

**மனுதாரர்**

இல. 90, எப்பொட்ஸ் வீதி, எப்பொட்ஸ் லேங்லி ஹேர்ட்ஸ் WD5 0BH ஐக்கிய இராச்சியம் என்ற முகவரியைச் சேர்ந்த (இறந்த) அனுலா தமயந்தி நிகபொத என்பவரின் மரணசொத்து நிறைவேற்றுநரான ஹேரத் முதியன்செலாகே விஜித லொகு பண்டார நிகபொத என்பவருக்கு பிரித்தானிய வேல்ஸ் உயர் நீதிமன்றத்தின் ஒக்ஸ்போர்ட் மாவட்ட மரண சாதன அதிகாரப்பத்திர பதிவகத்தால் வழங்கப்பட்ட மரணசாதனப் பத்திரத்தினை மீள் இலச்சினை இடுவதற்காக குடியியல் நடவடிக்கை சட்டக்கோவையின் XXXVIIIB அத்தியாயத்தின் 554ஆம் பிரிவின் கீழ், இந்த அறிவித்தலின் பிரசுரிப்புத் திகதியிலிருந்து 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்திற்கு விண்ணப்பம் ஒன்று மேற்கொள்ளப்படும் என இத்தால் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

2022ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 09ஆம் திகதியன்று இன்று மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர் சார்பிலான சட்டத்தரணி

**எப். ஜே. என்ட் ஜீ. டி சேரம்**
**மனுதாரர் சார்பிலான சட்டத்தரணி**
**இல. 216, டி சேரம் பிளேஸ், கொழும்பு -10.**

# பெறுகை அறிவித்தல்
## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வணிக, வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சு மேல் மாகாணம்

### 60/70 தரத்திலான தார் வழங்கல்

இவ்வதிகார சபையின் வகவத்த அஸ்ஃபோல்ட் தொழிற்சாலையின் 03 மாத கால தேவைக்காக தார் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதற்கான விண்ணப்பப்படிவங்களைக் கொள்வனவு செய்து கொள்ளல் வேண்டும்.

| கேள்வி இலக்கம் | அஸ்ஃபோட் தொழிற்சாலை | வழங்கல் அளவு கி.கிராம் | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (பதிவு செய்யப் பெற்றுள்ள வழங்குநர்கள் தவிர்ந்த) | கேள்விப் பிணையத்தின் பெறுமானம் ரூபா | |
|---|---|---|---|---|---|
| | | | | காசாக | வங்கி வரைவு ஒன்றாக |
| PRDA/WP/PRO/2022/32 | 60/70 தரத்தின் தார் வகவத்த அஸ்ஃபோட் தொழிற்சாலை | 200,000 | 2,000.00 + பெசேவ (VAT) | 223,000.00 | 446,000.00 |

02. 2022.10.03 முதல் 2022.10.17 வரை வார வேலை நாட்களில் மு.ப. 900 முதல் பி.ப. 2.30 வரை மேற்படி படிவக்கட்டணத்தைச் செலுத்தி இவ்வதிகார சபையின் பெறுகைப் பிரிவில் இதற்கான கேள்விப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையத்தைக் காசாக அல்லது வங்கி வரைவு ஒன்றாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளிற்கு அமைவாக மேற்படி பெறுமானத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. ஒப்பந்தத்தைப் பெற்றுக் கொள்வதற்கான தகைமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக கேள்வித் தொகை 5.0 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் சமயங்களில் கேள்விதாரர் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08ஆம் பிரிவின் கீழ் கம்பனிகள் பதிவாளரினால் வழங்கப்படும் பொது ஒப்பந்தங்கள் பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்தினம் 2022.10.18 அன்று பி.ப. 2.30 என்பதுடன் கேள்விகளைத் திறத்தல் உடனடியாக இவ் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும் அவ்வேளையில் வழங்குநர் அல்லது அவரின் அதிகாரம் அளிக்கப்பெற்ற பிரதிநிதி ஒருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர், பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா).**
**இல. 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**

**தொ.பே. இல. 011-5676903.**

## வத்தளை மாபோல நகர சபை
# பெறுகை அறிவித்தல்

வத்தளை மாபோல நகர சபைக்கு சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் திட்டங்களை பூர்த்தி செய்வதற்காக தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் பிரகாரம் தகைமையுள்ள கேள்விதாரர்களுக்கு கேள்விகளை சமர்ப்பிப்பதற்கான அழைப்புக்கள் விடுக்கப்படுகின்றன.

| தொடர் இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட தொகை (ரூ.) | CIDA பதிவின் எல்லை | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூ. | கேள்விப் பிணை (மீளளிக்கப்படும்) ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | கல்வெட்டிய வாசிப்பு மண்டபத்தை நிர்மாணித்தல் (1ம் கட்டம்) | 2504160.99 | C6 அல்லது அதற்கு மேல் | 1000.00 | 2500.00 |
| 02 | நவலோக்க உதயான புரஎல சுற்றிவர கொங்கிரீட் மதிலை நிர்மாணித்தல் | 1926932.12 | C9 அல்லது அதற்கு மேல் | 1000.00 | 2000.00 |
| 03 | இல. 176பீ கிராம அதிகாரி பிரிவில் ஸ்ரீ விக்ரம பாதையில் இல. 142, 152, 150, 151 ஆகிய இடங்களின் முன்னால் பாதையில் கால்வாயை குளத்து வழி வரை அபிவிருத்தி செய்தல் | 1825929.75 | C6 அல்லது அதற்கு மேல் | 1000.00 | 2000.00 |

01. பெறுகை விபரம்
    i. பெறுகை படிவங்கள் விநியோகித்தல் - 2022.10.03 மு.ப. 9.00 முதல் 2022.10.25 பி.ப. 3.00 வரை
    ii. கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் - 2022.10.26 பி.ப. 3.00 இற்கு முன்
02. பெறுகை ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்காக எழுத்து மூல வேண்டுதல் கடிதமொன்றை நகர சபை பிரதான அலுவலகத்திற்கு சமர்ப்பித்து கேள்விப் படிவங்களை அபிவிருத்திப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்
03. விபரங்களை அறிந்து கொள்வதற்காக வத்தளை, மாபோலை நகர சபையின் அபிவிருத்தி பிரிவில் வேலை அதிகாரியிடம் விசாரித்து அறியலாம் (தொலைபேசி இல. 011 2932132)
04. அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் படிவக் கட்டணத்தை காசாக செலுத்தி இவ் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கேள்விப் படிவங்களின் மூலம் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
05. அவ்வாறே அட்டவணையில் குறிப்பிடப்படும் கேள்விப் பிணையுடன் சம்பந்தப்பட்ட கட்டணத்தை இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி நிறுவனத்திலிருந்து அல்லது நகர சபையில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டு கேள்விப் பிணையை படிவத்தின் மூலம் மாத்திரம் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
06. சரியாகப் பூர்த்தி செய்து பொறியிடப்பட்ட நகல் பிரதிகளுடன் கேள்விப் பத்திரங்களை 2022.10.26 பி.ப. 3.00 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், வத்தளை மாபோல நகர சபை, வத்தளை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
07. சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பத்திரங்களை இரு பிரதிகளுடன் தயாரித்து மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு இரு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் கேள்வி சமர்ப்பிக்கும் ஒரு உறையில் இட்டு அவ் உறையில் இடது பக்க மேல் மூலையில் திட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு வலது பக்கம் கீழே தலைவர், வத்தளை மாபோல நகர சபை என்று குறிப்பிடல் வேண்டும்.
08. கேள்விகளை ஏற்றுக் கொள்ளும் நேரம் முடிவடைந்தவுடன் நகர சபை தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும்.
09. கேள்விகள் திறக்கப்படும் எழுத்து மூல அனுமதி பெற்ற பிரதி நிதியொருவருக்கு மட்டுமே சமுகமளிக்கலாம்.
10. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவின் பரிந்துரையின் பிரகாரம் வத்தளை மாபோல நகர சபைக்கு உரியது.

**டபிள்யூ. மார்க் ஏ. எம். குணசேக்கர**
**தலைவர்,**
**வத்தளை மாபோலை நகர சபை,**
**தொலைபேசி இல. 011 2932275**
2022.09.29

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

01. பின்வரும் சேவைகளை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது கோருகிறார்.

**அட்டவணை - 01**

| | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | விலைக் கோரல் செல்லுபடிக் காலம் | மீளளிக்கப் படாத கேள்விக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|---|
| 01 | மாணவர் விடுதிகளுக்கான House Keeping மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள் - 2022/2023 ஒப்பந்த இல. - USJP/EIS/HKJ/2022/2023 | 2023.01.25 | ரூபா 15,000.00 | ரூபா 830,000.00 | 2023.02.24 |
| 02 | A வலயத்திற்கான திண்மக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் மற்றும் சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/CL/ZA/2022/2023 | 2023.01.25 | ரூபா 15,000.00 | ரூபா 734,000.00 | 2023.02.24 |
| 03 | B வலயத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/CL/ZB/2022/2023 | 2023.01.25 | ரூபா 5,000.00 | ரூபா 305,000.00 | 2023.02.24 |
| 04 | A வலயத்திற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/SEC/ZA/2022/2023 | 2023.01.11 | ரூபா 4,500.00 | ரூபா 239,300.00 | 2023.02.08 |
| 05 | B வலயத்திற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/SEC/ZB/2022/2023 | 2023.01.25 | ரூபா 11,000.00 | ரூபா 430,000.00 | 2023.02.24 |
| 06 | C வலயத்திற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல ஒப்பந்த இல. - USJP/EIS/SEC/ZC/2022/2023 | 2023.01.25 | ரூபா 12,500.00 | ரூபா 512,000.00 | 2023.02.24 |

02. உத்தேச சேவைக் காலம் 365 நாட்களாகும்.
03. இந்தக் விலைக்கோரல் செயற்பாடுகள் தேசிய போட்டி விலைக்கோரல் ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும்.
04. மேற்படி 04, 05, 06 இலக்கத்தின் கீழுள்ள USJP/EIS/SEC/ZA/2022/2023, USJP/EIS/SEC/ZB/2022/2023, USJP/EIS/SEC/ZC/2022/2023 எனும் ஒப்பந்த இலக்கங்களுக்கு 1998ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் அனுமதிப்பத்திரத்தைக் கொண்டுள்ள விலைமனுதாரர்கள் மட்டுமே விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு தகுதியைப் பெறுவர்.
05. இது தொடர்பில் ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 011-2802856 மற்றும் பின்வரும் முகவரியில் 2022-10-03ஆம் திகதி முதல் 2022-10-25ஆம் திகதி வரையான காலத்தில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வாரத்தின் எந்தவொரு வேலை நாளிலும் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
06. இது தொடர்பில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-10-03ஆம் திகதி முதல் 2022-10-25ஆம் திகதி வரையான காலத்தில் மேற்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத கட்டணத்தையும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றையும் செய்வதன் பேரில் முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். இக்கொடுப்பனவுகளை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.30 மணி வரையான வேலை நாட்களில் பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்கு ரொக்கப் பணமாக மட்டும் செலுத்தப்படல் வேண்டும்.
07. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்ட வகையில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும்.

**அட்டவணை இல. 02**

| | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | விலைக் கோரல் முன்னோடிக் கூட்ட நேரம் | விலை மனுக்கள் திறக்கப்படும் நேரம் |
|---|---|---|---|
| 01 | மாணவர் விடுதிகளுக்கான House Keeping மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகள் - 2022/2023 ஒப்பந்த இல. - USJP/EIS/HKJ/2022/2023 | 2022.10.13 மு.ப.10.00 மணிக்கு | 2022.10.26 பி.ப.2.30 மணிக்கு |
| 02 | A வலயத்திற்கான திணமக் கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துதல் மற்றும் சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/CL/ZA/2022/2023 | 2022.10.13 மு.ப.11.00 மணிக்கு | 2022.10.26 பி.ப.2.30 மணிக்கு |
| 03 | B வலயத்திற்கான சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/CL/ZB/2022/2023 | 2022.10.13 மு.ப.11.00 மணிக்கு | 2022.10.26 பி.ப.2.30 மணிக்கு |
| 04 | A வலயத்திற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/SEC/ZA/2022/2023 | 2022.10.14 மு.ப.10.30 மணிக்கு | 2022.10.26 மு.ப.10.30 மணிக்கு |
| 05 | B வலயத்திற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/SEC/ZB/2022/2023 | 2022.10.14 மு.ப.10.30 மணிக்கு | 2022.10.26 மு.ப.10.30 மணிக்கு |
| 06 | C வலயத்திற்கான பாதுகாப்பு சேவைகளை வழங்குதல் ஒப்பந்த இல. - USJP/EIS/SEC/ZC/2022/2023 | 2022.10.14 மு.ப.10.30 மணிக்கு | 2022.10.26 மு.ப.10.30 மணிக்கு |

08. ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் நிர்வாகக் கட்டிடத்திலுள்ள பணியாட்தொகுதியினர் கூட்ட மண்டபத்தில் மேற்குறிப்பிடப்பட்ட திகதிகளில் விலைமனுப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.
09. விலைமனுப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ஒப்பந்த இலக்கம், விலைக்கோரலின் விபரம் மற்றும் திறக்கப்படும் திகதி என்பன குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் படிவங்களை 2022-10-26ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் கங்கொடவில, நுகேகொடயில் அமைந்துள்ள ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள்) அவர்களுக்கு பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கலாம் அல்லது மேற்குறிப்பிடப்பட்ட அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலே விலைமனுதாரருக்கு திருப்பியனுப்பப்படும். தாமதம் தொடர்பில் தபாலில் அனுப்பப்பட்டதை உறுதி செய்யும் சாட்சிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதி (ஒரு விலைமனுதாரருக்கு ஒரு பிரதிநிதி என்ற விகிதத்தில்) விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.
10. இது தொடர்பில் திணைக்கப் பெறுகைக் குழுவினரே இறுதித் தீர்மானத்தை மேற்கொள்வர்.
11. விலைமனுக்களுடன் விலைமனுத் தரவுகளில் வழங்கப்பட்டுள்ள பெறுமதிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் துணை வேந்தரின் பெயருக்கு இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
12. தெரிவுசெய்யப்பட்ட சேவை வழங்குநர் நாட்டில் நிலவும் தொழிலாளர் சட்டத்திற்கு அமைவாக செயற்படுதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு இயைபான முகவரியானது பின்வருமாறாகும்.

கேள்விப் படிவங்களைப் பரீட்சித்தல், கேள்விப் படிவங்களைச் சமர்ப்பித்தல், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை
**ஒப்படைத்தல்**
**உதவிப் பதிவாளர் / நிறுவனம் (தகவல் மற்றும் சேவைகள் பிரிவு),**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில,**
**நுகேகொடை.**

**விலைமனுக்கள் திறக்கப்படும் முகவரி:**
**நிர்வாகக் கட்டிடத்தின் பணியாட்தொகுதியினர் கூட்ட அறை,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம், கங்கொடவில,**
**நுகேகொடை.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.**
**2022-09-29.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் (NCB)**

**கல்வி அமைச்சு**

## பாடசாலை சீருடைத் துணிகளுக்கான பெறுகை – 2023

**(உள்நாட்டு நெசவு மற்றும் செயல்முறை)**

**ஒப்பந்த இல. ED/07/101/20/2022-G-08**

பின்வரும் அட்டவணையின் பிரகாரம் உள்நாட்டு துணி உற்பத்திக்காக கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்துகொண்டுள்ள மற்றும் துணி நெசவு வசதிகளைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை கல்வி அமைச்சின் சார்பில் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையான பெறுகைக் குழுவின் (SCAPC) தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | துணிகளின் வகை | தேவையான அளவு (மீற்றர்கள்) | விலைக்கோரலுக்கான ஆகக் குறைந்த அளவு (மீற்றர்கள்) | விலைக் கோரல் பிணை முறி |
|---|---|---|---|---|
| 01 | வெள்ளை நிற சேர்ட் / சட்டைத் துணி | 2,766,900 | 50,000 | 20,000,000.00 |
| 02 | வெள்ளை நிற காற்சட்டைத் துணி | 642,000 | 50,000 | |
| 03 | நீல நிற காற்சட்டைத் துணி | 300,000 | 50,000 | |
| 04 | அங்கித் (Robe) துணி | 91,110 | 25,000 | |
| 05 | மஞ்சள் / வெளிர்நீல நிற சேர்ட் | 15,500 | 5,000 | |
| 06 | பிரவுண்/மெரூன் காற்சட்டைத் துணி | 15,500 | 5,000 | |

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி விலைகோரல் (NCB) மூலம் நடைமுறைப்படுத்தப்படும்.
3. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, 'இசுறுபாய' கல்வி அமைச்சின் 5ம் மாடியிலுள்ள பெறுகைப் பிரிவிலிருந்து 2022-10-03ஆம் திகதி முதல் 2022-10-21ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
4. தகைமைத் தேவைப்பாடுகளின் உள்ளடங்குவன: கைத்தொழில் அமைச்சின் கீழ் பதிவு செய்துகொண்டுள்ள மற்றும் துணி நெசவு வசதிகளைக் கொண்டுள்ள உற்பத்தியாளர்கள். மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.
5. மீளளிக்கப்படாத 100,000.00 கட்டணத்தை செலுத்துவதன் பேரில் மேற்கூறிய முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் செய்வதன் மூலம் கல்வி ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
6. விலைமனுக்களை (4) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது முன் ஒப்படைத்தல் வேண்டும். விலைமனுக்களை பதிவுத் தபாலில் அனுப்ப விரும்பாத விலைமனுதாரர்கள் மேற்கூறிய முகவரியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இதன் பின் பின்வரும் முகவரிக்கு தாமாக வருகை தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2022-10-13ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கல்வி அமைச்சின் 5ஆம் மாடியிலுள்ள சபை அறையில் இடம்பெறும். இதில் கலந்துகொள்ளுமாறு விலைமனுதாரர்கள் அழைக்கப்படுகின்றனர்.

**செயலாளர்,**
**கல்வி அமைச்சு,**
**''இசுறுபாய'', பத்தரமுல்ல.**
**SCAPC தலைவர் சார்பில்.**
**2022-10-03**

# இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு

## நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2023-2042 (வரைவு) பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டல்

**(2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழான பொது அறிவிப்பு)**

2009ஆம் ஆண்டின் 20ஆம் இலக்க இலங்கை மின்சாரச் சட்டம் (திருத்தப்பட்டது) இதன் மூலம் இலங்கை மின்சார சபையால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட நீண்டகால மின்சாரஉற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2023-2042 வரைவு தொடர்பான பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டலை நடத்துவதற்கான இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு (ஆணைக்குழு) தனது முடிவை அறிவிக்கிறது.

2023-2042 திட்டமிடல் காலத்திற்கு மின்சாரசபையால் நடத்தப்பட்ட சமீபத்திய மின்சார விரிவாக்க திட்டமிடல் ஆய்வுகளின் முடிவுகளின் அடிப்படையில் இந்தத் திட்டம் தொகுக்கப்பட்டுள்ளது. இந்தத்திட்டம், நாட்டில் தற்போதுள்ள மின்னுற்பத்திமுறை, எதிர்கால மின்சாரதேவை மற்றும் எதிர்கால மின்னுற்பத்தி விருப்பங்கள் பற்றிய விரிவான பார்வையை வழங்குகிறது. இது தலைமுறை திட்டமிடல்முறை, கணினி தேவை முன்னறிவிப்பு மற்றும் முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான முதலீடு மற்றும் செயல்படுத்தல் திட்டம் பற்றிய விரிவான தகவல்களை வழங்குகிறது.

திட்டத்தின் நோக்கம், அடிப்படையில் பெறப்பட்ட குறைந்த செலவில் உள்ள மின்னுற்பத்தி நிலைய வரிசையை ஏற்றுக்கொள்வதை பரிந்துரைப்பது மற்றும் ஆற்றல் பற்றாக்குறையைத் தவிர்க்க திட்டத்தை செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதும் ஆகும். மேலும், நம்பகத்தன்மை தேவைகளை (மின் பற்றாக்குறையை குறைக்க) மிகவும் சிக்கனமான முறையில் பூர்த்தி செய்ய திட்டமிடல் காலம் முழுவதும் (அடுத்த 20ஆண்டுகள்) போதுமான அளவு நிறுவப்பட்ட திறனை பராமரிக்க, மின்சார உற்பத்தி திறனை விரிவுபடுத்துவதற்கான சாத்தியமான விருப்பங்களை திட்டம் ஆராய்ந்து மதிப்பீடு செய்கிறது.

பல்வேறு சூழ்நிலைகளில் பல்வேறு முதலீட்டு விருப்பங்களை ஆராய்ந்து மதிப்பீடு செய்வதன் மூலம், தேசிய கொள்கை நோக்கங்களுக்கு ஏற்ப தகவலறிந்து முடிவுகளை எடுப்பதில் முடிவெடுப்பவர்களை எளிதாக்குவதற்கான வழிகாட்டியாக இந்தத் திட்டம் செயல்படுகிறது.

பொதுமக்கள் அனைவரும் நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2023-2042 வரைவு தொடர்பான பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டலுக்காக பின்வரும் விடயங்களில் ஏதேனும் இருந்தால் எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளைச் சமர்ப்பிக்குமாறு அழைக்கப்படுகிறார்கள், மேலும் அத்தகைய சமர்ப்பிப்புகளை ஆணைக்குழு பரிசீலிக்கலாம் அல்லது தேவைப்பட்டால் வாய்மொழிமூல கருத்து வழங்குமாறு குறித்த தரப்பினரைக் கோரலாம். பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டல் நிகழ்வில் வாய்மொழிமூல சமர்ப்பிப்புகளை மேற்கொள்ளமுடியும்.

- **மின்சாரத் தேவை கணிப்பு**
- **முன்மொழியப்பட்ட தரப்பின் மின்னுற்பத்தி தொழில்நுட்பங்கள், அவற்றின் செலவுகள் மற்றும் செயல்திறன் அளவுருக்கள்**
- **திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் நம்பகத்தன்மையான அளவுகோல்கள்**
- **எரிபொருள் விலைகள் பற்றிய முன்னறிவிப்பு**
- **சலுகை விலை**
- **திட்டத்தைத் தயாரிக்கப் பயன்படுத்தப்படும் மாதிரி கருவிகள்**
- **முன்மொழியப்பட்ட (அடிப்படை) மின் உருவாக்கத் திட்டம்/ கட்டமைப்புடன் சேர்த்தல்**
- **மின்னுற்பத்திக்கான எரிபொருள் கலவை மற்றும் பன்முகப்படுத்தல்**
- **உள்நாட்டு வளங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல்**
- **எதிர்கால மின்னுற்பத்தி மற்றும் சுற்றுச்சூழல் தாக்கம்**

2002ஆம் ஆண்டின் 35ஆம் இலக்க இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு சட்டத்தின் 17வது பிரிவின் கீழ் ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்கீழ் வாய்மொழிமூல சமர்ப்பிப்புகளுக்கான அமர்வு நடத்தப்படும். ஆர்வமுள்ள தரப்பினருக்கு (நேரம் வழங்கப்பட்டு) வாய்ப்பு வழங்கப்படும். மேற்கூறிய அமர்வில் தங்கள் கருத்துக்களை முன்வைக்க வேண்டும். எனவே, எழுத்துமூல சமர்ப்பிப்புடன் அமர்வில் பங்கேற்பதற்கான உங்கள் ஆர்வத்தை நீங்கள் குறிப்பிடலாம். திகதி, நேரம் மற்றும் இடம் போன்ற அறிவிப்பு மூலம் பொதுமக்களுக்கு உரிய நேரத்தில் பின்னர் தெரிவிக்கப்படும். இணையவழி முறைகள் மூலம் இந்த வாய்வழி கருத்து அமர்வில் பங்கேற்கலாம்.

நீண்டகால மின்னுற்பத்தித் திட்ட வரைவை இங்கே தரவிறக்கலாம் www.pucsl.gov.lk/notices

எழுத்துப்பூர்வ சமர்ப்பிப்புகளை **21 அக்டோபர் 2022 ஆம் திகதிக்கு முன்** பின்வரும் முறைமைகள் மூலம் சமர்ப்பிக்கலாம்

**இணையத்தை** அணுகுவதன் மூலம் www.pucsl.gov.lk
**மின்னஞ்சல்** முகவரி: consultation@pucsl.gov.lk
உத்தியோகபூர்வ **முகநூல்** கணக்கை அணுகுவதன் மூலம்: www.facebook.com/pucsl
அல்லது **எழுதவும்**

**நீண்டகால மின்சார உற்பத்தி விரிவாக்கத் திட்டம் 2023-2042 பற்றிய பங்குதாரர்களின் ஆலோசனை கேட்டலுக்காக**
**இலங்கை பொது பயன்பாட்டு ஆணைக்குழு,**
**06வது மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்,**
**இல. 28, புனித மைக்கேல் வீதி, கொழும்பு 03.**

**தொலைபேசி:** (011)2392607/8 **தொலைநகல்:** (011)2392641

மேலதிக தகவல்கள், விளக்கங்களுக்கு 0770126254 என்ற எண்ணில் திரு.சமீர அதிகாரம் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

திகதி: 2022.10.03

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

# விலைமனுக்கோரல்

## இரத்மலானை, (CIAR) கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலுள்ள விமானக் கொட்டகை மற்றும் நிலப்பரப்பு இடத்தின் குத்தகைக்காக தேசிய போட்டி ரீதியில் விலைமனுக் கோரல்

**விலைக்கேள்வி இலக்கம். 007/T/2022)**

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE LEASE OF AIRCRAFT HANGAR AND LAND SPACE AT COLOMBO INTERNATIONAL AIRPORT RATMALANA (CIAR)**

05 வருட காலத்திற்கு இரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலுள்ள விமானக் கொட்டகை மற்றும் நிலப்பரப்பு இடத்தின் குத்தகைக்காக கொழும்பு, இரத்மலானையைத் தளமாகக் கொண்ட சிவில் விமான சேவைகள் தொடர்பான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து பணிப்பாளர் நாயகத்தின் தேவையான அனுமதிகளைப் பெற்ற தகுதியும் உள்ள விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன. (விலைமனுதாரர்கள் விமானக் கொட்டகை மற்றும் நிலப்பரப்பு இடத்திற்காக முழுவதற்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு விலைக்கோரலாம்)

இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் விலைக்கேள்வி ஆவணங்களுடன் வெளியிடப்படும். அக்குறித்த விலைக்குறிப்பீட்டு ஆவணங்கள், 2022-11-01ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிவரையிலான இடைப்பட்ட காலப்பகுதிக்குள் எழுத்தாலான வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு மீளளிக்கப்படாத 15,000/= ரூபா பணம் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனையக் கட்டிடத்தில், 02ஆம் மாடியில், 37ஆம் இலக்க அறையில் அமைந்துள்ள வர்த்தகம் மற்றும் உடைமைகள் பிரிவில் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மீளளிக்கப்படாத 15,000/= ரூபா கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் உடைமைகள் பிரிவுத் தலைவருக்கு எழுத்துமூலமான கோரிக்கையொன்றைச் செய்வதன் பேரில் விலைமனுக்களைக் கொள்வனவு செய்யலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் உடைமைகள் பிரிவுத் தலைவரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான விலைக்கேள்வி பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கேள்வி பிணைமுறி விலைக்கேள்வி திறக்கப்பட்ட திகதியிலிருந்து 150 நாட்கள் செல்லுபடியான விதத்தில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைக்குள்ளே செயல்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது பிணைமுறியாக அல்லது பணமாக முன்வைக்க முடியும்.

விலைக்கேள்விகளை முன்வைப்பது தொடர்பான காரணங்களைத் தெளிவுபடுத்தும் கூட்டம் மற்றும் இடத்தை பார்வையிடல் 2022-10-21ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு இரத்மலானை கொழும்பு சர்வதேச விமான நிலையத்திலுள்ள விமானக் கொட்டகை மற்றும் நிலப்பரப்பு இடத்தில் இடம்பெறும். முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகளை தலைவர், கேள்விப்பத்திர சபை இலக்கம் 01, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு நேரடியாக கையளிக்கலாம். விலைமனுக்கள் 2022-11-02ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் எனப்துடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும்.

விலைக்கேள்விகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் உடைமைகள் பிரிவுத் தலைவரிடமிருந்து 011-2264002 அல்லது 011–2252744 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.cp@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனமானது, கூறப்பட்டவற்றை நிராகரிப்பதில், ஒன்றுசேர்த்தல் அல்லது அகற்றிவிடுதல் ஆகியவற்றின் கருத்துப்படி, எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் ஏதேனும் அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிறுவனத்தின் நலனுக்காக நிராகரிக்கும் உரிமையை தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

**The Housewives' companion**
**Classifieds on**
**Daily News**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

# விலைமனுக்கோரல்

## கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளியேறும் நடைபாதை வழியிலுள்ள கடைகளின் செயற்பாட்டிற்காக தேசிய போட்டி ரீதியில் விலைமனுக் கோரல்

**விலைக்கேள்வி இலக்கம். 049/T/2022)**

**(NATIONAL COMPETITIVE BIDDING FOR THE OPERATION OF SHOPS IN THE WALKWAY AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT (BIA), KATUNAYAKE**

05 வருட காலத்திற்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள வெளியேறும் நடைபாதை வழியிலுள்ள ஆறு (06) கடை இடவசதி செயற்பாட்டிற்காக பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள், அமைப்புகள் அல்லது தனிநபர்களிடமிருந்து விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

| | கடைகளின் வகுதிகள் | இடத்தின் இல. | பரப்பளவு (சதுர அடிகள்) |
|---|---|---|---|
| i. | இயற்கை உணவுகள் மற்றும்/அல்லது இலங்கை வாசனைத் திரவியங்கள் மற்றும்/ அல்லது தகரத்திலடைக்கப்பட்ட உணவுகள் | 06 மற்றும் 08 | 355 |
| ii. | கைப்பணிப் பொருட்கள் மற்றும்/அல்லது ஆடைகள் மற்றும்/அல்லது துணைப்பாகங்கள் | 09 | 134 |
| iii. | உள்நாட்டு ஒப்பனைப்பொருட்கள் மற்றும்/அல்லது உள்நாட்டு வாசனை பூச்சுகள் மற்றும்/அல்லது போர்சலின் மற்றும்/அல்லது மட்பாண்ட உற்பத்திகள் | 13 | 134.0 |
| iv | தென்னை மற்றும்/அல்லது பனை மற்றும்/அல்லது ஏனைய பனை உற்பத்திகள் | 17 | 163.0 |
| v. | பழச்சாறு மற்றும் பால் பார் மற்றும்/அல்லது புதிய பழங்கள் ∴ மற்றும்/அல்லது ஐஸ்கிறீம் கோணர் மற்றும்/அல்லது ஏனைய இனிப்பு பொருட்கள் - உள்நாட்டு | 23 | 209.0 |

இதற்கான விதிமுறைகளும் வரையறைகளும் மற்றும் குறித்த ஏனைய தகவல்கள் விலைக்கேள்வி ஆவணங்களுடன் வெளியிடப்படும். அக்குறித்த விலைக்குறிப்பீட்டு ஆவணங்கள், 2022 ஒக்டோபர் 25ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 09.00 மணியிலிருந்து பி.ப 2.30 மணிவரையிலான இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கடிதத் தலைப்பில் எழுத்தாலான வேண்டுகோள் முன்வைக்கப்பட்டு மீளளிக்கப்படாத 5,000/= ரூபா பணம் செலுத்தி, கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பயணிகள் முனையக் கட்டிடத்தில், 02ஆம் மாடியில், 31ஆம் இலக்க அறையில் அமைந்துள்ள வர்த்தகம் மற்றும் உடைமைகள் பிரிவு அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் www.airport.lk என்ற இணையதளத்திலிருந்தும் மீளளிக்கப்படாத 5,000/= ரூபா கட்டணத்தை நிகழ்நிலை (online) மூலமாகச் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் உடைமைகள் பிரிவுத் தலைவரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

நிறுவனத்தினால் வெளியிடப்படுகின்ற விலைக்கேள்வி மாதிரிப்படிவங்களில் மாத்திரம் விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், விலைக்கோரல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியான விலைக்கேள்வி பிணை முறியைச் சமர்ப்பித்தல் வேண்டும். விலைக்கேள்வி பிணைமுறி விலைக்கேள்வி திறக்கப்பட்ட திகதியிலிருந்து 150 நாட்கள் செல்லுபடியான விதத்தில் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் அல்லது இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைக்குள்ளே செயல்படும் உரிமம் பெற்ற விஷேட வங்கியொன்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வங்கி வரைவாக அல்லது பிணைமுறியாக அல்லது பணமாக முன்வைக்க முடியும்.

விலைக்கேள்விகளை முன்வைப்பது தொடர்பான காரணங்களைத் தெளிவுபடுத்தும் கூட்டம் மற்றும் இடத்தை பார்வையிடல் 2022 ஒக்டோபர் 14ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும். முத்திரை குறியிடப்பட்ட விலைக்கேள்விகளை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க கேள்விப்பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விலைமனுக்கள் 2022 ஒக்டோபர் 26ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் அதன் பின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கீட்டுத்தொடர் முகாமைத்துவ பிரிவில் திறக்கப்பட்டு பகிரங்கமாக வாசிக்கப்படும். விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பியனுப்பப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களினால் முறையாக அங்கீகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கேள்விகள் தொடர்பான அனைத்து விபரங்களையும் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் பயணிகள் முனையக் கட்டிடம், 2ஆம் மாடி, 31ஆம் இலக்க அறையிலுள்ள வர்த்தகம் மற்றும் உடைமைகள் பிரிவின் 011-2264006 அல்லது 011–2264000 எனும் தொலைபேசி இலக்கங்களில் அல்லது head.cp@airport.lk எனும் மின்னஞ்சலினூடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**




## கௌரவ ஜனாதிபதி அவர்களின் வாழ்த்துச் செய்தி



தேசம் ஒன்றாக மீண்டும் எழுந்து நிற்கும் முயற்சியில் நாம் இருக்கும் வேளையிலேயே 36ஆவது உலக வசிப்பிட தின கொண்டாட்டத்தில் நாம் ஈடுபட்டுள்ளோம்.

சுதந்திரம் பெற்று அரை நூற்றாண்டு தாண்டிய நாடு ஒன்றாக, இவ்வாறான நிலைக்கு முகம்கொடுப்பது பற்றி நாம் அனைவரும் சுய விமர்சனத்தில் ஈடுபட வேண்டும்.

எம்மை விடவும் சமூக மற்றும் பொருளாதாரத்தில் கீழ் நிலையில் உள்ள பிராந்திய மற்றும் உலகின் பல நாடுகளும் தற்போது எம்மை பின்தள்ளி சென்றுள்ளன. உற்பத்தி அடிப்படையில் ஏற்றுமதிப் பொருளாதாரம் மற்றும் பேண்தகு அபிவிருத்தியை பெறுவதற்கு காரணமாகின்ற, நீண்ட கால தேசிய கொள்கைகள் இன்றி நாடொன்றை மேம்படுத்துவது கடினமான பணியாகும்.

அடிப்படை மனிதத் தேவை ஒன்றாக கருதப்படும் வீடு ஒன்று பற்றிய கனவை உண்மையாக்குவதற்கு சம்பிரதாயமான சிந்தனையில் இருந்து விலகும் தேவை தாமதம் இன்றி மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இயற்கை வளங்களைக் கொண்ட நாடொன்றில் வசிக்கின்ற நாம், 36 ஆண்டுகளாக ஒரு அடிப்படை தேவையையேனும் நிறைவேற்ற முடியாமல் இருப்பது தொடர்பில் மிகவும் ஆழமாக சிந்திக்க வேண்டியுள்ளது. எமது பொருளாதாரம் மற்றும் அதற்கு ஒத்துழைப்பு வழங்கும் தேசிய கொள்கை வகுப்பில் நிலையான முறைமை ஒன்று தொடர்பில் நாம் இன்னும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரவில்லை. வறுமை நிலை நாடொன்றுக்கு ஆபரணமாக இருக்காது. நாம் அதில் இருந்து விடுபட வேண்டும்.

குடும்பத்தில் அன்புக்குரியவர்களுடன் தமது வீட்டில் மகிழ்ச்சியாக வாழ்கின்ற சமூகம் ஒன்றை கட்டி எழுப்புவதற்கு அவசியமாயின், நாட்டுக்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படுவது அவசியம் என்று நான் பார்க்கிறேன்.

எழுகின்ற பிரச்சினைகள் எவ்வாறானதாக இருந்தபோதும் அதற்கு வெற்றிகரமாக முகம்கொடுக்க முடியுமான நீண்ட கால கொள்கை, சட்டம் மற்றும் நிகழ்ச்சியை தயாரிப்பது காலத்தின் தேவையாகும். கிராமம் மற்றும் நகரில் வாழும் குறைந்த வருமானம் ஈட்டும் குடும்பங்களின் தேவைகளை செயல்திறன் கொண்டதாக மற்றும் மனிதாபிமான ரீதியில் தீர்க்க வேண்டும். யாரையும் கைவிடாத, ஏற்றத்தாழ்வற்ற, பின்வாங்காதவர்களைக் கொண்ட சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு ஆழமாக ஆய்வு செய்யும் தேவையை மீண்டும் ஒருமுறை நினைவூட்டி 2022 உலக வசிப்பிட தின கொண்டாட்டத்திற்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துகளை தெரித்துக்கொள்கிறேன்.

**ரனில் விக்கிரமசிங்க**
ஜனாதிபதி, இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

## கௌரவ பிரதமரின் ஆசிச் செய்தி



வீடொன்றின் உரிமை என்ற உணர்வுபூர்வமான சொல்லாடல், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சினால் இம்முறை உலக வசிப்பிட தின கொண்டாட்டத்தில் அதிகம் அர்த்தபூர்வமாக்கப்படுகிறது. வீடொன்றின் உரிமை குடும்பம் ஒன்றின் அமைதியான வாழ்வாகும்.

வீடமைப்பு அபிவிருத்தியின் புதிய போக்கை நோக்கி பயணிக்கும்போது வீட்டு உரிமை பற்றிய பிரச்சினைகளை தீர்த்து இவ்வாறு செயற்படுவது மிக முக்கியமாகும்.

"வேறுபாட்டை செய்யாதிருப்போம், எந்த ஒருவரையும் எந்த இடத்தையும் கைவிடாது பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளில், கொவிட்-19, காலநிலை மற்றும் அண்மைக்கால பிரச்சினைகள் என சிக்கல்களால் அதிகரித்து வரும் ஏற்றத்தாழ்வு மற்றும் ஆபத்துகளுக்கு முக்கிய அவதானம் செலுத்தி ஐக்கிய நாடுகள் சபை இம்முறை உலக வசிப்பட தினத்தை கொண்டாடுகிறது.

என்றாலும் நாம் கொவிட் பெருந்தொற்றுக்குப் பின்னர் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலேயே உலக வசிப்பிட தினத்திற்கு காலெடுத்து வைக்க வேண்டி ஏற்பட்டுள்ளது. பல காலப்பகுதிகளில் பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து, நடைமுறை ரீதியில் அதற்கு முகம்கொடுத்து தீர்ப்பதற்கு ஒரு நாடாக எம்மால் முடிந்துள்ளது. இந்த பிரச்சினைக்கு மத்தியிலும் அந்த இலக்குடன் பயணிக்கும் எமக்கு உலக வசிப்பிட தினத்தின் தொனிப்பொருளை ஏற்பது கடினமாக இருக்காது.

கௌரவ ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்க அவர்களின் ஆசிர்வாதத்துடன், புதிய பாதையை நோக்கியதான இந்த செயற்திட்டத்தின் அடிப்படையில் செயற்படுகின்ற துறைசார் அமைச்சர் கௌரச பிரசன்ன ரணதுங்க அவர்கள், கௌரவ தேனுக விதானகமகே, கௌரவ அருந்திக்க பெர்னாண்டோ ஆகிய இரு இராஜாங்க அமைச்சர்கள், தொடர்புடைய அனைத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அனைவருக்கும் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

அனைவருக்கும் நிழல் தரும் வகையில் சரியான கால வரையறைக்குள் குறிப்பிட்ட இலக்கை நோக்கி நெருங்குவதற்கு அனைவருக்கும் முடியுமாகும் என்று எதிர்பார்க்கிறேன்.

**தினேஷ் குணவர்தன**
பிரதமர், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

## ஐ.நா பொதுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தி



ஒவ்வொரு ஆண்டும், உலக வாழ்விட தினம் மனித குடியிருப்புகளின் நிலை குறித்து கவனம் செலுத்துகிறது.

இந்த ஆண்டு - "இடைவெளியை மனதில் கொள்ளுங்கள். யாரையும் விட்டுவிடாதீர்கள், எந்த இடத்தையும் விட்டுவிடாதீர்கள் "என்ற தொனிப்பொருளில் - உலகெங்கிலும் உள்ள வாழ்க்கை நிலைமைகளில் ஏற்றத்தாழ்வுகளைக் களைவதில் கவனம் செலுத்துகிறது.

காலநிலை மாற்றங்கள் முதல் கொவிட்-19 வரையிலான சவால்கள் தொடர்ச்சியானவை, மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்களை கடுமையாக தாக்குகிறது.

விரைவான மற்றும் திட்டமிடப்படாத நகரமயமாக்கல் இந்த சவால்களில் பலவற்றை மோசமாக்குகிறது.

இன்று, ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்கள், போதிய வீடுகள் இல்லாத, நெரிசலான குடியிருப்புகளில் வாழ்கின்றனர் - மேலும் அந்த எண்ணிக்கை ஒவ்வொரு நாளும் அதிகரித்து வருகிறது.

மின்சாரம், தண்ணீர், சுகாதாரம், போக்குவரத்து மற்றும் பிற அடிப்படை சேவைகளுக்கான அணுகலுடன் - அனைவருக்கும் மலிவு விலையில் வீடுகளை வழங்க எங்களுக்கு அதிக அவசரமாக அதிக முதலீடு தேவை. யாரையும் விட்டுவிடக் கூடாது என்பதே நிலையான வளர்ச்சிக்கான 2030 நிகழ்ச்சி நிரலின் முக்கிய உறுதிமொழியாகும்.

இதன் பொருள் நகரங்களை பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பில் ஏற்கனவே உள்ள இடைவெளிகளை குறைப்பது: இது உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்கும் இடையே நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களுக்கிடையில் வளர்ந்த மற்றும் வளரும் பகுதிகளுக்கிடையிலான இடைவெளி என்பன குறைக்கப்பட வேண்டும்.

உள்ளடக்கிய, பாதுகாப்பான, மீள்திறன், மற்றும் நிலையான நகரங்கள் மற்றும் மனித குடியிருப்புகள் முக்கியமானவை - மற்றும் உள்ளூரிலான நடவடிக்கை முக்கியமானது.

நகரங்கள் மற்றும் சமூகங்களுக்கிடையிலான ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கும், அனைவருக்கும் போதுமான தங்குமிடத்தை உறுதி செய்வதற்கும், காலநிலை நெருக்கடியைச் சமாளிப்பதற்கும், பசுமையான மற்றும் உள்ளடக்கிய தொற்றுநோய் மீட்சிக்கு வழிவகுப்பதற்கும் புதுமையான தீர்வுகளை முன்னெடுக்க முடியும்.

மக்களை மையமாகக் கொண்ட கொள்கைகளைப் பின்பற்றுதல், நுகர்வு மற்றும் உற்பத்தியின் நிலையான வடிவங்களை ஊக்குவித்தல் மற்றும் பசுமை மற்றும் நெகிழ்ச்சியான உள்கட்டமைப்பிற்கு முன்னுரிமை அளிப்பது ஆகியவை இதில் அடங்கும்.

உலக வாழ்விட தினத்தில், ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ளும் பொறுப்பை நிறைவேற்ற உறுதிமொழி எடுப்போம்.

**என்டோனியோ குடரேஸ்**
ஐ.நா. பொதுச் செயலாளர்

## அமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தி



உலக மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமான மக்கள் நகர சூழலில் வாழ்கின்றனர். 2030 ஆம் ஆண்டாகும்போது மக்கள்தொகையில் 60% நகர மக்களாக இருக்க கூடும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. இந்த உலக நிலை இலங்கைக்கும் பொதுவானது.

இந்த நிலை காரணமாக முறையற்ற குடியேற்றங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் போதுமானதாக இல்லாமை, வீடுகள் பற்றாக்குறை, காணி உரிமை பற்றி பிரச்சினைகள், வாகன நெரிசல், வளி மாசடைதல், சுற்றுச்சூழல் மாசு, சுகாதார மற்றும் துப்புரவேற்பாடு, வேலைவாய்ப்பு மற்றும் நிலம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது போன்ற சிக்கல்கள் பலதுக்கும் எதிர்காலத்தில் உலக மக்களுக்கு மற்றும் இலங்கை மக்களுக்கு முகம்கொடுக்க வேண்டி ஏற்படும்.

நகரமயமாக்கலின் விளைவாக இவ்வாறான சிக்கல்களுக்கு முகம்கொடுப்பதற்கு ஏற்படுவதால் முன்னெச்சரிக்கையுடன் செயற்படுவதன் ஊடாக எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களை குறைப்பது எமது அடிப்படை நோக்கமாகும். இதனால், முறையான தரப்படுத்தப்பட்ட வகையில் வீடமைப்பு மற்றும் முறையற்ற குடியிருப்புகளை முறைப்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டி உள்ளது.

இந்த சிக்கலை அடையாளம் கண்டு கொழும்பை அடிப்படையாகக் கொண்டு நகர்புற குறைந்த வசதிகளைக் கொண்ட மக்களுக்கு தரப்படுத்தப்பட்ட தொடர்மாடிக் குடியிருப்பு ஒன்றில் வாழும் உரிமையை உறுதி செய்யும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு தொடக்கம் படிப்படியாக செயற்படுத்தப்படுகின்ற இந்தத் திட்டத்தின் மூலம் தற்போது 7619 குடும்பங்கள் முறையான குடியிருப்புகளில் வாழும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு முடிவில் மேலும் 20192 குடும்பங்கள் முறையான குடியிருப்புகளில் வாழும் சூழல் ஒன்றை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு இணையாக ஏனைய பகுதிகளிலும் நகர்புறங்களில் வசிக்கின்ற குறைந்த வசதிகளைக் கொண்ட குடியிருப்புகளின் மக்களுக்காகவும் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இவை அனைத்து இடம்பெறுவது உலகளாவின கொவிட் பெருந்தொற்றுக்கு மத்தியில் நாடு முகம்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காணும் சூழலுக்கு மத்தியிலாகும். அதன்படி பொருளாதார நெருக்கடிக்கு நிரந்த தீர்வை பெற்றுத் தருவதற்கு இணையாக மக்களின் வீட்டுத் தேவை உட்பட ஏனைய சேவைகள் மற்றும் வசதிகளை மேம்படுத்துவது தொடர்பில் அரசு அவதானம் செலுத்தி உள்ளது.

"ஏற்றத்தாழ்வு காண்பிக்காது – யாரையும் எந்த இடத்திலும் கைவிடாது பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ் இம்முறை 2022 உலக வசிப்பிட தினம் கொண்டாடப்படுகிறது. கொவிட் 19, காலநிலை மற்றும் மோதல்கள் என்ற மும்முனை பிரச்சினைகள் ஊடாக வளர்ந்து வரும் முரண்பாடு மற்றும் சிக்கல்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி அந்தப் பிரச்சினைகளை தோற்கடித்து மக்களின் வசிப்பிட சிக்கலுக்கு விரைவாக தீர்வு வழங்க உறுதிபூணுவோம்.

**பிரசன்ன ரணதுங்க**
அமைச்சர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு

## வீடமைப்பு இராஜாங்க அமைச்சரின் வாழ்த்துச் செய்தி



இலங்கையின் பல கிராமப் பகுதிகளிலும், கொழும்பு உட்பட நகர பகுதிகளிலும் நிரந்த வீடு ஒன்றை அமைப்பதற்கு முடியாதிருக்கும் குறிப்பிடத்தக்க மக்கள் வாழ்கிறார்கள். அவர்களுக்கு நிழல் கொடுப்பதற்கு அரசாங்கத்திடம் இருந்து உதவி எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஆட்சிக்கு வந்த அனைத்து அரசுகள் மூலமும் வீடற்ற அவ்வாறான மக்களுக்கு உதவி வழங்கும் பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் தற்போதைய பொருளாதார சவால்களுக்கு முன் இவ்வாறான நலன்புரி வீடமைப்புக் கொள்கை ஒன்றை அரச தலையீட்டில் செயற்படுத்துவது சவாலாக உள்ளது. அவ்வாறான பின்னணியிலும் கூட நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மூலம் கடந்த பல ஆண்டுகளில் மக்களின் வீட்டுத் தேவைக்காக பல்வேறு திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இம்முறை உலக வசிப்பிட தினம் "ஏற்றத்தாழ்வு காண்பிக்காது – யாரையும் எந்த இடத்திலும் கைவிடாது பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ் கொண்டாடப்படுகிறது. அதன்மூலம் கிடைக்கின்ற வெளிச்சத்தின் ஊடாக தொடர்ந்தும் இந்த திட்டத்தை வெற்றிபெறச் செய்ய முடியுமாகும் என்பது எனது ஒரே எதிர்பார்ப்பாகும்.

**அருன்திக பெர்னாண்டோ**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

## வீடமைப்பு இராஜாங்க அமைச்சரின் ஆசிச் செய்தி



மனிதனின் வாழ்க்கைத் தரத்தை சாதகமான அளவுக்கு கொண்டுவருவதற்கு குறைந்தது உணவு, உடை மற்றும் வீடு ஆகிய மூன்று அடிப்படை தேவைகள் பூர்த்தியாக வேண்டும். அதில் வீடு என்பது முக்கிய இடத்தை பெறுகிறது. சிறந்த வீட்டினால் கிடைக்கின்ற பாதுகாப்பு, தமக்கு நிழல் பெற்றுக்கொள்ள முடியுமாவதன் மூலம் இயற்கையாகவே மனிதனுக்கு ஏற்படுகின்ற வீட்டுடன் ஒன்றி இருக்கும் தன்மையால் உருவாகும் உடல், உள அமைதி வாழ்வுக்கு அடித்தளமாகும். இம்முறை உலக வசிப்பிட தினம், "ஏற்றத்தாழ்வு காண்பிக்காது – யாரையும் எந்த இடத்திலும் கைவிடாது பாதுகாப்போம்" என்ற தொனிப்பொருளின் கீழ் 2022 ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதி திங்கட்கிழமை கொண்டாடப்படுகிறது. அதன் அனைத்து நடவடிக்கைகளும் வெற்றிபெற வேண்டும் என எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**தேனுக விதானகமகே**
நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்

## நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு செயலாளரின் ஆசிச் செய்தி



1985 ஆம் ஆண்டு இலங்கையினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைய, ஐக்கிய நாடுகள் சபையினால் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் மாதம் முதல் திங்கட்கிழமை உலக வசிப்பிட தினமாக அறிவிக்கப்பட்டது. அதன்படி 1986 ஆம் ஆண்டு "Shelter is my Right" (வீடு எனது உரிமை) என்ற தொனிப்பொருளில் முதல் முறை கொண்டாடப்பட்ட உலக வசிப்பிட தினத்தின் 36ஆவது கொண்டாட்டம் இன்றைய தினத்தில் (2022 ஒக்டோபர் 03) இடம்பெறுகிறது.

இன்றையபோது கொவிட் - 19 பொருந்தொற்று நிலைமைக்கு பின் முழு உலகும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து மீண்டும் எழுகின்ற சந்தர்ப்பத்தை கடந்து வருகிறோம். மனித குலம் என்ற வகையில் நாம் பெற்ற வெற்றிகரமான திசை திருப்பும் சூழலுக்கு மத்தியில், வேகமாக அதிகரித்து வரும் பஞ்சம் மற்றும் உள்ளோர் - இல்லாதவர் இடைவெளி தொடர்பில் ஒட்டுமொத்த சமூகத்திலும் விவாதம் ஒன்று ஏற்படும் வகையில் இம்முறை உலக வசிப்பிட தின தொனிப்பொருள் ("Mind the Gap. Leave No One and Place Behind" - ஏற்றத்தாழ்வு காண்பிக்காது – யாரையும் எந்த இடத்திலும் கைவிடாது பாதுகாப்போம்) தேர்வு செய்யப்பட்டிருப்பதே முக்கிய அம்சமாகும். அதன்படி இம்முறை உலக வசிப்பிட தின கொண்டாட்டம், பஞ்சத்தை ஒழிக்கும் புதிய மற்றும் பேண்தகு பாதைக்கு எம்மை இட்டுச் செல்லும் திருப்புமுனையாக அமையும் என எதிர்பார்க்கிறேன்.

அந்த எதிர்பார்ப்பை உண்மையாக்கும் நோக்கின் ஆரம்பப் படியாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களால் உலக வசிப்பிட தினத்துக்கு இணையாக குறைந்த வசதிகள் கொண்ட நகர குடியிருப்புகளில் வசிக்கின்ற பிள்ளைகளை இலக்கு வைத்த போட்டிகள், அந்த குடியிருப்புகளில் உள்ள மக்களின் சுய தொழில் மேம்பாட்டை இலக்கு வைத்த நிகழ்ச்சிகள், உரிமை உறுதி வழங்கல் மற்றும் உலக வசிப்பிட தினத்தின் தொனிப்பொருள் பற்றி மக்களை அறிவூட்டும் நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

2022 உலக வசிப்பிட தின நிகழ்ச்சிகள் முதற்கொண்டு இந்த அமைச்சினால் செயற்படுத்தப்படுகின்ற ஏனைய அபிவிருத்தி நிகழ்ச்சிகளுக்காக தேவையான வழிகாட்டல்களை பெற்றுத்தரும் கௌரவ ஜனாதிபதி அவர்கள், கௌரவ பிரதமர் அவர்கள், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு கௌரவ அமைச்சர் அவர்கள் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர்கள் இருவருக்கும் எனது கௌரவமிக்க நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதோடு இந்தக் கோட்பாட்டை உண்மையாக்குவதற்கு பாடுபடுகின்ற நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களின் சக பணிக் குழுவுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

**பிரதீப் ரத்னாயக்க**
செயலாளர், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு

# உலக வசிப்பிட தினம்

## "ஏற்றத்தாழ்வு காண்பிக்காது – யாரையும் எந்த இடத்திலும் கைவிடாது பாதுகாப்போம்"

உலகப் பெருந்தொற்றின் அழிவுக்கு முகம்கொடுத்து அதன் விளைவை அனுபவித்து வரும் தருணத்தில் இம்முறை உலக விசப்பிட தினம் கொண்டாடப்படுகிறது. இம்முறை கொண்டாட்டத்தின் தொனிப்பொருள், "ஏற்றத்தாழ்வு காண்பிக்காது – யாரையும் எந்த இடத்திலும் கைவிடாது பாதுகாப்போம்" என்பதாகும். இந்தத் தொனிப்பொருளுக்கு காரணமான ஒன்றாக அண்மைக் காலத்தில், உலகை வேதனைக்கு உட்படுத்திய ஒன்றான கொவிட் - 19 உள்ளது. மற்றது ஐரோப்பாவையே அச்சத்திற்கு உட்படுத்தியுள்ள தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற ரஷ்ய – உக்ரைன் போர் உள்ளது. இம்முறை வசிப்பிட தின தொனிப்பொருள் அவதானம் செலுத்தி இருப்பது அவ்வாறு பாதிப்புக்கு உள்ளான உலகை அமைதிப்படுத்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டாகும்.

கொவிட் - 19 பொருந்தொற்றுக்கு முகம்கொடுத்த சமூகத்தில் பெரும் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டுள்ளது. வளர்ந்து வரும் மற்றும் வளர்ந்த நாடுகளுக்கு பெருந்தொற்று ஒரே வகையில் தாக்கம் செலுத்தியபோதும் அந்தத் தாக்கம் வறிய நாடுகளுக்கு தாங்கிக் கொள்வது கடினமானது. அதனால் அரசியல் ஸ்திரமற்ற நிலை மற்றும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டு பெரும் சீரழிவுக்கு உலகின் பல நாடுகளும் இலக்காகின. அதன் காரணமாக நாடு ஒன்றாக பார்க்கும்போது பொருளாதார முன்னேற்றம் பெற்றவர்கள் மற்றும் பொருளாதார சிக்கலுக்கு உள்ளானவர்கள் இடையே பெரும் ஏற்றத்தாழ்வு மற்றும் பொருளாதார அழிவு ஒன்று ஏற்பட்டுள்ளது. அந்த வேறுபாடு வளர்வதற்கு இடம் கொடுக்காது வறிய நாடுகள், வறிய பிராந்தியங்கள், வறிய மக்கள் என வகைப்படுத்தாது சமத்துவத்துடன் பார்த்து பராமரிப்பது உலகின் அவதானத்தை பெற்றுள்ளது.

இந்த பொருளாதார மற்றும் சமூக வீழ்ச்சி அழிவை நோக்கி வளர்வதற்கு இடமளிக்காது வறிய நாடுகள் பின்னடைவை சந்திக்காத வகையில் செயற்படுவதும், செல்வந்த மற்றும் வளர்ந்த நாடுகள் உதவிகளை அவர்களுக்கு வழங்க வேண்டிய தேவையும் ஏற்பட்டுள்ளது. அது தவிர தற்போது உலகின் ஒரு பகுதியில் கொடிய போர் சூழல் உள்ளது. அது பொருளாதாரத்தை மோசமாக பாதித்துள்ளது. குறிப்பாக எண்ணெய் மற்றும் எரிவாயு விலை உயர்ந்ததுடன் உலகெங்கும் பொருட்களின் விலை அதிக வேகத்தில் உயர்ந்துள்ளது. இதனால் பொதுமக்களின் வாழ்க்கைச் சுமை பெரும் சவாலுக்கு உள்ளாகியுள்ளது. இது பொருளாதாரத்திற்கு மிகவும் மோசமாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேபோன்று நாடுகளுக்குள் ஏற்படுகின்ற கிளர்ச்சி மற்றும் அரசியல் ஸ்திரமற்ற நிலை காரணமாகவும் அரசியல் மற்றும் பொருளாதார குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது இலங்கையில் இதனை மிகவும் தீவிரமாக பார்க்க முடிகிறது. இந்த நிலையில் இருந்து எழுந்து வருவதற்கு தீர்வு ஒன்றாக அந்நியோன்ய ஒத்துழைப்பு கலாசாரம் ஒன்று, அதாவது இருப்பவர்கள் இல்லாதவர்களுக்கு உதவி வழங்கும் மனநிலை கட்டியெழுப்பப்படுவது அவசியமாகும்.

## ஏற்றத்தாழ்வை இல்லாமல் செய்ய யாரையும், எந்த இடத்திலும் கைவிடக்கூடாது

# தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை

உலகெங்கும் பரவிய கொவிட்-19 பெருந்தோற்று உலக நாடுகளுக்கு இடையேயும், நாடுகளிலும் பல்வேறு ஏற்றத்தாழ்வுகளை உருவாக்கியது. பெருந்தொற்று உலக நாடுகளுக்கு செய்த தாக்கம் வறிய நாடுகளுக்கு மிகவும் பாதகமாக இருந்தது. வளர்ந்த நாடுகள் பெருந்தொற்றின் தாக்கத்திற்கு ஈடுகொடுக்க முடிந்தபோதும் வறிய நாடுகளுக்கு அதனை தாங்க முடியாதிருந்தது. அதனால் உலக நாடுகளிடையே ஏற்றத்தாழ்வு உருவானதோடு வறிய நாடுகளின் மக்களிடையேயும் பாரதூரமான ஏற்றத்தாழ்வு ஏற்பட்டதாகத் தெரிகிறது. இந்த நிலைமையில் உலக நாடுகள் இடையே இருக்கின்ற ஏற்றத்தாழ்வுக்கும் நாட்டில் உள்ள மக்களிடையே உள்ள ஏற்றத்தாழ்வுக்கும் தீர்வொன்றை காண்பது இன்றைய உலகின் முக்கிய பணியாக உள்ளது என்பது மிகையல்ல.

தேசத்தின் வீட்டு அமைப்பாளரான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு இங்கு வழங்கப்படும் பொறுப்பு ஒன்று உள்ளது. குறைந்த நிதி நிலையின் கீழ் வீட்டுக் கடன் மற்றும் உதவித் திட்டங்களை செயற்படுத்துவது சவாலுக்குரியதாக மாறியுள்ளது. இருக்கின்ற நிதி வளத்தை மிகவும் பயனுள்ளதாக பயன்படுத்த வேண்டும்.

இந்த சூழலில் வரலாற்று ரீதியான காரணிகள் ஊடாக பார்க்கும்போது மானிய முறையின் கீழ் அல்லது இலவசமாக வீடு பெற்றுக்கொடுப்பது தொடர்ந்தும் சாத்தியமான ஒன்றல்ல. அதற்கு தாக்கம் செலுத்தும் காரணங்கள் பல உள்ளன. காணிப் பிரச்சினை அதில் பிரதானமானது. தற்போதிருக்கும் காணிகள் மிகவும் பெறுமதி மிக்க இடங்களில் பொருளாதார மையப்புள்ளிகளுக்கு அருகில் இருப்பதால், இந்தக் காணிகள் நலன்புரி விட்டுத் திட்டங்களுக்கு பயன்படுத்துவது அநியாயமானதாகும். இதன் காரணமாக வீடமைப்பு அதிகாரசபை மாற்று செயற்பாட்டை நோக்கி அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இங்கு வீடமைப்பு அதிகாரசபை அவதானம் செலுத்தி இருப்பது வீடற்ற நிலையை பெரும் பிரச்சினையாகக் கொண்ட நடுத்தர மக்கள் மீதாகும். நாட்டில் பெரும்பான்மையினர் இந்த வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாவர். இவர்களுக்கு வீட்டு உரிமை இல்லை. நகரில் நிர்மாணிக்கப்படும் வீட்டை வாங்கும் அளவுக்கு பொருளாதார நிலையும் இல்லை. இவர்கள் வரலாறு முழுவதும் கௌரவமான ஏழைகளாக வாழ்கிறார்கள். இவர்களின் உண்மையான பிரச்சினையை கருத்தில்கொண்டு வீடமைப்பு அதிகாரசபை நகரின் மத்தியில் மற்றும் நகர் சார்ந்த அதிகார சபைக்கு சொந்தமான காணிகளில் நடுத்தர மக்களுக்கு வாங்குவதற்காக வீடுகளை கட்ட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. அதற்காக வீடமைப்பு அதிகாரசபை செயற்படுத்துகின்ற தொடர்மாடி குடியிருப்பு நிர்மாணத் திட்டங்கள் சார்ந்த நிலத்தை அதிகாரசபையால் வழங்கி தனியார் வர்த்தகர்கள் அல்லது கூட்டு முதலீட்டாளர்களை இணைத்துக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த இரு தரப்பும் இணைந்து அந்த வீடுகளை விற்பதற்கு நடவடிக்கை எடுப்பதோடு இதன் கீழ் அண்மையில் கொழும்பு – கிருளபனை, மிஹிந்து புர நடுத்தர மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (ரனால, ஜல்தர, வாத்துவ – சீ பிரீஸ், ஹோமாகம – மவுன்ட் கிளிப்ட் போன்றவை). புதிய வீட்டுத் திட்டங்கள் ஆரம்பிப்பதற்கு கம்பஹா – வெரல்லேவத்த, மரதகஹமுல – வெவேகொடெல்ல, தங்கல்லை – போன்ற காணிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இவ்வாறான பொருளாதார நெருக்கடிகள் கொண்ட காலத்தில் இவ்வாறான விடயத்திற்கு தேவையான நிதியை அரச பிரிவில் இருந்து பெற்றுக்கொள்வது மிகக் கடினமானது என்பதால், நிர்மாணப் பணிக்கு உதவி வழங்க முடியுமான தொழில்முயற்சியாளர்களை அடையாளம் கண்டு அவர்களின் நிதித் திறனை பெற்றுக்கொண்டு வீடமைப்பு அதிகாரசபையின் அறிவு மற்றும் அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தின் ஆலோசனையுடன் எதிர்காலத்தில் செயற்படுவது நடைமுறைக்கு உகந்ததாகும். முந்தைய காலம் தொடக்கம் இதுவரை இருந்த அரசுகள் மற்றும் வீடமைப்பு அதிகாரசபைக்கு அவ்வப்போது நியமிக்கப்பட்ட முகாமைத்துவ சபைகளினால் நாட்டின் வீட்டுப் பிரச்சினையை தீர்ப்பதற்காக குறைந்த அளவில் அல்லது கூடிய அளவில் பங்களிப்புச் செய்துள்ளன. ஆனால் நாட்டின் வீட்டுப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஒன்றை பெற்றுத் தருவதற்கு இன்னும் முடியுமாகவில்லை. நாம் சிந்திக்க வேண்டியது வீட்டுப் பிரச்சினைக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்ட பலவீனமான செயற்பாடுகளை மீண்டும் செய்வதா இல்லையேல் புதிய தீர்வுகளுக்கு செல்வதா என்பதாகும். அது பற்றி தீவிர அதானம் செலுத்திய வீடமைப்பு அதிகாரசபை நாட்டில் ஏற்பட்டுள்ள கடினமான சூழல் மற்றும் பொருளாதார நெருக்கடி இருக்கும் நிலை தொடர்பில் கருத்தில் கொண்டு இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டது. இந்தத் திட்டங்களுக்கு நல்ல வரவேற்கு கிடைக்கிறது. அதனால் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக, நடைமுறை சாத்தியமானதாக, யதார்த்தபூர்வமானதாக மாற்ற முடியும் என்ற நம்பிக்கை உள்ளது.

வீடமைப்பின் தேசிய நிறுவனமாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை உள்ளது. 4 தசாப்தங்களாக தேசத்திற்கு வீடு வழங்கும் தேசிய பணியை மேற்கொண்டது தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையாகும். வரலாற்றை பார்க்கும்போது செயற்படுத்தப்பட்ட திட்டங்கள் உள்ளன. உதாகம் திட்டம், வீட்டுக் கடன் திட்டம், உதவித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டங்களுடன் தேசிய திட்டங்களாக ஒரு இலட்சம் வீடுகள் திட்டம், பத்து இலட்சம் வீடுகள் திட்டம் போன்றவை செயற்படுத்தப்பட்டுள்ளன. ஜனசெவன இல்லம் மற்றும் ஜனாவாச திட்டங்கள் இவ்வாறு பல்வேறு திட்டங்கள் ஊடாக நாட்டின் வீட்டுப் பிரச்சினைகளுக்கு நடைமுறை ரீதியான தீர்வு ஒன்றை பெறுவதற்கு நடவடிக்கை எடுத்த பிரதான நிறுவனமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை உள்ளது. நாம் ஆரம்பித்த உதவி வீட்டுக் கடன் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு இந்நாட்டு வர்த்தக வங்கிக் கட்டமைப்பு வீட்டுக் கடன் திட்டங்களை புதிதாக அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தது எமது வெற்றியை உறுதி செய்வதாக உள்ளது. என்றாலும் அதன் வழியாக எமது நிறுவனம் செயற்படுவது இலாப நோக்கிலன்றி தேசிய தேவை ஒன்றை பூர்த்தி செய்யும் நோக்கிலாகும். வீட்டுக் கடன் ஒன்று பற்றி நினைக்கும் ஒருவரின் மனதுக்கு முதலில் நினைவுக்கு வரும் பெயர் வீடமைப்பு அதிகாரசபையாக இருப்பது அதன் காரணமாகவாகும்.



கடந்த காலத்தில் வீட்டுக் கடன் மற்றும் உதவி வழங்குவதற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த வீடமைப்பு அதிகாரசபை தற்போது தமது வரம்பை விரிவுபடுத்தி வீட்டுச் சந்தைக்கு நுழைந்திருப்பது தனியார் துறையின் அதிக விலை கொண்ட வீட்டுச் சந்தைக்கு நுழைய முடியாத நடுத்தர மக்களுக்கு சுமக்க முடியுமான நியாயமான விலைக்கு வீடு ஒன்றை பெற்றுக்கொடுக்கும் நோக்கை முன்னிறுத்தியாகும். தற்போது எமது தொடர்மாடி குடியிருப்பு திட்டம் மிக வெற்றிகரமாக முன்னோக்கிச் சென்று நாட்டு மக்களின் வரவேற்பை பெற்றுள்ளது.

1986 தொடக்கம் வருடாந்தம் உலக வசிப்பிட தின கொண்டாட்டத்திற்கு பங்கேற்கின்ற தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை வீடமைப்பு மற்றும் வசிப்பிட அபிவிருத்திக்காக ஐக்கிய நாடுகளின் வசிப்பிட ஆணைக்குழுவின் இலக்கு மற்றும் நோக்கை உள்நாட்டில் செயற்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி.ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 03 திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# தொடர்மாடி குடியிருப்பை பாதுகாக்கும் கூட்டு ஆதனம்



குடியேற்றங்களுடன் சமூகத் தேவைகள் படிப்படியாக விரிவடைவது மற்றும் நகரமயமாக்கலை நோக்கி பயணிப்பதுடன் வசிப்பதற்கு பொருத்தமான வசதிகளுடனான வீடொன்றின் எதிர்பார்ப்பு அனைவரதும் அடிப்படை வாழ்க்கைத் தேவையாகவும் எதிர்பார்ப்பாகவும் உள்ளது. நகரமயமாக்கல் காரணமாக ஏற்பட்டிருக்கும் வீடுகளின் தேவைக்கு ஏற்ப நிலப் பகுதியும் அந்த நெரிசல் மிக்க பகுதிகளில் இல்லை என்பதால் நிலத்தில் பரந்த வீட்டுக்கு பதில் தொடர்மாடி வீடுகள் அந்த சமூக தேவையை பூர்த்தி செய்வதற்கு நிர்மாணிக்கப்பட்டன.

மக்கள் தொகை அதிகரிப்புடன் சமப்படுத்த முடியாத இந்த வீட்டுப் பற்றாக்குறை இடைவெளியை குறைப்பதற்காக அரச துறை மற்றும் தனியார் துறை மூலம் இந்தத் தொடர்மாடி குடியிருப்புகள் நிர்மாணிக்கப்பட்டன. அவைகளின் நீண்டகால இருப்பு மற்றும் சிறந்த சமூக பின்னணியை உருவாக்குவதற்காக 1973 இன் 10ஆம் இலக்க பொது வசதிகள் சபை சட்டம் திருத்தப்பட்டு 2003இன் 24ஆம் இலக்க பொது வசதிகள் சபை (திருத்தப்பட்ட) சட்டத்தின் மூலம் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை உருவானது. கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபையின் முதன்மையான பணிகளாவன,

1. அரச மற்றும் தனியார் துறைகள் மூலம் நிர்மாணிக்கப்படுகின்ற கூட்டு ஆதன உடைமைக்குள் பொதுக் கூறுகள் மற்றும் பொது வசதிகள் முறையான வகையில் அமைக்கப்பட்டிருப்பதை உறுதி செய்து கூட்டு ஆதன சான்றிதழ் வழங்கல்.
2. அரச மற்றும் தனியார் கூட்டு ஆதன உடைமைகளின் கட்டுப்பாடு, பராமரிப்பு மற்றும் நிர்வாகத்தை நடத்திச் செல்வதற்காக முகாமைத்துவ நிறுவனங்களை அமைத்தல் மற்றும் அவைகளை தொடர்ந்து இயக்குதல்.
3. கூட்டு ஆதன உடைமை தொடர்பிலான பிரச்சினைகளை தீர்க்கின்ற மற்றும் கூட்டு ஆதன உடைமைகளின் பொது கூறுகள் மற்றும் பொது வசதிகளுக்கு இடையூறான வகையில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றல்.

## கூட்டு ஆதன சான்றிதழ் வழங்கல்

அரச மற்றும் தனியார் பிரிவுகள் மூலம் நிர்மாணிக்கப்படும் தொடர்மாடி கட்டடங்களின் கூட்டு ஆதன மற்றும் பொது கூறுகளின் கட்டுப்பாடு, பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்திற்கு வசதியான வகையில் குறிப்பிட்ட உடைமை தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை உறுதி செய்து சான்றிதழ் வழங்கப்படும். இவ்வாறு சான்றிதழ் வழங்குவது அதிகாரசபையின் பிரதான நிதி மூலோபாயம் என்பதோடு அதிகாரசபையின் நிர்வாகம் மற்றும் பராமரிப்புக்காக எந்த ஒரு திரைசேறி ஒதுக்கீடும் பெறாத இலாபம் ஈட்டுகின்ற அரச நிறுவனமாக இது உள்ளது. அவ்வாறு வெளியிடப்படுகின்ற சான்றிதழை அடிப்படையாகக் கொண்டு சட்டபூர்வமாக ஒவ்வொரு பிரிவுகளின் உரிமை கொள்வனவாளருக்கு வழங்குவதற்கு கூட்டு ஆதன காணி மேம்பாட்டாளருக்கு முடியுமாக உள்ளது. தொடர்மாடிக் குடியிருப்பு வீடுகள் ஒன்றோடொன்று பிணைக்கப்பட்டிருப்பதால் அந்த வீடுகளுக்கு உறுதி வழங்குவதை மேற்கொள்ள வேண்டியது அந்த எல்லைகளை குறிப்பிட்டு திட்டத்தை தயாரிப்பதோடு அந்தத் திட்டம் கூட்டு ஆதன திட்டம் என அழைக்கப்படுகிறது. அது கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை மூலம் குறித்த சட்டரீதியான நிலைமைக்கு மற்றும் ஒழுங்குமுறைக்கு அமைய உறுதி செய்த பின் குறித்த பிரகடன உறுதியை பதிவு அலுவலகத்தில் பதிவை செய்தல் மேற்கொள்ளப்படும். அதனால் குறித்த கூட்டு ஆதன கட்டடத்தின் தற்காலிக பகுதிகள் தவிர்த்து எஞ்சி அலகுகளுக்காக உறுதி வழங்குவதற்கு முடியுமாக உள்ளது. கூட்டு ஆதன உடைமையை கொள்வனவு செய்யும் அனைவரும் அதிகம் அவதானம் செலுத்த வேண்டிய பிரதான காரணியாக காணி மேம்பாட்டாளர் மூலம் அந்த கூட்டு ஆதன உடைமைக்காக கூட்டு ஆதன சான்றிதழ் ஒன்றை பெற்றிருப்பதாக உறுதி செய்தல்.

கூட்டு ஆதன உடைமை தொடர்பில் அரச ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை என 2006 - 2021 காலத்தில் 1,345 கூட்டு ஆதன உடைமை சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. காணி மேம்பாட்டாளர் இந்த கூட்டு ஆதன சான்றிதழை பெறுவதன் மூலம் அந்த வீட்டு அலகு உரிமையாளர்களுக்கு தமது ஒவ்வொரு வீட்டு அலகுகளுக்கும் தொடர்புடையதாக பொது கூறுகள் மற்றும் பொது வசதிகள் தொடர்பில் உறுதி ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்பு அமைக்கப்பட்டுள்ளது.

## முகாமைத்துவ நிறுவனங்களை அமைத்தல்

அரச மற்றும் தனியார் துறை மூலம் நிர்மாணிக்கப்படுகின்ற தொடர்மாடிக் குயிருப்புகளின் முகாமைத்துவம், பராமரிப்பு மற்றும் நிர்வாகம் அவைகளின் நீண்டகால செயற்பாட்டுக்காக முக்கியமான காரணியாகும். அவைகளின் உரிமையை அகற்றிய பின் (உறுதி மூலம் அலகுகள் உரிமையாளர்களுக்கு வழங்கல்) அவைகளின் செயற்பாடு மற்றும் பராமரிப்பு செயற்பாட்டை அரசுக்கு அல்லது தனியார் காணி மேம்பாட்டாளர்களுக்கு தொடர்ச்சியாக நடத்திச் செல்வதற்கு முடியாது. அரச தொடர்மாடி குடியிருப்புகளாயின் அவை இதற்கு முன் பராமரிக்கப்பட்டது பொது வசதிகள் சபை மூலமாகும். என்றாலும் அரச வரிப் பணத்தால் அவைகளை பராமரித்து நடத்திச் செல்வது திறைசேரிக்கு சுமையாக இருப்பதோடு அது சுகாதார, கல்வி போன்ற துறைகளுக்காக செலவிட வேண்டிய பணம் வீட்டு பராமரிப்புக்காக பயன்படுத்துவது நாட்டின் ஏனைய மக்களுக்கு செய்கின்ற நியாயமற்ற செயலாகும். அதனால் 1982இன் 45ஆம் இலக்க வரி வீட்டு உரிமை (திருத்த) சட்டம் மூலம் கூட்டு ஆதன உடைமை பொது கூறுகள் மற்றும் பொது வசதிகள் கட்டுப்பாடு, முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பை முறையாக நடைத்திச் செல்வதற்காக முகாமைத்துவ நிர்வாகத்தை உருவாக்கி முகாமைத்துவ நிறுவனம் என்ற சட்டரீதியான அமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்மூலம் கூட்டு ஆதன உடைமை ஒன்றின் அனைத்து வீட்டு உரிமையாளரும் இந்த முகாமைத்துவ நிறுவனத்தின் அங்கத்தவர் என்பதோடு அவ்வாறு நிறுவப்படுகின்ற முகாமைத்துவ நிறுவனத்திற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் முதற்கொண்டு அதிகாரிகள் குழாம் ஒன்றை அந்த வீட்டு உரிமையாளர்களில் இருந்து நியமிக்க முடியும். அந்த முகாமைத்துவ நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாக வேண்டியது தமது கூட்டு ஆதன உடைமை பராமரிப்பு, முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் மூலம் நடத்திச் செல்வதாகும். இது கூட்டு ஆதன உடைமை ஒன்றில் ஒவ்வொரு அலகின் உரிமையாளரதும் தார்மீகப் பொறுப்பாகும். அவ்வாறு இல்லாவிட்டால் மிகக் குறுகிய காலத்தில் இவைகளின் முறையான பராமரிப்பு இல்லாததன் காரணமாக சீரழிந்து மனிதன் வாழ்வதற்கு பொருத்தமற்ற நிலைக்கு மாறிவிடும். அதேபோன்று கூட்டு ஆதன உடைமை ஒன்றில் அமைந்துள்ள தொடர்மாடி குடியிருப்புகளில் பாரிய அளவான புனரமைப்புக்காக அறக்கட்டளை ஒன்றை அமைக்க வேண்டும் என்பதோடு அது கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை மூலம் ஒழுங்குபடுத்தல் வேண்டும்.

நீண்ட காலமாக பல்வேறு சிக்கல்களினால் அரசாங்கத்தின் மூலம் நிர்மாணிக்கப்பட்ட 22,308 தொடர்மாடிக் குடியிருப்புகள் உறுதி வழங்க முடியாமல் இருந்தன. இது தொடர்பில் அவதானம் செலுத்திய நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் கௌரவ பிரசன்ன ரணதுங்க அவர்களினால் ஒரு வருடத்திற்குள் அந்த உறுதியை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த தொடர்மாடிக் குடியிருப்புகளின் நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொள்வதற்கு அங்குள்ளவர்களுக்கு உறுதி இல்லாதது இதுவரை தடங்கலாக இருந்தது. அதனால் உறுதி வழங்கப்பட்டதன் மூலம் இந்த தொடர்மாடி குடியிருப்புகளுக்கு முறையான வகையில் முகாமைத்துவ நிறுவனத்தை அமைத்து அவைகளின் பராமரிப்பு, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவத்தை முறைப்படி மேற்கொள்வதற்கு முடியுமாக இருக்கும்.

கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை 2005 தொடக்கம் 2022 வரை அரச மற்றும் தனியார் பிரிவுகளின் கூட்டு ஆதன உடைமைகளில் 1,128 முகாமைத்துவ நிறுவனங்களை அமைத்து அவைகளை ஒழுங்குபடுத்துகிறது.

## கூட்டு ஆதன உடைமை சச்சரவுகளை தீர்த்தல்

கூட்டு ஆதன உடைமை தொடர்பில் தரப்புகளிடையே இருக்கும் சச்சரவை தீர்க்கும் அதிகாரம் எமது அதிகாரசபைக்கே உள்ளது. அவ்வாறு தரப்புகள் இடையே சச்சரவு எழும் சந்தர்ப்பத்தில் அந்த நபர் அல்லது முகாமைத்துவ நிறுனம் மூலம் அதிகாரசபையை அறிவுறுத்திய பின் அதற்கு நீதி நியாயமான ஆணை ஒன்று பிறப்பிக்கப்படும். அதன்மூலம் கூட்டு ஆதன உடைமை பாதுகாப்பு மற்றும் தரப்புகளின் உரிமையை அதிகாரசபை மூலம் உறுதி செய்யப்படும். அவ்வாறு அதிகாரசபை மூலம் வெளியிடப்படுகின்ற உத்தரவை ஏற்காத நபர்களுக்கு நீதிமன்றத்தில் வழங்குத் தொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவது அவர்களுக்கு மிகவும் வசதியான வாழ்கை ஒன்றை பெற்றுக்கொள்வதற்கு தேவையான அரச ஒழுங்குபடுத்த முறையாகவாகும். அதேபோன்று கிடைக்கப்பெறும் முறையீடுகளை விசாரிப்பதற்கு முன் பொறியியல் பிரிவு மூலம் முறைப்பாடு தொடர்பில் துறைசார் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படும்.

## சட்டவிரோத கட்டுமானம்

கூட்டு ஆதன உடைமையில் இடம்பெற முடியாத விடயமாக சட்டவிரோத உடைமைகள் கட்டுவதாகும். இது அதிகமாக பார்க்க முடிவது அரச தொடர்மாடி குடியிருப்புகளிலாகும். எந்த ஒரு தொடர்பாடி குடியிருப்பிலும் கட்டுமான கட்டமைப்பு உருவாக்கப்படுவது அதில் அமைந்திருக்கும் மாடிகளின் எண்ணிக்கைக்கு அமைய அதன் அஸ்திவாரத்திற்கு சுமக்க முடியுமான எடையை கருத்தி கொண்டாகும். சட்டவிரோத கட்டுமானத்தின்போது அந்த கட்டடத்திற்கு தேவையற்ற அம்சங்கள் சேர்ப்பதால் கட்டட அமைப்புக்கு பாதிப்பு ஏற்படுவதோடு அது ஏனைய தொடர்மாடி குடியிருப்பு உரிமையாளர்களை ஆபத்திற்கு உட்படுத்துகிறது. இவ்வாறான கட்டடங்களின் ஆயுள் காலமும் குறைவதோடு சில இடங்களில் பொது வசதிகள் மற்றும் பொது கூறுகளுக்கும் இடையூறு ஏற்படும் வகையில் அவைகள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதை காண முடியும். அரசியல் தலையீடு காரணமாக அவைகளை அகற்றுவது கடினமாகி இருந்தபோதும் கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றிருக்கும் அதிகரத்திற்கு அமைய அவைகளை அகற்றி பாதுகாப்பான கூட்டு ஆதன உடைமை ஒன்றை உருவாக்குவதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறோம்.

இம்முறை உலக வசிப்பிட தினத்தின் தொனிப்பொருளுக்கு அமைய கூட்டு ஆதன வீட்டு உரிமையாளர்களுக்கும் காணி மேம்பாட்டாளர்களுக்கும் துறை சார்ந்த தொழில்முறையாளர்களுக்கும் தொடர்ச்சியான பாதுகாப்பை வழங்குவோம். நகரமயமாக்கலினால் கூட்டு ஆதனத் துறை அனைத்து தரப்பினரையும் தனிமைப்படுத்தாது அவர்களுக்கு பலமாக இருந்தோம். அதனால் உங்களது கூட்டு ஆதன வாழ்வை மிகவும் சிறப்பாக்குவதற்கு நாம் தொடர்ந்தும் உங்களுடன் இருப்போம். வலுவான முகாமைத்துவ நிறுவனம் வசதியான தொடர்மாடி குடியிருப்பு வாழ்வுக்கு பலம் சேர்க்கும்.

# நகர குடியிருப்பு மேம்பாட்டில் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பங்களிப்பு

**2008இன் 36ஆம் இலக்கம் கொண்ட பாராளுமன்ற சட்டத்தின் மூலம் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டது நகரின் குறைந்த வசதி கொண்ட குடியிருப்புகளை முன்னிலைப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த செயலாகும். குறைந்த வசதி உடைய குடியிருப்புகளில் வாழ்கின்ற மக்களை அபிவிருத்தி செயற்பாடுகளில் நேரடி பங்குதாரர்களாக்கும் நோக்கில் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை அமைக்கப்பட்டது.**

பேண்தகு நகர குடியிருப்பு மூலம் பெருமைமிக்க வாழ்வை உறுதிப்படுத்தல், நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் நோக்கு என்பதோடு முழுமையான நகர அபிவிருத்தித் திட்டத்திற்கு இணங்கிய வசதிகள் கொண்ட நகர குடியிருப்புகளில் வாழ்வோரது வீட்டுப் பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுத்தருவது மற்றும் அதற்கு இணையாக அவர்கள் சமூக, பொருளாதார மற்றும் கலாசார அடிப்படையில் வலுவூட்டும் பணியாக இது உள்ளது.

அதன்படி குறைந்த வசதியுடைய நகர குடியிருப்புகளில் வாழும் மக்களின் வீடுகளை, நகர உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்தல், மற்றும் கொள்கை வகுத்தல் மூலம் பௌதீக ரீதியான அபிவிருத்தி மற்றும் மக்களின் பலத்தை அதிகரிப்பதன் மூலம் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான மனித வள செயற்பாடுகளுக்கான பின்னணி அதிகாரசபையில் உருவாக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் அடிப்படையில் ஓரங்கட்டாது மக்களாக சமூகத்தில் செயற்படுவதற்குத் தேவையான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. இந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் பொது வசதிகள் தொடர்பில் மற்றும் மக்களின் தேவைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி அவர்கள் ஊடாக திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படும். நாடு முழுவதும் மாவட்டங்கள் ஊடாக வருடாந்த முறையான முறைமை ஊடாக தேர்வு செய்யப்படும் நகரின் குறைந்த வசதி கொண்ட குயிருப்புகள் முறைப்படி கண்காணிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்ற சோதனை அடிப்படையில் மக்களின் சமூக, பொருளாதார, கலாசார பண்புகள் மிகவும் விரிவாக மற்றும் தர்க்கரீதியாக ஆய்வு செய்யப்படும். அதன்படி மக்களின் தேவைகளை மதிப்பீட்டின் அடிப்படையில் அடையாளம் காண்கின்ற தேவைகளை பூர்த்தி செய்வதற்கு மக்களை செயற்படுத்துவதில் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை முக்கிய பங்காற்றுகிறது.

குறைந்த வசதி கொண்ட நகர குடியிருப்புகளில் வாழ்கின்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது மற்றும் சுய பலத்துடன் எழுவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதில் வழிகாட்டுபவர், நடுநிலை வகிப்பவர், ஆலோசகர், வசதி வழங்குபவர் என்ற பாத்திரங்களை சமூக இயக்கப் பிரிவு மேற்கொள்கிறது. அடிப்படையில் மக்களின் தேவைகளை மதிப்பிடுவது மற்றும் மக்கள் செயற்பாட்டு திட்டம் ஒன்றை தயாரித்து குடியிருப்புகளுக்கான அபிருத்தி சார்ந்த போக்கு ஒன்றுக்கு ஒன்றித்து மக்கள் சக்தி திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகிறது. குடியிருப்புகளில் இருக்கும் சுகாதார மற்றும் துப்புரவேற்பாட்டு, குடிப் பழக்கம், போதைப்பொருள் உட்பட பல்வேறு சமூக பிரச்சினைகள் போன்றவை இதன்போது பிரதானமாக அவதானிக்கப்படுகிறது.

கல்வி மற்றும் கலாசார அடிப்படையில் சிறுவர் மற்றும் இளைஞர்களை வலுவூட்டுவதற்கு நெனபல நிகழ்ச்சி செயற்படுத்தப்படுகிறது. சிறுவர் அபிவிருத்தி மற்றும் சிக்கல், தேவைகள் தொடர்பில் மிகவும் உணர்வுபூர்வமானதாக செயற்படுவது மற்றும் அவர்களின் திறமைகளை மேம்படுத்துவது இதில் முதன்மையானதாகும். வசதிகளை வழங்கல் மற்றும் தொழில் பயிற்சி மற்றும் கல்வி மேம்பாடு இந்த நிகழ்ச்சியின் மற்றொரு நோக்கமாகும்.

புதிய தொழில்முயற்சியாளர்களை உருவாக்கல் மற்றும் மேம்படுத்தலுக்காக செயற்படுகின்ற வலுவூட்டும் நிகழ்ச்சி மக்களின் பொருளாதார அபிவிருத்திக்கு தேவையான பின்புலத்தை உருவாக்குகிறது. இங்கு குடியிருப்பு அளவில் தொழில்முயற்சியாளர்களை உருவாக்குவது, பயிற்சி அளிப்பது, வர்த்தக வாய்ப்புகளை உருவாக்குவது, சுய தொழிலுக்கான கடன் மற்றும் உபகரணங்கள் வழங்கல் போன்றவை மேற்கொள்ளப்படுகிறது. பல்வேறு மனநிலை சார்ந்த நோய்களால் அவதியுறும் மக்களை முறையான ஆலோசனை முறை மூலம் சமூகத்துடன் இணைப்பதற்கு இதன்மூலம் நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

சமூக இயக்க செயற்பாடு பிரஜாசக்தி, நெனபல, சவிபல, திவிவருன ஆகிய நிகழ்ச்சிகளின் கீழ் ஒன்றிணைந்திருப்பதோடு மக்களின் தேவைகளுக்காக மிகவும் சிறந்த பயன்தரும் சூழல் உருவாக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அபிவிருத்தி தொடர்பில் செயற்படும்போது மக்களின் தேவைகளுக்கு அமைய குறைந்த வசதிகள் கொண்ட நகர குடியிருப்புகளின் மக்களுக்கு வசதிகள் கொண்ட பாதுகாப்பான சூழல் ஒன்று உருவாக்கித்தருவது முக்கியமாகும்.

சிறிய இட வசதி, நிரந்த முகவரியேனும் இல்லாத சட்டவிரோத குடியிருப்பாளராக, கழிப்பறை, நீர், மின்சாரம் ஆகிய குறைந்த வசதிகளுடன் மிகவும் குறைந்த அளவில் பலவீனப்படும் நபர்களின் வாழ்க்கை நிலையை படிப்படியாக நல்ல நிலைக்கு கொண்டவருவது இதன்மூலம் மேற்கொள்ளப்படுகிறது.



அநுராதபுரம் மல்வத்து ஓயா சார்ந்த குறைந்த வசதிகளின் கீழ் வாழ்கின்ற மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட துருஇதுருகம வீட்டுத் திட்டம், டொரின்டனில் 187 குடியிருப்புகளில் வாழ்ந்த மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட பொரளை சிங்ஹபுற வீட்டுத் திட்டம், மொரட்டுவை அங்குலான வீட்டுத் திட்டம், லுனாவ நகர வீட்டுத் திட்டம், காலி ரஜகம வீட்டுத் திட்டம் இவைகளில் முக்கியமானவையாகும். இந்த வீட்டுத் திட்டங்கள் மக்கள் தேவைகளை முறையாக ஆய்வு செய்து அபிவிருத்தி மற்றும் நலன்புரி பண்புகளுடன் செயற்படுத்தப்பட்டது.

### உலக வசிப்பிட தினமும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பங்களிப்பும்

நகரமயமாக்கலுக்கு முன் இருக்கின்ற சிக்கல்கள் தொடர்பில் 1985இல் ஜமைக்காவில் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் வீடமைப்பு மாநாட்டில் இலங்கையால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைக்கு அமைய 1986 ஆம் ஆண்டு தொடக்கம் உலக வசிப்பிட தினம் கொண்டாடப்படுகிறது. அது தொடர்பில் கடந்த ஒரு தசாப்த காலமாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை செயற்பாட்டு திட்டங்களை மேற்கொள்கிறது. மக்கள் அபிவிருத்தி கோட்பாடுகளை பின்பற்றி குறைந்த வசதி உடைய நகர குடியிருப்புகளில் வாழ்கின்ற மக்களை தொடர்புபடுத்தி வசிப்பிட தினத்தை கொண்டாடுவதற்கு செயற்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சிகள் காரணமாக சுயசக்தி மனித அபிவிருத்தி திட்டங்களுக்காக இந்த மக்கள் செயலூக்கத்துடன் இணைவது சாதகமான சூழலாகும்.

சிறுவர் மற்றும் இளம் சமூகத்தின் திறமையை மேம்படுத்துவதற்காக செயற்படும் கல்வி, கலை மற்றும் விளையாட்டுப் போட்டிகள், தொழில்முயற்சி அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மற்றும் போட்டிகள், சமய மற்றும் ஆன்மீக மேம்பாட்டு நிகழ்ச்சிகள், போன்ற செயற்பாடுகள் பல ஆண்டுகளாக நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபை மூலம் உலக வசிப்பிட தின கொண்டாட்டத்தை ஒட்டி செயற்படுத்தப்படுகிறது.

இம்முறை உலக வசிப்பிட தினத்தை கொண்டாடுவதற்கு இணையாக சுய தொழில் மற்றும் தொழில்முயற்சி மேம்பாட்டு சந்தை, நாடு முழுவதும் இடம்பெறும் சிறுவர் சித்தரப் போட்டி, நாடு முழுவதும் இடம்பெறும் வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கை போட்டி, குறுந்திரைப்பட போட்டி போன்ற நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்படுகின்றன. இதன்மூலம் மக்களின் சிந்தனை மேம்பாடு மற்றும் நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணிகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கு வழி ஏற்படுத்தப்படுவது என்பது தெளிவானது. இந்த நிகழ்ச்சிகளுக்காக ஐக்கிய நாடுகளின் சிறுவர் அறக்கட்டளை (UNICEF SRILANKA) ஹட்டன் நெஷனல் வங்கி (HNB), கொமர்ஷல் வங்கி மற்றும் தேசிய சேமிப்பு வங்கி (NSB) ஆகிய நிறுவனங்கள் அனுசரணை வழங்குகின்றன.

அபிவிருத்தி என்பது வெளியில் இருந்து இறக்குமதி செய்ய முடியாத ஒன்று என்பது அபிவிருத்தி தொடர்பான நிபுணர்களின் கருத்தாகும். அது மக்களின் புரிதலை மேம்படுத்தல் மற்றும் தேவைகளை பூர்த்தி செய்தலுக்கான பின்புலத்தை தயார்செய்து மேற்கொள்ள வேண்டியதாகும். இந்தப் பணியை செய்யும்போது குறைந்த வசதியுடைய குடியிருப்புகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுகின்ற நகர குடியிருப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் பணி அபிவிருத்தி இலக்கை பூர்த்தி செய்வதற்கு மிக முக்கியமானது என்பது தெளிவாகிறது.



# பேண்தகு நகரமயமாக்கலுக்கான நகர அபிவிருத்தி அதிகாரசபை

2022 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 03 ஆம் திகதிக்கு இடம்பெறும் உலக வசிப்பிட தினத்தின் தொனிப்பொருள், "ஏற்றத்தாழ்வு காண்பிக்காது - யாரையும் எந்த இடத்திலும் கைவிடாது பாதுகாப்போம்" என்பதாகும். அதன்மூலம் நகர் சார்ந்த மனித குடியேற்றங்களில் இருக்கும் வளர்ந்து வரும் ஏற்றத்தாழ்வு மற்றும் சவால் ஆகிய விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படுகிறது. அதேபோன்று, இந்தத் தொனிப்பொருள் ஊடாக மும்முனை 'C' நெருக்கடியான கொவிட் 19 (Covid 19), காலநிலை (Climate), மற்றும் மோதல் (Conflict) ஆகிய பிரச்சினை மற்றும் நெருக்கடி தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்த மேலுள்ள விடயங்களை நிறைவேற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை பாரிய பணிகளை மேற்கொள்வதோடு, எதிர்காலத்தில் நிலையான நகரமயாக்கலை ஏற்படுத்துவது இலக்காகும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபை, எமது நாட்டின் பிரதான திட்டமிடல் நிறுவனமாகும். இதன்படி, அதிகாரசபையின் சட்டத்திற்கு அமைய, நகர அபிவிருத்தி அதிகார எல்லைக்குள் பௌதீக, பொருளாதார, சமூக மற்றும் சுற்றுச்சூழல் அபிவிருத்தி செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான குறித்த சட்டரீதியான செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. நாட்டில் அதிகரித்து வரும் வீட்டுக்கான தேவைக்காக செயலூக்கத்துடன் பங்களிப்புச் செய்து மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டங்கள் மற்றும் கட்டட ஒழுங்குமுறைகளுக்கு அமைய முறையான திட்டக் கலையை பின்பற்றி முழுமையான வசதிகளைக் கொண்ட, வீடமைப்பு அபிவிருத்தி திட்டம் இந்த அதிகாரசபை மூலம் செயற்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அதிகரித்து வரும் வீட்டுக்கான கேள்விக்கு சமகாலத் தீர்வாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் பல்வேறு வகையான தொடர்மாடிக் குடியிருப்புகளை கட்டும் திட்டங்கள் பலதும் செயற்படுத்தப்பட்டுள்ளன.

1. நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் நிர்மாணிக்கப்படும் வீட்டுத் திட்டங்கள்.
2. குறைந்த வருமானம் பெறுவோருக்கான வீட்டுத் திட்டம்
3. கீழ் நடுத்தர வருமானம் பெறுவோருக்கான வீட்டுத் திட்டம்
4. உயர் வருமானம் பெறுவோருக்கான வீட்டுத் திட்டம்
5. தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழான வீட்டுத் திட்டம்

கொழும்பு நகரின் மக்கள்தொகையில் 50% க்கும் அதிகமானவர்கள் வாழ்வது நகரின் முழு நிலப்பகுதியில் 9% ஐ ஆக்கிரமித்திருக்கும் குடிசை, சேரிகள் அல்லது உடைந்த பழைய வீட்டு அலகுகளிலாகும். நகர அபிவிருத்தி அதிகாரசபை 2010 ஆம் ஆண்டு நடத்திய கணக்கெடுப்பு மூலம் மனிதன் வாழ்வதற்கு தகுதியற்ற நீர் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை அணுக வசதியற்ற 1,499 மக்கள் கொத்தணிகளில் (குறைந்த வருவாய் கொண்ட குடியிருப்புகள்) வாழும் முழு குடும்பங்களின் எண்ணிக்கை 68,812 என அடையாளம் காணப்பட்டது. மின்சாரம், துப்புரவேற்பாடு போன்ற ஏற்றுக்கொள்ள முடியுமான தரப்படுத்தலுக்கு அமைய வழங்கப்பட்ட புதிய வீட்டுத் திட்டங்களில் அந்தக் குடும்பங்களை மீள் குடியேற்றல், நகர அபிவிருத்தி திட்டத்தின் நோக்கத்தை பூர்த்தி செய்தல் மற்றும் சுத்தமான மக்கள் சூழல் ஒன்றை கொண்ட நகர் ஒன்றை உருவாக்குவது பிரதான நோக்கமாகும். கொழும்பு நகர்புற பகுதிகளை திட்டமிட்ட வகையில் முன்னேற்றும் நோக்கில் நகரின் குறைந்த வருமானம் கொண்ட குடியிருப்புகளுக்காக அனைத்து வசதிகளையும் கொண்ட தொடர்மாடி குடியிருப்புகளை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை, நகர புத்துயிர் திட்டம் என நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டு தற்போது செயற்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் திறைசேரி நிதிகளால் மாத்திரம் செயற்படுத்தப்படும் திட்டமில்லை என்பதோடு அது சுய நிதி வருவாய் திட்டம் ஒன்றாக அமைச்சரவை ஒப்புதலுடன் செயற்படுத்தப்படுகின்ற சிறப்புத் திட்டம் ஒன்று என்பதோடு குறைந்த வசதிகள் கொண்ட குடியிருப்புகளில் வாழும் காணியை அபிவிருத்தி திட்டத்திற்காக பயன்படுத்துவதன் மூலம் திட்டத்திற்கு தேவையான நிதி சேகரிக்கப்படுகிறது.

தற்போது இந்தத் திட்டத்தின் மூலம் கொழும்பு நகர் மற்றும் கொலன்னாவை நகர சபை அதிகார எல்லையை மையமாகக் கொண்டு 24 வீட்டுத் திட்டத்தின் கீழ் 14,607 வீட்டு அலகுகள் நிர்மாணிக்கப்பட்டு மக்கள் உரிமையாக்கப்பட்டிருப்பதோடு 12,046 வீட்டு அலகுகளில் வீட்டு உரிமையாளர்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். அதேபோன்று கிட்டத்தட்ட 112 ஏக்கர் அளவு காணி இந்தத் திட்டத்தின் நேரடி தலையீட்டில் விடுவிக்கப்பட்டுள்ளது.

வீட்டுத் திட்டத்தின் மூலம் வழங்கப்படும் வீட்டு அலகு ஒன்று 450 சதுர அடி அல்லது 550 சதுர அடி அளவைக் கொண்டிருப்பதோடு, வதிவிட அறை, 02 ஓய்வறை, குளியலறை, பெல்கனி மற்றும் பேன்ட்ரி ஆகிய அம்சங்களை கொண்டிருக்கும். அதேபோன்று. இந்த அனைத்து வீட்டுத் திட்டமும் குடிநீர், மின்சாரம், கழிவுகளை அகற்றும் வசதிகள் மற்றும் நீர் விநியோகக் கட்டமைப்பு உட்பட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை கொண்டதாகும்.

- தற்போது நிர்மாண வேலை பூர்த்திசெய்யப்பட்ட வீட்டு அலகுகளின் எண்ணிக்கை - 14, 473
- தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள வீட்டு அலகுகளின் எண்ணிக்கை - 1,516
- தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள AIIB வீட்டு அலகுகளின் எண்ணிக்கை - 4,074
- முன்மொழியப்பட்ட குறைந்த வருவாய் வீட்டுத் திட்டம்
- சீன நிதியுதவின் கீழ் செயற்படுத்தப்பட்டுள்ள வீட்டுத் திட்டங்கள் - 1,996
- குறைந்த வசதியுடையோருக்கான வீட்டுத் திட்டம் - 900
- AIIB வீட்டுத் திட்டம் - 1,272
- முழு வீட்டு அலகு எண்ணிக்கை - 24,231

### கொழும்பு நகர புத்தெழுச்சி திட்டத்திற்கு உதவும் திட்டம் (SCURP) (ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கியின் நிதியுதவியின் கீழ்)

தற்போது செயற்படுத்தப்பட்டுள்ள நகர புத்தெழுச்சி திட்டத்திற்கு உதவுவதற்காக 2019ஆம் ஆண்டு ஆசிய உட்கட்டமைப்பு வசதிகள் முதலீட்டு வங்கி (AIIB) நிதியுதவியில் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அது தவிர தொழில்நுட்ப திட்டங்களை மேம்படுத்தல், மீள் குடியேற்றம் மற்றும் பின் மீள்குடியேற்ற கொள்கை பராமரிப்பு ஒழுங்குமுறை, புனரமைப்பு நுழைவின் புத்தாக்கம் மற்றும் வீட்டுக்காக மக்கள் தலையீடு, நீண்ட கால பேண்தகு தன்மை மீளாய்வு போன்ற அம்சங்களும் உள்ளடங்கும்.

- திட்டங்களின் முழு முதலீடு - 280 மில்லியன் அமெரிக்க டொலர்
- AIIB இற்கு உட்பட்டவை - 200 மில்லியன் அமெரிக்க டொலர்
- இலங்கை அரசுக்கு உட்பட்டவை - 80 மில்லியன் அமெரிக்க டொலர்

### இந்தத் திட்டங்கள் 3 கட்டங்களைக் கொண்டவை

- கூறு I - 5500 வீட்டு அலகுகள் நிர்மாணித்தல்
- கூறு II - குறைந்த வசதிகள் கொண்ட குடும்பங்கள் புதிய வீடுகளுக்கு சென்ற பின் காணிகளில் இருந்து கிடைக்கும் வருவாயை உச்ச நிலைக்கு கொண்டுவருதல்
- கூறு III - தொழில்நுட்ப உதவி மற்றும் கொள்கை மேம்பாடு

### நடுத்தர வருவாய் பெறுவோருக்கான வீட்டுத் திட்டம்

நகர அபிவிருத்தி அதிகாரசபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற நடுத்தர வருவாய் பெறுவோருக்கான வீட்டுத் திட்டத்தின் மூலம் நடுத்தர மக்கள் மற்றும் வேலையில் ஈடுபட்டுள்ளவர்களின் வீட்டுத் தேவையை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது அடிப்படை இலக்காகும். அதன்படி நடுத்தர வருமான பெறுவோர் வீட்டுத் திட்டத்தின் மூலம் தற்போது 2 வீட்டுத் திட்டங்கள் நீர்மாணிக்கப்பட்டு மக்கள் உரிமையாக்கப்பட்டுள்ளன. அந்தத் திட்டங்களானது,

1. ஓவல் வியுவ் அரச ஊழியர் வீட்டுத் திட்டம் - பொறளை - 608 வீட்டு அலகுகள்
2. லேக் கிரேஸ்ட் வீட்டுத் திட்டம் - அங்கொடை - 500 வீட்டு அலகுகள் - 1108 வீட்டு அலகுகள்

மேலும், தற்போது நடுத்தர வருமானம் பெறுவோருக்கான 12 வீட்டுத் திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருவதோடு, அதன்மூலம் 3667 வீட்டு அலகுகளின் தேவை பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

நடுத்தர வருவாய் பெறுவோர் வீட்டுத் திட்டங்களில் வீட்டு அலகுகள் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள், தொழிலாளர்கள் உட்பட குழுவினருக்கு வாழங்குவதற்கு வசதிகளை செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோடு, அமெரிக்க டொலர் மூலம் மேற்கொள்ளப்படும் அந்த கொடுப்பனவு ஒரே தடவையில் மேற்கொள்ளப்பட்டால் 10% கழிவு வழங்குதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் ஒப்புதல் பெறப்பட்டிருப்பதோடு, வங்கி மூலம் அந்நியச் செலவணி கணக்கை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, வெளிநாட்டில் உள்ள ஊழியர்களுக்காக டொலர் மூலம் வீட்டை கொள்வனவு செய்வதை மேற்கொள்ள முடியுமாக உள்ளது.

கடந்த பல தசாப்தங்கள் தொடக்கம் இலங்கையில் வீடமைப்புத் துறையில் புதிய போக்கு ஒன்று கொண்டுவரப்பட்டிருப்பது பிரதானமாக நடுத்தர மக்களால் ஏற்படுத்தப்பட்ட வீட்டுக்கான தேவையாகும். வர்த்தக சக்திகளால் இயக்கப்படும் செயற்பாடு மூலம் நடுத்தர வருமானம் ஈட்டும் குழுவினரின் அதிகப் பெரும்பான்மையானோர் குறிப்பாக சமூகத்தில் கீழ் நடுத்தர வருமான பெறும் பிரிவு இந்த வீடுகளை பெறுவதில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். அதனால், இந்த முரண்பாட்டை தீர்ப்பது மற்றும் வீடுகளை பகிர்ந்தளிப்பதில் வெற்றிகரமான செயற்பாடு ஒன்றை தயாரிப்பதற்காக அரச துறை நிறுவனங்களின் தலையீடு காலத்திற்கு பொருந்தும் தேவையாகும். அதன்படி, நடுத்தர வருமான பெறும் பிரிவினருக்கு வீட்டுக்கான நுழைவுக்கு உள்ள தடைகளை தகர்த்தல் மற்றும் தொழில் இடத்திற்கு இலகுவான பாதையை பெற்றுத் தருவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை தலையிடுகிறது.

CDU/TS/2022/11&12

## இலங்கைச் சுங்கம்

# அரசுரிமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கான கேள்வி

அரசுரிமையாக்கப்பட்ட வாகனங்கள், தங்கம் / தங்க ஆபரணங்கள் / மின்சாரம் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் ஏனைய நானாவிதப் பொருட்களை கேள்வி மூலம் விற்பனை செய்வற்கான கேள்வி கோரல் 2022 ஒக்டோபர் 06ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இலங்கைச் சுங்கம், மத்திய அப்புறப்படுத்தல் இயக்குணரகத்தில் இடம்பெறும்.

இந்தப் பொருட்களின் பட்டியல் மற்றும் இதன் விபரங்கள் அடங்கிய படிவமொன்றை மீளளிக்கப்படாத 25.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி இலங்கைச் சுங்கத்தின் 3ஆம் மாடியில் உள்ள மத்திய அப்புறப்படுத்தல் இயக்குணரகத்தில் 2022 ஒக்டோபர் மாதம் 03, 04 மற்றும் டிசம்பர் 05 ஆகிய திகதிகளில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 3.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் விற்பனைக்குள்ள பொருட்களின் பட்டியல் www.customs.gov.lk எனும் சுங்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் 2022 செப்டெம்பர் மாதம் 30ஆம் திகதியிலிருந்து காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் எண்களுடன் தொடர்புகொள்ளவும்:

**011-2430795**
**011-2143434 – நீடிப்பு 7300**

**சுங்கப் பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கைச் சுங்கம்,**
**சுங்க இல்லம்,**
**இல. 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

---

சியபத பினான்ஸ்
Siyapatha Finance
(Finance Company of Sampath Bank Group)

மீட்கப்படாத தங்க நகைகளை ஏலத்தில் விற்பனை செய்தல்

சியபத பினான்ஸின் கீழ்க்காணும் கிளை சேவைக்கருமபீடங்களில் 2022 மே 31ம் திகதி திகதி வரை அடகுவைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத தங்க நகைகள் கீழ்க்குறிப்பிட்ட திகதியில் பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

ஏலவிற்பனை 2022 அக்டோபர் 14ம் திகதி மு.ப 9.30க்கு திகதி மு.ப. 9.30க்கு நடைபெறும்.

| கிளை/ சேவைக்கருமபீடம் | மீட்கப்பட வேண்டிய கால எல்லை | ஏலவிற்பனை நடைபெறும் இடம் |
|---|---|---|
| கண்டி-கட்டுகஸ்தோட்ட, மாத்தறை, அம்பாறை, நுவரெலிய, நீர்கொழும்பு, குருணாகலை, பேலியகொட, நுகேகொட, சாய்ந்தமருது, அநுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, குளியாபிட்டிய, வவுனியா, குருணாகலை-நகர், கண்டி-கொட்டுகொடல்ல, கல்முனை, அவிஸ்சாவெல்ல, மட்டக்களப்பு, கம்பஹா, களுத்தறை, திருகோணமலை, வெள்ளவத்தை, காலி, பாணதுறை, கிரிபத்கொட, மஹரகம, வத்தளை, ஹட்டன், பிலியந்தல, சிலாபம், மொரட்டுவ, புறக்கோட்டை , யாழ்ப்பாணம், கொஹுவல நிட்டம்புவ, மாலபே. மாத்தளை மற்றும் தம்புள்ளை | 2022 மே 31ம் திகதி திகதிக்கு முன் மீட்கப்படாத தங்க நகைகள் | சியபத பினான்ஸ், தலைமை காரியாலயம், இல 111, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08 |

ஏலவிற்பனையை நிராகரித்தல், பிற்போடுதல் மற்றும் வேறொரு கிளையுடன் ஒன்றிணைந்து நடாத்துதல் ஆகிய உரிமைகள் சியபத பினான்ஸ் பி.எல்.சி வசம் உள்ளன.

பதிவு இலக்கம்: PB 917PQ

தலைமை அதிகாரி
சியபத பினான்ஸ் பீஎல்சீ
இல 111, டட்லி சேனாநாயக்க
மாவத்தை, கொழும்பு 08

---

**அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்**

பொரலஸ்கமுவ, தேவலமுல்ல, 301ஆம் இலக்கத்தில் வசிக்கும் கிரிவத்துடுவகே நிலந்தி பெரேரா (தே.அ.அ.இல. 737081001V) ஆகிய நான் இஸ்ரேல், டெல் அவிவ், இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் முதலாம் செயலாளர் டபிள்யூ. டீ. மகேஷ் குணவர்தன அவர்களால் உறுதி செய்யப்பட்ட 2021-07-20ஆம் திகதியைக் கொண்ட விசேட அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் பொரலஸ்கமுவ, தேவலமுல்ல, கே. ரூபன் பெரேரா ஒழுங்கை, 30/18 (301) இலக்கத்தில் வசிக்கும் ரத்நாயக்க முதியன்சேலாகே சுரங்கி நெலும் ரத்நாயக்க (தே.அ.அ.இல. 19926360131) என்பவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை 2022ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் இரத்துச் செய்துள்ளதாகவும் அன்றைய தினத்தின் பின் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புகூற மாட்டேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கிரிவத்துடுவகே நிலந்தி பெரேரா**

Repeat Your Ad For Better Offers

---

# அறிவித்தல்

## சப்ரகமுவ மாகாண சபை

## 2023ஆம் ஆண்டிற்கு வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டிற்குள் சப்கரகமுவ மாகாண சபைக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு தேவையான அலுவலக உபகரணங்கள், காகிதாதிகள் உற்பட பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கக்கூடிய அரச கூட்டுத்தாபனம், சபை, அமைப்புகள், உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் சங்கங்களிலிருந்து 2022.10.03 முதல் 2022.12.15 வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள், நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்கள்

**பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்),**

**பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகம்,**

**சப்ரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி.**

என்ற முகவரிக்கு 9" x 4" அளவிலான முகவரியிடப்பட்ட முத்திரை உறையொன்றை அனுப்புவதன் மூலம், இந் நிறுவனத்திற்கு வருகை தருவதன் மூலம் அல்லது www.sg.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2022.02.15ம் திகதி அல்லது அதற்கு முன்பு மேற்படி முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

2022.12.15ம் திகதியின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

தொலைபேசி இல. 045-2222893/ 045-2228099 மூலம் பிரதி பிரதம செயலாளர் (நிதி முகாமைத்துவம்) அலுவலகத்தை அழைத்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**சுனில் ஜயலத்,**
**பிரதம செயலாளர்,**
**சப்ரகமுவ மாகாண சபை,**
**புதிய நகரம்,**
**இரத்தினபுரி.**

---

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRO)

**பாதுகாப்பு அமைச்சு**

**தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம் (RLVMMP)**

**ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி (AIIB) மற்றும் இலங்கை அரசாங்கத்தினால் (GOSL) நிதியிடப்பட்டது**

**கடன் இலக்கம்: L0124A, நாடு: இலங்கை**

## நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹட்டன் - மஸ்கெலியா - நல்லதண்ணி B-149 வீதியில் 31/1 மற்றும் 31/2 மதகுகளுக்கிடையில் தணிக்கும் நடவடிக்கைகளினால் மண்சரிவு தாக்கக் குறைப்பு வேலைகள்

**RFP குறிப்பீட்டிலக்கம்: RLVMMP/WORKS/09**

1. தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டத்தின் (RLVMMP) ஆகுசெலவிற்காக இலங்கை அரசாங்கமானது ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியிடமிருந்து ஏற்கனவே நிதியைப் பெற்றுள்ளதுடன் இப்பெறுகைகளின் பகுதியொன்றை நுவரெலியா மாவட்டத்திலுள்ள ஹட்டன் - மஸ்கெலியா - நல்லதண்ணி B-149 வீதியில் 31/1 மற்றும் 31/2 மதகுகளுக்கிடையில் தணிக்கும் நடவடிக்கைகளினால் மண்சரிவு தாக்கக் குறைப்பு வேலைகளின் ஒப்பந்தத்திற்கான பணக்கொடுப்பனவுகளுக்காக அவசர பணிகள் மற்றும் பெ.சே.வ. ஆகியன நீங்கலாக 287.2 மில்லியன் இலங்கை ரூபா என்ற மதிப்பீட்டு மொத்த ஆகுசெலவாகும்.
2. இது அவசர வேலையாகக் கருதப்படுகின்றது. இந்தக் கோரிக்கையில் தொடர்புடைய விதிகள் சேர்க்கப்பட்டுள்ளன. மாற்றியமைக்கப்பட்ட காலக்கெடு மற்றும் ஏனைய தேவைப்பாடுகள் என்பவற்றை ஒப்பந்தக்காரர்கள் கட்டாயம் கடைபிடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.
3. நுவரெலியா மாவட்டத்திலுள்ள மேற்குறிப்பிடப்பட்ட தகுதி வாய்ந்த கேள்விதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை பாதுகாப்பு அமைச்சின் சார்பில் செயற்றிட்டப் பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார். இந்த ஒப்பந்தத்தின் நிருமாணக் காலப்பகுதியானது 240 நாட்காட்டி நாட்களாகுமென்பதுடன் குறைபாடுகள் பொறுப்புக் காலப்பகுதியானது நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்த பின்னர் 365 நாட்களாகும்.

   மஸ்கெலியா - நல்லதண்ணி வீதியை பாதுகாப்பான முறையில் ஒரு வழிப்பாதையில் திறப்பது மற்றும் Slide பொருட்களை அகற்றி/அல்லது மறுசீரமைப்பதன் மூலம் தளத்தை உறுதிப்படுத்துவது உள்ளிட்ட இடைக்கால இலக்கு தொடக்க திகதியிலிருந்து 30 நாட்குறிப்பு நாட்கள் ஆகும்.

   ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக, வெற்றிகரமான கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் பின்வரும் தேவைப் படுத்தல்களை பூர்த்தி செய்பவராகவுமிருத்தல் வேண்டும்.

   அ) உள்நாட்டு கேள்விதாரர் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் (CIDA/ ICTAD- முன்பு ICTAD என்றழைக்கப்பட்டது) கட்டிடம் மற்றும் சிவில் பொறியியலின் கீழ் C-2 அல்லது மேற்பட்ட தரத்தில் அல்லது soil nailing and Stabilization இன் கீழ் SP-1 தரத்தில் செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும். எந்தவொரு வெளிநாட்டு ஒப்பந்தக்காரரும் எவ்வித ''நிர்மாண ஒப்பந்தத்தை'' பிரதான.'.தலைமை தாங்கும் சாராராக மேற்கொள்ள விரும்பினால், அதனது கேள்வியின் வெற்றிதாரராக தெரிவு செய்யப்பட்டால், வெளிநாட்டு ஒப்பந்தக் காரருக்கான தற்காலிக பதிவுச் சான்றிதழை பெற்றுக் கொள்ளல் வேண்டும் - 2018.08.23 ஆம் திகதியிடப்பட்டதும் 2085/19 என்ற இலக்கமுடையதும் ''வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களை பதிவு செய்தல்'' என்ற தலைப்புமுடைய வர்த்தமானியை பார்க்கவும் - இதனை www. documents.gov.lk என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம் என்பதுடன் மேலதிக விபரங்களுக்கு www.cida.gov.lk என்ற இணையத்தையும் பார்வையிடவும்.

   ஆ) பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள கேள்விதாரர்கள் மாத்திரமே இக்கேள்வியில் பங்குபெறலாம்.

**A. நிதியிடல்:**

i. திரவச் சொத்துக்கள், தடைகளற்ற ஆதனங்கள், கடன் வரிசைகள் மற்றும் ஏனைய நிதியிடல் வழிகள் (ஒப்பந்த ரீதியிலான முற்பணக் கொடுப்பனவுகள் நீங்கலாக) நிர்மாண காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடு செய்யப்பட்டுள்ள 118 மில்லியன் இலங்கை ரூபாவை கேள்விதாரரின் ஏனைய கடப்பாடுகள் நீங்கலாக இந்த ஒப்பந்தத்திற்காக (ஒப்பந்தங்கள்) இருப்பதாக கேள்விதாரர் நிரூபித்தல் வேண்டும் அல்லது அவற்றை பெற்றுக் கொள்வதற்கான வழிகளை முன்வைத்தல் வேண்டும்.

ii. கேள்விதாரர் தொழில்தருநரின் திருப்திக்காக தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் மற்றும் எதிர்கால ஒப்பந்த கடப்பாடுகளுக்கான காசுப் பாய்ச்சல் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கான போதுமானளவு நிதி வளத்தைக் கொண்டுள்ளார் என்பதையும் நிரூபித்தல் வேண்டும்.

iii. கணக்காய்வு செய்யப்பட்ட ஐந்தொகைகள் அல்லது கேள்விதாரரின் நாட்டின் சட்டத்தினால் தேவைப்படாதவிடத்து, தொழில்தருநருக்கு ஏற்புடையதாகவுள்ள ஏனைய நிதியிடல் கூற்றுக்கள் கடந்த 5 வருடங்களுக்கானவை (2017-2018) முதல் (2021-2022) வரையுமானவையும் சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் கேள்விதாரரின் தற்போதைய நிதியிடல் தன்மையின் நிலைமை அத்துடன் அதனது நீண்டகால இலாபத்தின் வளமையையும் சுட்டிக் காட்டல் வேண்டும். (ஆகக் குறைந்த தேவைப்பாட்டின் பிரகாரம் கேள்விதாரரொருவரின் மொத்த ஆதனங்களினதும் மற்றும் மொத்த கடன்பொறுப்புக்களினதும் வேறுபாடாக கணக்கிடப்பட்ட தேறிய வருமானம் சாதகமாகவிருத்தல் வேண்டும். இலாபத் தன்மையின் பாதகமான பெறுபேறானது கேள்வியின் நிராகரிப்பிற்கு வழிவகுக்கும்.

iv. கடந்த ஐந்து வருடங்களில் (2017 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து) நிறைவேற்றப்பட்ட நிருமாண வேலையின் ஆகக் குறைந்தது சராசரி வருடாந்த பெறுமதி ஆகக் குறைந்தது 474 மில்லியன் இலங்கை ரூபாவாக இருத்தல் வேண்டும்.

**B. நிருமாண அனுபவம்:**

**பொதுவான அனுபவம்.**

i. 2017 ஜனவரி 1ஆம் திகதியில் ஆரம்பித்து ஆகக் குறைந்தது கடந்த 05 வருடங்களில் பிரதான ஒப்பந்தக்காரர், கூட்டுமுயற்சி அங்கத்தவர், உப ஒப்பந்தக்காரர் அல்லது முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக நிருமான ஒப்பந்தங்களில் அனுபவமிருத்தல் வேண்டும்.

**திட்டவட்டமான அனுபவம்:**

ii. ஆகக் குறைந்த பெறுமதியில் 273 மில்லியன் இலங்கை ரூபாவிற்கான ஒரு ஒப்பந்தத்தை திருப்திகரமாக, பிரதான ஒப்பந்தக்காரராக, கூட்டுமுயற்சி அங்கத்தினராக, முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் கேள்விக்கான இறுதி திகதிக்குமிடையில் கணிசமான அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

**அல்லது**

ஆகக் குறைந்தது 3 ஒப்பந்தங்கள் நிகரான நிர்மாண நுட்பங்கள் சமகாலத்தில் பூர்த்தி செய்யப்பட்டதும் மொத்த பெறுமதி 273 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்டதாகவும் நிகராகவும் பிரதான ஒப்பந்தக்காரராக, கூட்டு முயற்சி அங்கத்தவர், முகாமைத்துவ ஒப்பந்தக்காரராக அல்லது உப-ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் கேள்வியை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையிலுள்ளவைகளும் பரிசீலிக்கப்படும்.

iii. மேலே குறிப்பிட்டுள்ளவைக்கும் வேறேதாவது ஒப்பந்தக்களுக்கும் (கணிசமானளவு பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கும்) பிரதான ஒப்பந்தக்காரராக அல்லது கூட்டு முயற்சி அங்கத்தவர் அல்லது உப ஒப்பந்தக்காரராக 2012 ஜனவரி 1ஆம் திகதிக்கும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி திகதிக்குமிடையில் பின்வரும் முக்கிய செயற்பாடுகளில் ஆகக் குறைந்தளவு நிருமாண அனுபவத்துடன் குறிப்பிட்ட காலப்பகுதியில் ஏதாவது ஒரு வருடத்தில் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- Construction of Soil nails/Soil Anchoring மற்றும் இணைந்த வேலைகள்: 3.100 மில்லியன்
- செங்குத்து நிரையிலுள்ள வடிகால்களின் நிர்மாணம்: 420 மில்லியன்.

**C. முக்கியமான உபகரணம் மற்றும் ஆளணியினர்:**

கேள்வி ஆவணத்தின் IIIஆம் பிரிவின் 4 மற்றும் 5ஆம் இலக்க அம்சங்களில் பட்டியலிடப்பட்ட அவசியமான உபகரணம் மற்றும் பணியாளர்களை தகுந்த நேரத்தில் கையேற்பதற்கான முன்மொழிவுகள்.

4. 2016 ஜூன் 2ஆம் திகதியிட்ட பயனாளிக்கான கொள்வனவு பணிப்புரைகளின் AIIB இன் Interim Operational Directive இல் நிருணயிக்கப்பட்ட கேள்விக்கான கோரிக்கையொன்றை (RFT) பாவித்து தேசிய போட்டி ரீதியிலான (NCT) கேள்வி சமர்ப்பித்தல் ஊடாக கேள்வி நடாத்தப்படும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள சர்வதேச மற்றும் உள்ளூர் கேள்விதாரர்கள் RLVMMP செயற்றிட்ட பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளலாம் மற்றும் (தொலைபேசி: 011-2559869) வேலை நாட்களில் கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தில் அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரையும் கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம். கேள்வி ஆவணமானது www.nbro.gov.lk என்ற இணையத்திலும் 2022.10.03ஆம் திகதியிலிருந்து 2022.10.17ஆம் திகதி வரையும் பரீட்சித்துப் பார்க்கலாம். இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
6. கேள்வியை சமர்ப்பிப்பதற்காக, ஆங்கில மொழியிலுள்ள கேள்வி ஆவணங்கள் 2022.10.04ஆம் திகதியிலிருந்து 2022.10.14ஆம் திகதி வரையும், மீளளிக்கப்படாத கட்டணமாக 45,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர், கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன பணிப்பாளர் நாயகத்திற்கு வியாபார தலைப்புக் கடிதத்தில் கேள்வி ஆவணங்களை வழங்குமாறு கேட்கப்படல் வேண்டும். பணக்கொடுப்பனவு முறைமையானது ரொக்கப் பணத்தில் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன காசாளரிடம் செலுத்தப்படல் வேண்டும்.

   மேலும், PCA-3 படிவத்தை பெறுவதற்காக www.drc.gov.lk என்ற கம்பனிகளின் பதிவாளரின் நிகழ்நிலையின் (online) மூலம் தொடர்பு கொள்ளலாம். பதிவு செய்தல் செயற்பாடானது ஒன்லைன் முறைமைக்கு eroc.dre.gov.lk என்ற இணையத்தின் மூலம் மாற்றப்பட்டுள்ளது.
7. 2022.10.07ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கொழும்பு-05, ஜாவத்த வீதி, 99/1 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவன கேட்போர் கூடத்தில் கேள்வி முன்னோடிக் கூட்டம் நடைபெறும். தள விஜயம் 2022.10.06ஆம் திகதி முன்மொழியப்பட்ட மண்சரிவு அமைவிடங்களில் மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும்.
8. கேள்விகள் 2022.10.17ஆம் திகதியன்று கீழேயுள்ள முகவரிக்கு பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. தாமதமான கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் அவைகளை மூடிய பின்னர் கேள்விதாரரின் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் சமுகமளிப்பதற்கு தெரிவு செய்யப்பட்டோர் முன்னிலையில் கீழேயுள்ள முகவரியில் பகிரங்கமாக திறக்கப்படும்.
9. அனைத்து கேள்விகளுடனும் 5 மில்லியன் இலங்கை ரூபாவில் அல்லது இலகுவாக வெளிநாட்டு நாணயத்தில் மாற்றக்கூடிய கேள்வி பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

   கேள்வி பிணையானது கேள்வி படிவங்களின் IV பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவாக தொழில்தருநரினால் ஏற்றுக்கொள்ளக்கூடியதும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதொரு நிபந்தனையற்ற பிணையாகவிருத்தல் வேண்டும்.

   தேவைப்படும் கேள்விப் பிணைத் தொகையை இலகுவாக மாற்றக்கூடிய நாணயமாக மாற்றுவதற்கு, கேள்வியை சமர்ப்பிப்பதற்கான இறுதித்திகதிக்கு 28 நாட்கள் முன்னராக பிரசுரிக்கப்பட்ட விற்பனை செய்யும் பரிவர்தனை விகிதமானது பிரயோகிக்கப்படும்.

   கேள்விப் பிணையானது இன்னொரு நாட்டிலுள்ள வங்கியொன்றிலிருந்து பெறப்பட்டிருந்தால், கேள்வி படிவங்களுக்கான IV பிரிவில் வழங்கப்பட்டுள்ள உருமாதிரிக்கமைவாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட பொருந்தியுள்ள வங்கியொன்றினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
10. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள செயற்றிட்ட முகவரி(முகவரிகளானது) பின்வருமாறாகும். செயற்றிட்ட பணிப்பாளர், செயற்றிட்ட முகாமைத்துவ பணிமனை, தாக்கக் குறைப்பு செயற்பாடுகளினால் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்றிட்டம், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம், இல. 99/1, ஜாவத்த வீதி, கொழும்பு-05, இலங்கை.

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகை குழு,**
**பாதுகாப்பு அமைச்சு,**
**வித்யா மாவத்தை,**
**கொழும்பு-07. இலங்கை.**

---

## மாகோ பிரதேச சபை

## வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2023

01. மாகோ பிரதேச சபைக்கு 2023ஆம் வருடத்தில் கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக் கொள்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட சேவை வழங்குநர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
02. விண்ணப்பப்படிவங்களை 2022.10.01ஆம் திகதி முதல் 2022.11.30ஆம் திகதி வரை மாகோ பிரதேச சபைக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். உங்களால் தயாரித்துக்கொண்ட விண்ணப்பங்கள் சகிதம் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலும் ஒப்பந்தக்காரர்கள் சீடா நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழின் பிரதியையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நாட்களில் இந்த அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி இலக்கம் 0372275275)
03. அனைத்து விண்ணப்பப்படிவங்களுக்கும் பதிவுக் கட்டணமாக 1000.00 ரூபா அறவிடப்படும். தபாலில் அல்லது கூரியர் சேவை மூலம் அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்களுக்கு காசோலை மற்றும் காசுக்கட்டளை என்பவற்றை செயலாளர் பிரதேச சபை மாகோ பெயரில் கொடுப்பனவுகளைச் செய்யலாம்.

**வழங்கல்கள்:**

01. மின் உபகரணங்கள் மற்றும் வீதி விளக்குகள் வழங்குதல்
02. அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
03. வாகன உதிரிப்பாகங்கள் வழங்குதல்
04. டயர்/டியூப்/பற்றரி வழங்குதல்
05. கணனி மற்றும் போட்டோப் பிரதி இயந்திரத்திற்கான டோனர்/ காட்ரிஜ்/ ரிபன் வழங்குதல்
06. கட்டிடப் பொருட்கள்/நிர்மாண மூலப் பொருட்கள்/ ஹாட்வெயார் பொருட்கள்/தரையில் பதிக்கும் கல் வழங்குதல்
07. சீருடை/ திரைச்சீலை/டென்ட்/கம்யூட்ஸ்/ கையுறைகள்/ தொழில்நுட்ப பாதுகாப்பு துணைப்பாகங்களை வழங்குதல்
08. டிஜிட்டல் பிரின்டிங்/ஸ்டிக்கர்/பெயர் பலகை மற்றும் அச்சு விடயங்களை மேற்கொள்ளல்
09. கொங்கிறீட் உற்பத்திகளை வழங்குதல்
10. அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களை வழங்குதல்
11. தார் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகளை வழங்குதல்
12. அலுமினியம்/ கண்ணாடி வேலைகள் மேற்கொள்ளல்
13. சிறுவர் பூங்கா/விளையாட்டுப் பொருட்கள் மற்றும் உடற்பயிற்சி உபகரணங்கள்
14. உணவு பாணங்கள் உற்சவ மண்டப வசதிகள் மற்றும் அறை வசதிகள்
15. தகன சாலைக்கு காஸ் வழங்குதல்
16. நீர் பில்டர் இற்கு தேவையான உபகரணங்கள் வழங்குதல் மற்றும் பழுது பார்த்தல்
17. அலுவலக சுகாதார மற்றும் துப்புறவேற்பாட்டு உபகரணங்கள் வழங்குதல்

**சேவைகள்**

01. கணனி/பெக்ஸ்/அச்சு இயந்திரம் வழங்குதல் உதிரிப்பாகங்கள் வழங்குதல் பழுது பார்த்தல் மற்றும் சேர்விஸ் செய்தல்
02. வாகன பருவ சேவைகளை மேற்கொள்ளல்
03. வாகனங்கள்/இயந்திரங்கள் பழுது பார்த்தல்
04. CCTV கெமரா அமைப்பு, உள்ள தொலைபேசி அமைப்பு மற்றும் கணனி வலையமைப்பு உருவாக்கல், பழுதுபார்த்தல்

**ஒப்பந்தக்காரர்கள்**

01. சகல நிர்மாணங்களுக்காக ஒப்பந்தக்காரர்களின் பதிவு

**எச். எம். விஜித்த அமுனுகம,**
**தலைவர்,**
**மாகோ பிரதேச சபை.**

# வெற்றிடங்கள்

## வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்

(புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் இணை நிறுவனம்)

### 01) பிரதான நிறைவேற்று அதிகாரி (HM 2-1)

**வெளிவாரி மற்றும் உள்வாரி விண்ணப்பதாரர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல்/ விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.

   **அத்துடன்**

   பொறியியல் / விஞ்ஞானம்/ வியாபார நிர்வாகத்தில் பட்டப் பின்படிப்புப் பட்டம் (Masters) அல்லது முகாமைத்துவத்தில் அங்கீரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் கூட்டுவர்த்தக அங்கத்துவம்

   **அத்துடன்**

   முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 10 வருட அனுபவம் இருக்க வேண்டும் அதில் 05 வருட காலம் முகாமைத்துவ மட்டத்தில் (MM) நிரூபணமான சாதனைப் பதிவு மற்றும் ஆரம்பப் பட்டத்தைப் பெற்ற பின்னர் கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனமொன்றில் முகாமைத்துவ அனுபவத்துடன் இருக்க வேண்டும்.

2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட பொறியியல்/ விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகத்தில் இளமாணிப் பட்டம்.

   **அத்துடன்**

   பொறியியல்/ விஞ்ஞானம் அல்லது வியாபார நிர்வாகத்தில் PHD பட்டம் அல்லது

   **அத்துடன்**

   ஆரம்பப் பட்டத்தைப் பெற்றதன் பின், கூட்டுத்தாபனம், சபை அல்லது புகழ்பெற்ற வர்த்தக நிறுவனமொன்றின் நிரூபிக்கப்பட்ட சாதனை மற்றும் முகாமைத்துவ அனுபவத்துடன் முகாமைத்துவ மட்டத்தில் (MM) குறைந்தபட்சம் 05 வருட கால அனுபவம்.

   பல-ஒழுங்கு குழுக்களை வழிநடத்துவதற்கும் தலைமை தாங்குவதற்கும் நிரூபிக்கப்பட்ட திறன்.

   மனித வளங்கள் மற்றும் பிற வளங்களை முறையாக வரிசைப்படுத்தல் மற்றும் திறமையான முகாமைத்துவத்தில் அனுபவம்.

- **வயது** : 35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

  **சம்பள அளவு** : (HM 2-1) - ரூ. 91,645.00 மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள்

### (02) செயற்பாடுகள் பணிப்பாளர் (சுரங்கம்) (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சுரங்கப் பொறியியல் / மண் ஆராய்ச்சி பொறியியல் ஆகியவற்றில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட சுரங்கப் பொறியியல் / பூமி வளங்கள் பொறியியல் துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் சுரங்கப் பொறியியல் துறைக்கு தொடர்புடைய "முகாமைத்துவ நிலை"யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. சுரங்கப் பொறியியல் / மண் ஆராய்ச்சி பொறியியல் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய சுரங்கப் பொறியியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### (03) செயற்பாடுகள் பணிப்பாளர் (புவிச்சரிதவியல்) (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட புவிச்சரிதவியலில் விஞ்ஞான இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட புவிச்சரிதவியலுக்கு இயைபான துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான புவிச்சரிதவியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் புவிச்சரிதவியல் துறைக்கு தொடர்புடைய ‘‘முகாமைத்துவ நிலை’’யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. புவிச்சரிதவியல் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய புவிச்சரிதவியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 04) நிதிப் பணிப்பாளர் (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம் / கணக்கியலில் இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட கணக்கியல் / நிதியிலுக்கு இயைபான துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான கணக்கியல் / நிதித் துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் கணக்கியல் / நிதித் துறைக்கு தொடர்புடைய ‘‘முகாமைத்துவ நிலை’’யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. கணக்கியல் / நிதியியல் துறையில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய கணக்கியல் / நிதியியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

### 05) மனித வளங்கள் மற்றும் நிர்வாகப் பணிப்பாளர் (HM 1-1)

**வெளிவாரி அபேட்சகர்கள் (1 மற்றும் 2 அத்துடன் 4 அல்லது 1 மற்றும் 3 அத்துடன் 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் என்பவற்றில் இளமாணிப் பட்டம்.
2. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் (UGC) அங்கீகரிக்கப்பட்ட மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் என்பவற்றிற்கு இயைபான துறையில் பட்டப் பட்டப்படிப்பு தகுதி (Masters)
3. பதவிக்கு இயைபான மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் எனும் துறைகளில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்
4. கூட்டுத்தாபனம் / சபை / நியதிகள் சபை / நிறுவனம் / புகழ்பெற்ற தனியார் நிறுவனத்தில் மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாக துறைக்கு தொடர்புடைய ‘‘முகாமைத்துவ நிலை’’யில் குறைந்தபட்சம் பத்து (10) வருடகால அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்குத் தேவையான தகுதிகளைப் பெற்றிருத்தல்
2. மனிதவள முகாமைத்துவம் / பொது நிர்வாகம் / பொது முகாமைத்துவம் / வியாபார முகாமைத்துவம் / வியாபார நிர்வாகம் எனும் துறைகளில் பட்டப் பின்படிப்பு பட்டம் சகிதம் பதவியுடன் தொடர்புடைய கணக்கியல் / நிதியியல் துறையில் முகாமைத்துவ வகுதியில் (MM 1-1) 1ஆம் வகுப்பு பதவியில் குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

- சம்பள அளவு (02, 03, 04 மற்றும் 05)

  HM 1-1 - ரூ. 80,295.00 மற்றும் நிறுவனத்தால் வழங்கப்படும் ஏனைய கொடுப்பனவுகள்

- வயது (02, 03, 04 மற்றும் 05)

  35 வயதுக்கு குறையாமலும் 55 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவிக்குரித்தான பொதுவான நிபந்தனைகள்**

- ➢ தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் தமது அடிப்படைச் சம்பளத்தின் 8% ஊழியர் சேமலாப நிதிக்கு வழங்குதல் வேண்டும். நிறுவனத்தினால் 12% மற்றும் மேலதிகமாக ஊ.ந.பொ.நிதியத்திற்கு 3% மும் பங்களிப்புச் செய்யப்படும்.
- ➢ அரசாங்க சேவை / நியதிகள் சட்டச் சபை விண்ணப்பதரர்கள் தமது நிறுவனத்தின் தலைமையின் ஊடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
- ➢ விண்ணப்பதாரர் தொடர்பாக உறுதிசெய்து கொள்வதற்காக உறவினரல்லாத இருவரின் முகவரி அல்லது தொலைபேசி இலக்கத்தை விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

கல்வித் தகைமைகள், அனுபவம், தொழில்சார் தகைமைகள் மற்றும் ஏனைய இயைபுடைய சான்றிதழ்களின் புகைப்படப் பிரதியை விண்ணப்பத்துடன இணைத்து அனுப்புதல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிட்டு சுய தரவுகளுடனான தமது விண்ணப்பப்படிவத்தை பின்வரும் முகவரிக்கு 20.10.2022ஆம் திகதிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

**தலைவர்,**
**வரையறுக்கப்பட்ட GSMB தொழில்நுட்ப சேவைகள் (தனியார்) நிறுவனம்,**
**இல. 190/A, ரணவீர கட்டிடம்,**
**ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை,**
**நுகேகொட.**

# 2021 ஜூலை முதல் 837 போட்டிகள் நடத்தப்பட்டன

## இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளன தலைவர் ஜஸ்வர் உமர்



2021 ஜூலை 1 முதல் இதுவரை 837 சர்வதேச மற்றும் உள்ளூர் போட்டிகளை நடத்தியுள்ளதாக இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஜஸ்வர் உமர் தெரிவித்தார். 30 சுப்பர் லீக் போட்டிகள், 33 மாகாண போட்டிகள், 91 சம்பியன்ஸ் லீக் போட்டிகள், தங்கம்/வெள்ளிக் கோப்பை போட்டிகள் உட்பட நாடு பூராவும் 652 போட்டிகள் நடத்தப்பட்டுள்ளன. அதன்படி 2021ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற உள்நாட்டுப் போட்டிகளின் மொத்த எண்ணிக்கை 806 ஆகும். இந்தக் காலகட்டத்தில் நடைபெற்ற மொத்த சர்வதேச போட்டிகளின் எண்ணிக்கை 31ஆகும். தேசிய அணி 11 போட்டிகளில் பெண்கள் அணி 02 போட்டிகளில், 23 வயதுக்குட்பட்ட அணி 03 போட்டிகளில், 19 வயதுக்கு கீழ்பட்ட அணி பெண்கள் அணி 05 போட்டிகளிலும், 20 வயதுக்குட்பட்ட அணி 07 போட்டிகளிலும், 17 வயதுக்குட்பட்ட அணி 03 போட்டிகளிலும் பங்கேற்றுள்ளது. கட்டாரில் 09 நாள் பயிற்சி முகாம், சவூதி அரேபியாவில் 17 நாள் பயிற்சி முகாம் , மீண்டும் கட்டாரில் 9 நாள் பயிற்சி முகாம், 03 சர்வதேச பயிற்சி முகாம்கள் என்பனவும் நடத்தப்பட்டுள்ளன.

2021 ஜூலை 01க்கு முன் 33 போட்டிகள் மட்டுமே நடாத்தப்பட்டன.

கால்பந்தாட்டத்தை மேம்படுத்துவதற்கு விளையாட்டு வீரர்களுக்கு சர்வதேச மற்றும் உள்நாட்டு போட்டி அனுபவங்கள் மிகவும் அவசியமானது என்றும், இலங்கையர்களுக்கு கிரிக்கெட் போலவே கால்பந்தையும் பிரபலமாக்குவதே தனது நோக்கமாகும் என்றும் ஜஸ்வர் உமர் குறிப்பிட்டார்.

# ஸாஹிரா சுப்பர் 16 கிண்ணம் ஸாஹிரா கல்லூரி வசமானது

ருஸைக் பாரூக்




இலங்கையில் கால்பந்து வீரர்களை உருவாக்குவதில் முன்னணி பாடசாலைகளில் ஒன்றாக இருக்கும் கொழும்பு ஸாஹிரா கல்லூரி ஸாஹிரா சுப்பர் 16 எழுவர் கால்பந்து தொடரில் சம்பியன் கிண்ணத்தை வென்றது.

கொழும்பு குதிரைப்பந்தய திடல் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த போட்டியில் ஸாஹிரா கல்லூரி இறுதிப் போட்டியில் தாருஸ்ஸலாம் கல்லூரியை வீழ்த்தியது.

இறுதிப் போட்டி 11 என சமநிலையில் முடிந்த நிலையில் முடிவை தீர்மானிக்க பெனல்ட்டி சூட் அவுட் முறை பயன்படுத்தப்பட்டது. அதில் தனது ஆதிக்கத்தை நிரூபித்த ஸாஹிரா மூன்று கோல்களை பெற்றதோடு தாருஸ்ஸலாம் கல்லூரியால் ஒரு பந்தையே வலைக்குள் செலுத்த முடிந்தது.

கிண்ணத்துக்கான பிரிவில் றோயல் கல்லூரி மூன்றாம் இடத்தை பெற்றது. நடப்புச் சம்பியனான புனித ஜோசப் கல்லூரி பிளேட் கேடயத்தை கைப்பற்றியது.

இதில் இறுதிப் போட்டியின் நாயகனாக ஸாஹிரா கல்லூரியின் எம்.எச்.எம் ஹபீல் தெரிவானதோடு தங்கக் கையுறையையும் ஸாஹிராவின் எம்.எச்.எம் ஹபீல் வென்றார். தங்க காலணியை தாருஸ்ஸலாம் கல்லூரியின் பி.எம்.எம் சுஹைப் கைப்பற்றினார்.

# ஓமானில் கிரிக்கெட் ஆட இலங்கையின் மூவர் தேர்வு

மாளிகைக்காடு குறூப் நிருபர்



சாய்ந்தமருதைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் ஓமான் நாட்டிலுள்ள விளையாட்டுக் கழகமொன்றுக்காக ஒப்பந்த அடிப்படையில் கிரிக்கெட் விளையாடுவதற்கு தெரிவு செய்யப்பட்டு ஓமான் பயணமானார்கள். சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த பல முன்னணி விளையாட்டுக் கழகங்களிலும், கல்வி கற்ற காலத்தில் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி கிரிக்கெட் அணியிலும் பங்கேற்று பல வெற்றிகளுக்கு காரணமாக அமைந்த இவர்கள் பிரதேசமட்டம் , மாவட்ட மட்டம் , மாகாண மட்டம் மற்றும் தேசிய மட்டத்திலும் கிரிக்கெட் போட்டிகளில் ஆடியுள்ளனர்.

ஜே.எச். அப்லால் காரியப்பர் , எம். சஜாத் , எம்.ஏ.எம்.றஸ்பாஸ் ஆகிய மூன்று இளைஞர்களும் கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை பெண்கள் அணி முதல் போட்டியில் தோல்வி



மகளிர் ஆசிய கிண்ணத் தொடரில் இலங்கை அணி ஆடிய முதல் போட்டியில் இந்திய பெண்களிடம் 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை சந்தித்தது.

பங்களாதேஷின் சில்ஹெட்டில் கடந்த சனிக்கிழமை (01) நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இந்திய அணி 20 ஓவர்களுக்கு 6 விக்கெட்டுகளை இழந்து 150 ஓட்டங்களை பெற்றது. ஜமிமா ரொட்ரிகஸ் 53 பந்துகளில் 76 ஓட்டங்களை பெற்றார்.

இலங்கை சார்பில் பந்துவீச்சில் ஓஷதி ரணசிங்க 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார். இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய இலங்கை மகளிர் அணி 18.2 ஓவர்களில் 109 ஓட்டங்களுக்கே சுரண்டது. ஹாசினி பெரேரா அதிகபட்சமாக 30 ஓட்டங்களை பெற்றார்.



மன்னார் மாவட்ட கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படவுள்ள மாவட்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியை முன்னிட்டு அதற்கான ஆரம்ப அறிமுக நிகழ்வொன்று கடந்த சனிக்கிழமை (01) மன்னார் உப்புக்குளத்தில் இடம்பெற்றது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சருமான காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்துகொண்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் விநோ நாகரதலிங்கம் உட்பட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

## சர்வதேச செய்திகள்

# இந்தோனேசிய கால்பந்து போட்டியில் ரசிகர்களிடையே நெரிசல்: 174 பேர் பலி

## கண்ணீர்ப் புகைப்பிரயோகத்தால் தள்ளுமுள்ளு



இந்தோனேசியாவில் கால்பந்து போட்டி ஒன்றில் இடம்பெற்ற நெரிசலில் குறைந்தது 174 பேர் உயிரிழந்துள்ளனர். விளையாட்டு அரங்கு ஒன்றில் இடம்பெற்ற மிக மோசமான சம்பவங்களில் ஒன்றாக இது மாறியுள்ளது.

கிழக்கு ஜாவாவில் கடந்த சனிக்கிழமை (01) நடந்த கால்பந்து போட்டியில் ஆதரவாளர்கள் மைதானத்திற்குள் நுழைந்ததை அடுத்து அவர்களை கட்டுப்படுத்த பொலிஸார் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற்கொண்டதை அடுத்தே இந்த நெரிசல் ஏற்பட்டுள்ளது.

உள்ளூர் அணியான அரேமா கால்பந்து கழகம் தனது கடும் போட்டியாளரான பெர்செபாயா சுரபயா அணியிடம் 2–3 கோல் கணக்கில் தோல்வி அடைந்ததை அடுத்து இடம்பெற்ற இந்த சம்பவத்தில் மேலும் 180 பேர் வரை காயம் அடைந்துள்ளனர்.

அரங்கின் கொள்ளளவான 38,000 ரசிகர்களைத் தாண்டி 4,000 பேர் வரை வந்ததாக இந்தோனேசிய தலைமை பாதுகாப்பு அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். இந்தோனேசியாவின் முன்னணி கால்பந்து லீக்கின் அனைத்து போட்டிகளையும் விசாரணை முடியும் வரை நிறுத்தும்படி ஜனாதிபதி ஜொகோ விடோடோ உத்தரவிட்டுள்ளார்.

போட்டி நிறைவுக்கான இறுதி விசில் ஊதப்பட்ட பின் ரசிகர்கள் மைதானத்திற்குள் ஓடிவருவது வீடியோக்களில் தெரிகிறது.

இதனை அடுத்து பொலிஸார் கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டதை அடுத்து ரசிகர்களிடையே தள்ளுமுள்ளு ஏற்பட்டு மூச்சுத்திணறல் நிகழ்ந்திருப்பதாக கிழக்கு ஜாவா பொலிஸ் தலைவர் நிகோ அபின்டா தெரிவித்தார்.

'அங்கு பெரும் குழப்பநிலை ஏற்பட்டது. அவர்கள் அதிகாரிகள் மீது தாக்க ஆரம்பித்தார்கள். கார்களுக்கு சேதம் ஏற்படுத்தினார்கள்' என்று அவர் குறிப்பிட்டார். இதில் இரு பொலிஸ் அதிகாரிகள் உயிரிழந்தவர்களில் அடங்குவதாக குறிப்பிட்டார்.

'அனைவரும் கலவரத்தில் ஈடுபடவில்லை என்று நான் கூற விரும்புகிறேன். சுமார் 3,000 பேர் வரை தான் மைதானத்திற்குள் நுழைந்தார்கள்' என்று அவர் மேலும் கூறினார்.

உயிரிழந்தவர்களில் ஐந்து வயதுடைய சிறுவனும் இருப்பதாக மருத்துவமனை ஒன்று தெரிவித்துள்ளது.

மைதானத்திற்குள் நுழைந்த ரசிகர்கள் ஒரு பக்கமாக இருக்கும் வெளியேறும் வாயிலை நோக்கி ஓட்டியுள்ளனர். தொடர்ந்து அங்கு கூட்டம் குவிந்து குறுகிய பாதை ஊடாக அனைவரும் வெளியே செல்ல முயன்றுள்ளனர். நெரிசலில் சிக்கியவர்களுக்கு ஒட்சிசன் இன்றி மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது என்று ஜாவா பொலிஸ் தலைவர் அபின்டா கூறினார்.

ரசிகர்கள் வேலியை ஏறிக் கடக்க முயற்சிக்கும் வீடியோக்கள் சமூக ஊடகங்களில் பரவியுள்ளன. உயிரற்ற உடல்கள் தரையில் இருப்பதை காட்டும் வீடியோ ஒன்றும் சமூக ஊடகத்தில் காணப்படுகிறது.

'அதிகாரிகள் கண்ணீர் புகைப்பிரயோகம் மேற்கொண்டதோடு மக்கள் தானாகவே வெளியே செல்ல அவசரப்பட்டார்கள். ஒருவரை ஒருவர் தள்ளிக்கொண்டதாலேயே உயிரிழப்புகள் ஏற்பட்டன' என்று சம்பவத்தைப் பார்த்த 43 வயதான ரசிகர் ஒருவர் ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

'அங்கு ஒன்றும் நடக்கவில்லை, கலகம் ஒன்று இருக்கவில்லை. அவர்கள் திடீரென்று கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற்கொண்டதற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. அவர்கள் சிறுவர்கள், பெண்களைக் கூட நினைக்காதது தான் எனக்கு அதிர்ச்சி அளிக்கிறது' என்றும் அவர் கூறினார்.

போட்டிகளில் பொலிஸார் அல்லது காவலர்கள் கூட்டத்தை கட்டுப்பாடுத்த கண்ணீர் புகையை மேற்கொள்வதில்லை அல்லது பயன்படுத்துவதில்லை என்று சர்வதேச கால்பந்து சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்திருப்பதாக குறிப்பிட்ட இந்தோனேசிய கால்பந்து சம்மேளனம், இது இந்தோனேசிய கால்பந்துக்கு கலங்கத்தை ஏற்படுத்தும் சம்பவம் என்று வர்ணித்துள்ளது.

கால்பந்து போட்டிகளில் வன்முறை வெடிப்பது இந்தோனேசிய கால்பந்து போட்டிகளில் புதிதல்ல. இதில் அரேமா கால்பந்து கழகம் மற்றும் பெர்செபாயா சுரபயா அணிகள் நீண்ட காலமாக கடும் போட்டியாளர்களாக உள்ளனர்.

மோதல் வெடிக்கும் அச்சம் காரணமாக போட்டிக்காக பெர்செபாயா சுரபயா ரசிகர்களுக்கு டிக்கெட் விற்கப்படாமல் இருந்தது. எனினும் கன்ஜுருஹான் அரங்கில் நடைபெற்ற இந்தப் போட்டிக்காக 42,000 டிக்கெட்டுகள் விற்கப்பட்டிருப்பதாக தலைமை பாதுகாப்பு அமைச்சர் மஹ்பூத் எம்.டி இன்ஸ்டாகிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

விசாரணை முடியும் வரை லிகா 1 போட்டிகள் அனைத்தும் நிறுத்தப்படும் என்று அறிவித்த ஜனாதிபதி விடோடோ, நாட்டில் இது கடைசி கால்பந்து அவலமாக இருக்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

விளையாட்டு அரங்குகளில் நடைபெறும் அனர்த்தங்களின் தொடர்ச்சியாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

1964ஆம் ஆண்டு பெரு நாட்டு தலைநகர் லிமாவில் ஆர்ஜன்டீனா மற்றும் பெரு அணிகளுக்கு இடையே இடம்பெற்ற ஒலிம்பிக் தகுதிகாண் போட்டி ஒன்றில் ஏற்பட்ட நெரிசலில் மொத்தம் 320 பேர் உயிரிழந்ததோடு ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் காயமடைந்தனர்.

பெல்ஜியம் தலைநகர் பிரசல்ஸில் உள்ள ஹெய்சல் அரங்கில் 1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற லிவர்பூல் மற்றும் ஜுவான்டஸ் அணிகளுக்கு இடையிலான ஐரோப்பிய கிண்ண இறுதிப் போட்டியில் சுவர் ஒன்று இடிந்து விழுந்ததில் 39 பேர் உயிரிழந்ததோடு 600 பேர் வரை காயமடைந்தனர்

# இந்திய பொருளாதாரம் மீள்திறன் பெற்றுள்ளது



உலகப் பொருளாதாரம் புதிய அலை ஒன்றை எதிர்கொண்டபோதும் இந்தியப் பொருளாதாரம் மீள்திறன் பெற்றிருப்பதாக இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்தி கான்தா தாஸ் தெரிவித்துள்ளார். தனது பொருளாதார கொள்கை பற்றி கருத்துக் கூறும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"கடந்த இரண்டரை ஆண்டுகளில் கொவிட்19 பெருந்தொற்று மற்றும் உக்ரைன் மோதல் என்ற இரு அதிர்ச்சிகளை உலகம் பார்த்தது. இந்த அதிர்ச்சிகள் உலகப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அது போதாதென்று, தற்போது, ஆக்ரோஷமான நிதிக் கொள்கை நடவடிக்கைகள் மற்றும் அமெரிக்க மத்திய வங்கி போன்ற மேம்பட்ட பொருளாதார மத்திய வங்கிகளில் இருந்து அதனை விடவும் ஆக்ரோஷமான முடிவுகள் என மூன்றாவது பாரிய அதிர்ச்சிக்கு மத்தியில் நாம் இருக்கிறோம்" என்று அவர் சுட்டிக்காட்டினார்.

### சைபர் தாக்குதல்களில் இருந்து

# இந்தோ பசுபிக் பிராந்தியத்தை பாதுகாக்க குவாட் நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் உறுதி



குவாட் அமைப்பின் உறுப்பு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்கள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சீனா, ரஷ்யா, ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து வரக்கூடிய சைபர் தாக்குதல்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும் எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச்சபையின் 77வது மாநாட்டில் கலந்துகொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்தனி பிளிங்கன், அவுஸ்திரேலியாவின் பென்னி வொஸ், ஜப்பானின் ஹயாஷி யொஷிமாஸா ஆகியோர் தனியாக நடத்திய கூட்டத்தின் பின்னரேயே இக்கூட்டறிக்கை வெளியிடப்பட்டது.

பணய தாக்குதலுக்கு எதிரான அறிக்கை என அழைக்கப்படும் இந்த அறிக்கையில் ஒரு நாட்டின் தேசிய பாதுகாப்பு, நிதிப் பிரிவு, வர்த்தக முயற்சிகள், மிக முக்கியமான கட்டமைப்புகள் மற்றும் பிரத்தியேக தரவுகள் என்பனவற்றை இந்த பணய தாக்குதல் மிக மோசமாக பாதிப்பதாகவும், இந்தோ பசுபிக் பிராந்தியத்தில் சைபர் குற்றங்களுக்கு எதிரான அமெரிக்க தலைமையிலான பணய தாக்குதலுக்கு எதிரான முயற்சிகளுக்கு 36 நாடுகள் ஆதரவு தெரிவித்திருப்பதை தாம் வரவேற்பதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

பணய தாக்குதல் என்பது நாடுகளின் மிக முக்கியமான நிதி, பாதுகாப்பு மற்றும் வர்த்தகக் கட்டமைப்புகளின் மீது சைபர் தாக்குதல் நடத்துவதாக பயமுறுத்துவது மற்றும் தாக்குதல் நடத்தி அக்கட்டமைப்புகளை தன்வசம் எடுத்துக்கொண்டு அவற்றை பணயமாக வைத்து தமது தேவைகளை நிறைவேற்றிகொள்வதைக் குறிக்கும்.

இத்தகைய தாக்குதல்கள் சீன, ரஷ்யா, வடகொரியா, ஈரான் ஆகிய நாடுகளில் இருந்து நடைபெறுவதாக குவாட் நாடுகள் கருதுகின்றன.

இந்தோ பசுபிக் பிராந்திய நாடுகளில் பிரயோகிக்கப்படக்கூடிய சைபர் தாக்குதல்களை முறியடிக்கவும் தாக்குப் பிடிக்கவும் நாம் மேலும் நாடுகளுடன் இணைந்து செயல்படவுள்ளோம்.

இப் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பை ஸ்திரப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டு சைபர் கட்டமைப்பை பலவீனப்படுத்தும் முயற்சிகளுக்கு எதிரான நாம் இணைந்து செயல்படுவோம் எனவும் இந்த கூட்டறிக்கையில் குறிப்பிப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஒக்டோபர் மாதம் 3ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

# பலகை அறுவைக்கான மரங்களை விற்பனை செய்தல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் வலஹன்துவ அரச தோட்டத்திலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய 5533 இறப்பர் மரங்கள் மற்றும் 11 அட்டோர்னியா மரங்களை விற்பனை செய்வதற்காக முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன. இந்த கேள்விக்கான நிபந்தனைகள் மற்றும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் உள்ளடங்களான கேள்வி ஆவணங்களை 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் அல்லது வலஹன்துவ தோட்ட அலுவலகத்திற்குச் செலுத்தி 2022-10-06ஆம் திகதி முதல் 2022-10-14ஆம் திகதி பி.ப. 3.30 மணி வரையில் வலஹன்துவ தோட்ட அலுவலகத்திலிருந்தும், 2022-10-06ஆம் திகதி முதல் பி.ப. 1.00 மணி வரையில் கொழும்பு தலைமை அலுவலகத்திலிருந்தும் கொள்வனவு செய்யலாம் என்பதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை அரச பெருந்தோட்டக் கூட்டத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022-10-17ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு முன் உள்ளிடல் வேண்டும் என்பதுடன் அன்றைய தினமே பி.ப. 1.30 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும்.

2022-10-17ஆம் திகதி பி.ப. 1.30 மணியின் பின் எக்காரணம் கொண்டும் கேள்விப் படிவங்கள் வழங்கப்படாது என்பதுடன், எந்தவொரு கேள்வியையும் அல்லது கேள்வியின் பகுதியொன்றை ஏற்றுக்கொள்ளும் மற்றும் நிராகரிக்கும் அல்லது இரத்துச் செய்யும் அதிகாரத்தை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் அதன் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீரானியா வீதி,**
**கொழும்பு 12.**
**2022-10-03ஆம் திகதி.**
**விசாரணைகள்: 0115-921463/ 091-5634900**

---

### 1964ஆம் ஆண்டின் 28ஆம் இல காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (460ஆவது அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**இலக்கம்: 4/31/119(iv)**

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை /ஆட்சி உரிமையை எடுத்துக் கொள்ள அரசாட்சியாளர் எண்ணியிருக்கிறார்கள் மேலதிக விபரங்களுக்கு 2279/09 இலக்கமுடைய மற்றும் 2022.05.09 திகதியுடைய இலங்கை சனநாயக குடியரசின் அதி விஷேட வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | : மேல் மாகாணம் |
| மாவட்டம் | : களுத்துறை |
| பிரதேச செயலகப் பிரிவு | : களுத்துறை |
| கிராம சேவகர் பிரிவு | : 729, அலுபோகஹலன்த, 729, நாகொடை, (தெ) |
| கிராமம் | : நாகொடை |
| காணியின் பெயர் | : கொபைகெலகுபுர, கொஸ்வத்த, கஹடகஹவத்த |
| வரைபட இலக்கம் | : மு.பி.க. 4851 |
| காணித்துண்டு இலக்கம் | : 1 முதல் 18 வரை |
| பிரமாணம் | : ஹெக்டயார் 0.0205 |

**எஸ். திரிமான்ன**
**பிரதேச செயலாளர்,**
**களுத்துறை.**

**முகவரி: பிரதேச செயலகம்,**
**களுத்துறை**

திகதி: 2022.09.06

---

### காணி சுவீகரித்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

**எனது இலக்கம்**
KDS/PAN/04/04/02/25
**காணி அமைச்சு**
இல. 4-3/B/2014/PC/323

கீழே உள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளை சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் 2022.08.15ஆம் திகதிய 2293/13ஆம் இலக்க விஷேட அரசாங்க வர்த்தமானியை பார்க்கவும்.

**அட்டவணை**

| | |
|---|---|
| மாகாணம் | - மத்திய மாகாணம் |
| மாவட்டம் | - கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | - பன்வில |
| கிராம சேவர் பிரிவு | - இல. 729 பன்வில |
| கிராமம் | - உடகுபுர |
| காணியின் பெயர் | - கல்பிஹில்ல தோட்டம் |
| வரைபட இலக்கம் | - மு.பி. மஹா 7118 |
| துண்டு இலக்கம் | - 01 |
| மொத்த விஸ்தீரணம் | - 0.4346 |

**நிரஞ்சன் ஶ்ரீமந்த சேனாதீர**
**பிரதேச செயலாளர்,**
**பன்வில பிரிவு**

2022.09.08ஆம் திகதி
**பன்வில பிரதேச செயலகத்தில்**

---

The Housewives' companion
Classifieds on
Daily News

---

### பெயர் மாற்றம்

மட்டக்களப்பு மாவட்டம், பட்டிப்பளை பிரதேச செயலகப் பிரிவில் முனைக்காடு கிழக்கு கிராம சேவகர் பிரிவில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 851354468V இலக்கமுடையதும் பிறப்புப் பதிவு இல. 3152 இலக்கமுடைய **ஸோஸ்வரன்** ஆகிய நான் எனது பெயரை **யோகேஸ்வரன்** என மாற்றிக் கொள்கின்றேன் என்றும் இலங்கை சனநாயக சோஷலிச குடியரசுக்கும் மக்களுக்கும் அறியத்தருவதோடு எதிர்காலத்தில் எனது பெயரை சகல ஆவணங்களிலும் **யோகஸ்வரன்** என பயன்படுத்துவேன் என இத்தால் உறுதியளிக்கின்றேன்.

---

### அட்டோர்ணி அதிகார பத்திரத்தை இரத்துச் செய்தல்

பொரலஸ்கமுவ, தேவலமுல்ல, 301ஆம் இலக்கத்தில் வசிக்கும் கிரிவத்துடுவகே நிலந்தி பெரேரா (தே.அ.அ.இல. 737081001V) ஆகிய நான் இஸ்ரேல், டெல் அவிவ், இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்தின் இரண்டாம் செயலாளர் கே. ஜீ. ஹேமச்சந்திர அவர்களால் உறுதி செய்யப்பட்ட 2016-08-28ஆம் திகதியைக் கொண்ட விசேட அட்டோர்ணி அதிகாரப் பத்திரத்தின் மூலம் பொரலஸ்கமுவ, தேவலமுல்ல, 301ஆம் இலக்கத்தில் வசிக்கும் ரத்நாயக்க முதியன்சேலாகே சுதர்ஷி நெலும் ரத்நாயக்க (தே.அ.அ.இல. 937340303V) என்பவருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை 2022ஆம் வருடம் செப்டெம்பர் மாதம் 28ஆம் திகதி முதல் இரத்துச் செய்துள்ளதாகவும் அன்றைய தினத்தின் பின் அவரால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயற்பாட்டிற்கும் நான் பொறுப்புகூற மாட்டேன் என இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசிற்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**கிரிவத்துடுவகே நிலந்தி பெரேரா**

---

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2022 ஒக்டோபர் 05ஆம் திகதியன்று ஏல விற்பனையினூடாக 85,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123A066 | LKA18223D075 | LKA36423J068 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 30,000 | 25,000 | 85,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2022 ஒக்டோபர் 05 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2022 ஒக்டோபர் 07 |
| வழங்கப்படும் திகதி | : 2022 ஒக்டோபர் 07 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2022 ஒக்டோபர் 05 புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்கள் |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் லிமிடட் | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**எம்.இசட்.எம். ஆசிம்**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

---

Replies to Classifieds

&

Casual Advertisements published C/o the

Daily News

should only be sent by ordinary post.

Replies sent under registered cover will not be accepted.

---

## நிதி அமைச்சு

## அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## 300 எண்ணிக்கையான லொத்தர் விற்பனைக் கூடங்களை பொருத்துதல் வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

**விலை இல. :- DLB/PRO/2022/19**

300 எண்ணிக்கையான லொத்தர் விற்பனைக் கூடங்களை பொருத்துதல் வழங்குதல் மற்றும் விநியோகித்தலுக்காக ஆர்வமுள்ள தகைமையான விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

02. விலைமனுக்கள் தேசிய போட்டி விலைமனுக்கோரல் (NCB) முறைமையின் பிரகாரம் நடத்தப்படும்.

03. ஓர் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணம் ரூ. 4,600.00 (வெட் 15% உடன்) செலுத்துவதன் பேரில் 2022.09.30 முதல் 2022.10.13 வரை (வேலை நாட்களில்) மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-02, யூனியன் பிளேஸ், கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை இல. 356 அபிவிருத்தி லொத்தர் சபை, பெறுகைக் பிரிவின் வழங்குநரால் ஓர் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்து ஆங்கில மொழியிலான ஓர் முழுமையான தொகுதி விலைமனு ஆவணங்களை கொள்வனவு செய்யலாம் மற்றும் இலவசமாகப் பரிசீலிக்கலாம். கட்டணம் செலுத்தும் முறை காசாக இருக்கும்.

04. விலைமனு ஆவணத்தின் பிரகாரம் ஓர் விலைமனுப் பிணையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. விலைமனு ஆவணங்களில் தேவைப்படுமாறு எல்லா விபரமான தகவல்களையும் விலைமனுதாரர் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. விலை நிபந்தனைகளின் பிரகாரம், 2022.10.14 பி.ப. 2.30 மணிக்குப் பிந்தாமல், இலங்கை கொழும்பு-2, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, அபிவிருத்தி லொத்தர் சபை, சிறிய பெறுகைக் குழு, தலைவரை அடையுமாறு, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 300 எண்ணிக்கையான லொத்தர் விற்பனைக் கூடங்களை பொருத்துதல் வழங்குதல் மற்றும் விநியோகித்தல் என்று குறிப்பிட்டு நகல்களுடனான விலைமனுக்கள் விநியோகிக்கப்படல் வேண்டும். அத்துடன் அதன் பிறகு கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது.

07. விலைமனுக்கள் 2022.10.14 பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்பு கொழும்பு-02, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, இல. 356, அபிவிருத்தி லொத்தர் சபை, சிறிய பெறுகைக் குழு, தலைவர், அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் உள்ள பெட்டியில் வைப்புச் செய்யலாம் அல்லது விலைமனுக்கள் பதிவுத் தபாலில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் 2022.10.14 பி.ப. 2.30 இற்கு மூடப்படும். அத்துடன் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்படும் நேரத்தின் பின்னர் உடனடியாகத் திறக்கப்படும்.

06. விலைமனு ஆவணங்களை அ.லொ.ச இணையதளம் www.dlb.lk இல் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, கலாநிதி கொல்வின் ஆர்.டி. சில்வா மாவத்தை,**
**கொழும்பு-02.**
**தொ.பே- 011-4824824**
**www.dlb.lk**
30.09.2022

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

---

# கேள்வி அறிவித்தல்

## அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை

அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபைக்கு உரித்தான பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2023.01.01 முதல் 2023.12.31 வரையான காலத்திற்கு குத்தகையை அறவிடும் உரிமையை, விளைச்சாலை அறுவடை செய்து கொள்ளும் உரிமையை குத்தகைக்கு விடுவதற்காக முத்திரையிடப்பட்ட கேள்விகள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

| தொடர் இல. | விபரம் | ஆகக் குறைந்த கேள்வி ரூபா ச. | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா ச. | கேள்விப் பிணைத் தொகை ரூபா ச. |
|---|---|---|---|---|
| 01 | அங்குணகொலபெலெஸ்ஸ பொது வாரச்சந்தை | 7,887,862.50 | 5,000.00 | 50,000.00 |
| 02 | அங்குணகொலபெலெஸ்ஸ மீன் சந்தை | 1,470,105.00 | 2,000.00 | 30,000.00 |
| 03 | அங்குணகொலபெலெஸ்ஸ பொது கழிவறை | 31,552,50 | 250.00 | 1,000.00 |
| 04 | அங்குணகொலபெலெஸ்ஸ நகரிற்கு வருகை தரும் நடமாடும் வர்த்தக வாகனங்களிலிருந்து வரி அறிவிடுதல் | 288,750.00 | 1,000.00 | 10,000.00 |
| 05 | தலாவ நூலகக் காணியின் தென்னை விளைச்சல் | 2,940.00 | 100.00 | 500.00 |
| 06 | கசாகல நூலகக்காணியின் தென்னை விளைச்சல் | 2,205,00 | 100.00 | 500.00 |
| 07 | தெபொக்கால வாரச் சந்தை | 550,000.00 | 2000.00 | 25,000.00 |

கேள்விப்படிவங்களை வழங்கல் : 2022.10.03 அன்று மு.ப. 10.00 முதல் 2022.10.19 மு.ப. 10.00 வரை
கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் : 2022.10.19 அன்று மு.ப. 10.30 வரை
கேள்விகளைத் திறத்தல் : 2022.10.19 அன்று மு.ப. 11.00

**கேள்விப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளல்**

i. வார வேலை நாட்களில் அலுவலக நேரங்களில் அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபையின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் அல்லது
ii. கேள்விப்படிவக் கட்டணம் மற்றும் பிணைத் தொகை போன்ற இரண்டிற்கான பெறுமானத்திற்கு காசுக்கட்டளையை (Money Order) அங்குணகொலபெலெஸ்ஸ தபால் அலுவலகத்தில் மாற்றிக் கொள்ளக் கூடியவாறு செயலாளர், அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை என்ற பெயருக்கு அனுப்புவதன் மூலம் அழைத்துக் கொள்ளல் மேற்கொள்ளலாம்

**மேலதிக விபரங்களுக்கு:**
**தொலைபேசி இல. : 047-2228275**
**தொலைநகல் இல. : 047-2229022**
**இணையம் : www.angunkolapelessa.ps.gov.lk**
**மின்னஞ்சல் : angupelessps@gamail.com**
2022.09.28ஆம் திகதி
**அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபைஅலுவலகத்தில்**

**காமினி வீரபத்தன, தலைவர்,**
**அங்குணகொலபெலெஸ்ஸ பிரதேச சபை.**

---

## தெஹிவளை கல்கிஸ்சை மாநகர சபை

# 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2023ஆம் ஆண்டில் தெஹிவளை கல்கிஸ்சை மாநகர சபைக்கு பின்வரும் பண்டங்களை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள் உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மற்றும் முகவர் நிறுவனங்களிடமிருந்து சேவைகளிற்காக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 2022.10.10 முதல் 2022.11.06 வரை விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படும்.

பதிவு செய்து கொள்வதற்காக குறித்த நிறுவனத்தின் கடிதத்தலைப்பில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்வதற்கான கடித மொன்றுடன் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்தில் தெஹிவளை கல்கிஸ்சை மாநகர சபையின் முதலாம் மாடியிலமைந்துள்ள வழங்கல் பிரிவில் சமுகமளித்து உருப்படி ஒன்றிற்காக ரூபா 1,500.00 வீதம் செலுத்தி விண்ணப்பப்படிவமொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை வழங்கல் பிரிவின் தொ.பே. இல. 011-2721379 மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

இதற்கான விண்ணப்பங்கள் 2022.11.16ஆம் திகதிக்கு முன்னர் மாநகர ஆணையாளர் தெஹிவளை கல்கிஸ்சை மாநகர சபை, தெஹிவளை என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது வழங்கல் பிரிவில் நேரடியாக ஒப்படைக்கலாம்.

விண்ணப்பங்களை அடக்கும் உறைகளின் இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2023' எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

பதிவு செய்வதற்கான உருப்படிகளின் அட்டவணையை எமது இணையத்தளத்தில் dmmc.lk இலிருந்து தரவிரக்கம் செய்து கொள்ளலாம்.

**எம்.எம்.சீ.கே.கே. மான்னப்பெரும.**
**மாநகர ஆணையாளர்,**
**தெஹிவளை கல்கிஸ்சை,**
**மாநகர சபை, தெஹிவளை.**

2022.09.28

---

## பெருந்தோட்ட அமைச்சு

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

# ஏலக்காய் விளைச்சலை குத்தகைக்கு வழங்குதல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினால் நிர்வகிக்கப்படும் திகலோயா மற்றும் மிட்லேண்ட் தோட்டங்களின் ஏலக்காய் விளைச்சலை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்த கேள்விக்கான நிபந்தனைகள் மற்றும் கேள்விகளைச் சமர்ப்பிப்பதற்கான படிவங்கள் உள்ளடங்களான கேள்வி ஆவணங்களை 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தி 2022-10-25ஆம் திகதி முதல் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கொழும்பில் அமைந்துள்ள தலைமை அலுவலகத்தில் அல்லது கல்பிஹில்ல தோட்டத்தில் அமைந்துள்ள பிரதேச அலுவலகத்தில் கொள்வனவு செய்யலாம். அந்த கேள்வி ஆவணங்களை 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் இலங்கை அரச பெருந்தோட்டத்தின் பிரதான அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும்.

மேற்படி விலைக்கோரலுக்கான நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்களைச் சமர்ப்பிபதற்கான படிவங்களை உள்ளடக்கிய கேள்வி ஆவணங்களை கொழும்பு-12, மீராணியா வீதி, 21ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திலிருந்து 2022-10-10ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2022-10-25ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரையில் கல்பிஹில்லயில் அமைந்துள்ள அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் பிரதேச அலுவலகத்தில் அல்லது 2022-10-10ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் 2022-10-24ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரையில் 2000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

அந்த கேள்வி ஆவணங்களை 2022-10-25ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கொழும்பு-12, மீராணியா வீதி, 21ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்த உடனடுத்து அந்த விலைமனுப் படிவங்கள் தலைமை அலுவலகத்தில் திறக்கப்படும். வெற்றிகரமான கேள்விதாரருக்கு கேள்வி கையளிக்கப்பட்ட 07 நாட்களுக்குள் முழுத் தொகையையும் செலுத்துதல் வேண்டும் என்பதுடன் அவ்வாறல்லாத சகல கேள்விகளும் இரத்துச் செய்யப்படும்.

ஏதாவதொரு விலைக்கோரலை அல்லது விலைக்கோரலின் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் முழுமையான அதிகாரத்தை இஅபெகூ பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 21, மீராணியா வீதி,**
**கொழும்பு 12.**

**விசாரணை: 0115 921463**

**இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்**

**போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு**

**வீதி அபிவிருத்தி அதிகார சபை**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே விபரிக்கப்பட்டுள்ள வேலைக்காக கீர்த்தி வாய்ந்த தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் சார்பில் அதிவேக வீதி செயற்பாடுகள், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் **(EOM&M)** பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தப் பெயர் | ஒப்பந்தக் காலப்பகுதி (நாட்காட்டி நாட்களில்) | விலைமனுப் பிணை (ரூபா) |
|---|---|---|---|
| **RDA/EOM&M/ GOSL/CLS/ STDP/ 2022/40** | EOM&M பிரிவின் கஹதுடுவ முதல் கொடகம வரையில் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குதல் (ஜெனிட்டர்கள் மட்டும்) | 365 | 150,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை, தேவைப்படின், பணிப்பாளர் (EOM&M), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியிலிருந்து அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம். [தொலைபேசி: 011-3047806. தொலைநகல்: 038-2289560]
4. கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பணிப்பாளரின் அலுவலகத்தில் 2022.10.17ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டம் இடம்பெறும். சகல விலைமனுதாரர்கள் இந்த முன்னோடிக் கூட்டத்தில் கட்டாயம் கலந்துகொள்ளல் வேண்டும். இந்த முன்னோடிக் கூட்டத்தில் கலந்துகொள்ளாமை விலைக்கோரலுக்கான தகுதியீனமாகும் / ஒப்பந்தத்தைக் கையளிப்பதற்கு தகுதியீனமாகும்.
6. 2022.10.03ஆம் திகதியிலிருந்து 2022.10.25ஆம் திகதி வரையும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 4,500.00 ரூபா + **675.00** (பெசேவ) ரூபாவைச் செலுத்திய பின்னர், கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவு, அதிவேக நெடுஞ்சாலை செயற்பாட்டு பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும். 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம், முகவர் மற்றும் இக்கேள்வியின் சித்திகரமான வெற்றியாளர்கள் கம்பனிகளின் பதிவாளரின் திணைக்களத்தில் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.
7. ஒவ்வொரு விலைமனுவுடனும் விலைக்கோரல் தரவில் தரப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப்பிணையானது 2023-02-22ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்கள் இரு பிரதிகளில் 2022.10.26ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், EOM&M பிரிவு பெறுகைக் குழு, மே/பா பணிப்பாளர், EOM&M பிரிவு, கஹட்டகஹஹேன, வல்கம, பண்டாரகம என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் விலைக்கோரலில் கலந்து கொள்ள தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் 2023-01-25ஆம் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரி பின்வருமாறு:

**தலைவர்**
**EOM&M பிரிவு பெறுகைக் குழு,**
**மே/பா பணிப்பாளர், EOM&M பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகார சபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

---

# நிதி அமைச்சு

## அபிவிருத்தி லொத்தர் சபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## செயற்பாடுள்ள விளம்பர முகவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ளல் 2022/2023

கீழே அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ளவாறு ஒரு வருடகாலத்திற்கு செயற்பாடுள்ள விளம்பர முகவர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக விளம்பர துறையில் குறைந்தபட்சம் 03 வருட அனுபவத்தைக் கொண்டுள்ள நம்பகமான விளம்பர முகவர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை அபிவிருத்தி லொத்தர் சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

**விலைமனுச் சுருக்கம்**

| S/W | விலைமனு இல. | விலைமனுவின் பெயர் | மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | விலைமனுப் பிணை பெறுமதி |
|---|---|---|---|---|
| 1 | DLB/Pro/2022/20 | லக்கா வாசனா | ரூ. 5,000.00 | ரூ. 45,000.00 |
| 2 | DLB/Pro/2022/21 | ஜயோதா | ரூ. 5,000.00 | ரூ. 75,000.00 |
| 3 | DLB/Pro/2022/22 | கப்ருக | ரூ. 5,000.00 | ரூ. 152,000.00 |
| 4 | DLB/Pro/2022/23 | அபிவிருத்திலொத்தர் | ரூ. 5,000.00 | ரூ. 75,000.00 |
| 5 | DLB/Pro/2022/24 | சுப்பர் போல் | ரூ. 5,000.00 | ரூ. 152,000.00 |
| 6 | DLB/Pro/2022/25 | சனிதா | ரூ. 5,000.00 | ரூ. 152,000.00 |
| 7 | DLB/Pro/2022/26 | இன்றைய கோடிபதி | ரூ. 5,000.00 | ரூ. 152,000.00 |
| 8 | DLB/Pro/2022/27 | சசிரி | ரூ. 5,000.00 | ரூ. 45,000.00 |
| 9 | DLB/Pro/2022/28 | துரித டிக்கற்கள் | ரூ. 3,500.00 | ரூ. 10,000.00 |
| 10 | DLB/Pro/2022/29 | டிஜிட்டல் எட்வடைசிங் | ரூ. 5,000.00 | ரூ. 480,000.00 |
| 11 | DLB/Pro/2022/30 | கோர்பரேட் எட்வடைசிங் | ரூ. 5,000.00 | ரூ. 500,000.00 |
| 12 | DLB/Pro/2022/31 | அவுட்டோர் எட்வடைசிங் | ரூ. 5,000.00 | ரூ. 395,000.00 |

02. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறைக்கமைவாக நடாத்தப்படும்.
03. **2022.09.30 ஆம் திகதியிலிருந்து 2022.10.20 ஆம் திகதி வரையும்** வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்திய பின்னர், கொழும்பு-02, டொக்டர் கொல்வின் ஆர் த சில்வா (யூனியன் பிளேஸ்) 356 ஆம் இலக்கத்திலுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகை பிரிவிலுள்ள வழங்கல் அலுவலருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று பரீட்சிக்கப்பட்டு கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.
04. விலைமனுக்கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ளவாறு விலைமனுக்கள் விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
05. விலைமனுக்கோரல் ஆவணங்களில் தேவைப்படுத்தப்பட்டவாறு அனைத்து விபரமான தகவலையும் விலைமனுதாரர்கள் வழங்கல் வேண்டும்.
06. விலைமனு நிபந்தனைகளின் பிரகாரம், விலைமனுக்கள் இரு பிரதிகளில் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் செயற்பாடுள்ள விளம்பர முகவர்களின் செவையைப் பெற்றுக் கொள்ளல் (லொத்தர்பெயர்) லொத்தர் 2022/2023**, Bid No DLB/PRO/2022/0(No)** என குறிப்பிடப்பட்டு **2022.10.21ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு** பிந்தாமல் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, அபிவிருத்தி லொத்தர் சபை, 356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை என்ற முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டுமென்பதுடன் அதன் பின்னர் எந்தவொரு விலைமனுவும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
07. விலைமனுக்கள் பதிவுத் தபால் மூலம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் அபிவிருத்தி லொத்தர் சபையின் பெறுகைப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். விலைமனுக்கள் **2022.10.21 ஆம் திகதியன்று பி.ப. 2.00 மணிக்கு** மூடப்பட்டு அவைகளை மூடும் நேரத்தின் பின்னர் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
08. **www.dlb.lk** என்ற அபிவிருத்தி லொத்தர் சபையின் இணையதளத்தில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பார்வையிடலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அபிவிருத்தி லொத்தர் சபை,**
**356, டொக்டர் கொல்வின் ஆர். த சில்வா மாவத்தை, கொழும்பு-02.**
**தொலைபேசி: 011 4824824**
**www.dlb.lk**
30.09.2022

---

# பெறுகை அறிவித்தல்

**தேசிய மனநல நிறுவனம் - முல்லேரியா புதிய நகரம்**

## மின்சார பராமரிப்பு சேவையைப் பெற்றுக்கொள்ளல் 2022/2023

தேசிய மனநல நிறுவனம் மற்றும் அதனோடிணைந்த முல்லேரியா இடைக்கால விடுதி, முல்லேரியா தாதியர் பாடசாலை போன்ற நிறுவனங்களில் 2022/2023 வருட காலத்திற்கு மின்சார முறைமை பராமரிப்பு சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக நிர்மாண அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) EM-04 (EI-LV) வகுதியின் கீழ் பதிவைப் பெற்றுள்ள, அரச நிறுவனங்களுக்கான மின்சார பராமரிப்பு தொடர்பில் 05 வருட கால அனுபவத்தைக் கொண்ட நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் ஆவணங்களை 2022-10-03ஆம் திகதி முதல் 2022-10-20ஆம் திகதி வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரைக்கிடையில் தேசிய மனநல நிறுவனத்தின் நிறுவனப் பிரிவில் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் இந்தக் காலப்பகுதியில் வைத்தியசாலை சிறாப்பர் பிரிவிற்கு 2,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்தியதன் பின் கிடைக்கும் பற்றுச்சீட்டு மற்றும் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் செய்யப்படும் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களை மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறு உறைகளில் இட்டு முத்திரைக் குறி பொறித்து மீண்டும் வேறொரு உறையில் இட்டு முத்திரைக் குறி பொறித்து அதன் இடதுபக்க மேல் மூலையில் ''மின்சாரப் பராமரிப்பு 2022/2023'' எனக் குறிப்பிடுதல் வேண்டும் என்பதுடன் 45,000.00 ரூபா பெறுமதியான இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் 91 நாட்கள் செல்லுபடியாகும் வகையில் வழங்கப்பட்ட விலைக்கோரல் பிணை முறியுடன் முன்பு முத்திரைக் குறி பொறித்த விலைமனுக்களை 2022-10-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் அன்றைய தினமே மு.ப. 10.00 மணிக்குத் திறக்கப்படும் என்பதுடன் இதில் நீங்கள் அல்லது உங்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பிராந்திய பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு தயவு செய்து கட்டிடம் தொடர்பான அதிகாரியைத் தொடர்புகொள்ளவும். தொலைபேசி: 011-2578245.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**தேசிய மனநல நிறுவனம்,**
**முல்லேரியா புதிய நகரம்.**

---

## மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

விலைமனுக் கோரல் - நிபந்தனை விலைமனுக் கோரல்), **LCC/22/TT/2**

## இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடட்

**லக்விஜய மின்வலு ஆலைக்கு 2,250,000 MT + 10% நிலக்கரி வழங்கல்**

**(குறியீட்டு அடிப்படையிலான உடனடி மனுக்கோரல், 180 நாட்கள் கடன்வசதி அடிப்படையில்)**

இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் (LCC) சார்பாக மின்வலு அமைச்சின் அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட விசேட கொள்முதல் குழுத் (SSCAPC) தலைவரினால் லக்விஜய மின்வலு ஆலைக்கு மெட்ரிக்தொண் (900 MW) நிரக்கரி வழங்குவதற்காக இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் உடன் பதிவு செய்ய விரும்பும் நிலக்கரி வழங்குனர்களிடமிருந்து நிலக்கரி வழங்கு பதிவு செய்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றது. (உள்ளூர் அல்லது சர்வதேச) மனுக்களை சமர்ப்பிக்க ஆர்வம் காட்டுபவர்கள் SSCAPC சார்பாக லங்கா நிலக்கரி நிறுவனம் (பிரைவேட்) லிமிடெட் (இனி "LCC" என குறிப்பிடப்படுகிறது) மூலம் மனுக்கள் கோரப்படுகின்றது.

1. கொள்முதல் முறை சர்வதேச முறைக்கமைய செயற்படுத்தப்படும். (ICB)
2. ஒப்பந்த காலம் **அக்டோபர் 2022** முதல் **ஏப்ரல் 2024** வரை
3. லக்விஜய மின்வலு ஆலைக்கு வழங்கப்படும் நிலக்கரியின் மதிப்பிடப்பட்ட அளவு 2,250,000 MT±10% ஆகும்.
4. நிலையான CFR விலை குறைந்தபட்சம் **180 நாட்கள்** கடன்வசதி அடிப்பயையிலான USD அல்லது LKR இல் குறிப்பிடப்பட வேண்டும்.
5. மனுக் பாதுகாப்புத் கட்டணம்க **USD 2 மில்லியன்** அல்லது **ரூ 750** மில்லியன் மற்றும் விலைமனுக்கோரல் முடிவடைந்த **120 நாட்கள்** வரை செல்லுபடியாகும்
6. விலைமனுக்களை **2020 அக்டோபர் 25** ஆம் திகதி **10:00 மணி** வரை (இலங்கை நேரப்படி) சமர்ப்பிக்கலாம். ஆகும்.
7. மனுதாரர்களுக்கான அடிப்படை தகுதி அளவுகோல்கள், நிறுவனப் பதிவானது 3 ஆண்டுகளுக்கு மேல் பதிவு செய்யப்பட்டதாக இருத்தல் வேண்டும், கடந்த 3 ஆண்டுகளுக்குள் குறைந்தபட்சம் 1 மில்லியன் மெட்ரிக் டன் நிலக்கரியினை மொத்த கலோரி.ஃபிக் மதிப்பான 5900 கிலோகலோரிக்கு மேல் வழங்கப்பட வேண்டும், கடந்த 3 நிதியாண்டுகளில் வருடாந்த சராசரி விற்றுமுதல் USD 50 மில்லியனாக மற்றும் ஏனைய நிபந்தனைகள் மனு ஆவணத்தின்படி இருத்தல் வேண்டும்.
8. மனு ஆவணத்தின் முழுமையான தொகுப்பை USD 700.00 அல்லது **ரூ.250,000.00** மீள்ளளிக்கப்படதா கட்டணம் செலுத்திய **வைப்பு செய்யப்பட்ட ரசீது** அல்லது **டெலிகிரா.ஃபிக் டிரான்ஸ்.ஃபர் (TT) ரசீதுடன்** எழுத்துப்பூர்வ கோரிக்கையை சமர்ப்பிப்பதன் மூலம் **2022 அக்டோபர் 03 முதல் 2022 அக்டோபர் 24** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப.09.00 முதல் பி.ப.4.00** வரை (இலங்கை நேரப்படி) **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட், இல-51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி (முன்னால்), கொஹுவல, தெஹிவல 10350, இலங்கை எனும் முகவரியில்** பெற்றுக்கொள்ளலாம்.
9. மனு ஆவணத்தின் தகவல் நகல் LCC இணையத்தளத்தில் **(www.lankacoal.lk)** பார்வைக்காக மட்டுமே உள்ளது.

**வங்கி கணக்கு விபரங்கள்.**

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயர் | : | **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்,** |
| கணக்கு இலக்கம் | : | **004100130000745** |
| வங்கி | : | **மக்கள் வங்கி - கூட்டுறவு கிளை பிரிவு**<br>**இல-35, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை,**<br>**கொழும்பு 10, இலங்கை.** |
| SWIFT குறியீடு | : | **PSBKLKLX** |

10 LCC பதிவு செய்யப்பட்ட நிலக்கரி வழங்குனர்கள் மனு ஆவணத்தை தனித்தனியாக பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியமில்லை, அவை அவர்களுக்கு மின்னஞ்சல் மூலமாக அனுப்பப்படும்.

11. முத்திரையிடப்பட்ட மனு ஆவணங்களை **2022 அக்டோபர் 25** (இலங்கை நேரப்படி) **10:00** மணிக்கு முன் கீழே உள்ள முகவரிக்கு வழங்கப்பட வேண்டும், அதன் பின்னர் உடனடியாக திறக்கப்படும்.

    **தலைவர் - நிர்வாக இயக்குனர்,**
    **(SSCAPC) தலைவரினால்**
    **இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்,**
    **இல-51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி, கொஹுவல,**
    **தெஹிவல 10350, இலங்கை.**

12. முன்மனுக் கூட்டம் **2022.10.13** ஆம் திகதி **14:00** மணிக்கு நடைபெறும். **2022.10.13** திகதி **12:00 மணிக்குள்** அனைத்து பதிவு செய்யப்பட்ட நிலக்கரி வழங்குனர்களுக்கும் மனு ஆவணத்தை பெற்றுக்கொண்டவர்களுக்கும் இது குறித்து அறிவிக்கப்படும்.
13. மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் (இரண்டு நபர்கள் மட்டுமே) மனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் பங்கேற்க அனுமதிக்கப்படுவர்.
14. 1987 இலக்கம் 03 ஒப்பந்த சட்டத்தின் கீழ் பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் உள்ள ஏற்பாடுகள் இந்தக் கொள்வனவுக்குப் பொருந்தும்.

மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக தயவு செய்து தொலைபேசி இலக்கம் : **+94 11 2824681/ 2 அல்லது +94 77 7875 219** தொலைநகல் : **+94 11 2824689,** மின்னஞ்சல் முகவரி : **sujantha.pm@lankacoal.lk**. யின் ஊடாக முகாமையாளர் - (கொள்முதல்) இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் தொடர்பு கொள்ளவும்.

**தலைவர்,**
**(SSCAPC) தலைவரினால்,**
**மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு.**

**இலங்கை நிலக்கரி கம்பெனி (பிரைவேட்) லிமிடெட்**
**51/3, சுரநிமல பிதேசம், துட்டுகெமுனு வீதி, கொஹுவல - தெஹிவல 10350, இலங்கை.**

# வழங்குநர்கள் மற்றும் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### (நீர்ப்பாசன அமைச்சு)

2023ஆம் ஆண்டு காலப் பகுதிக்காக பின்வரும் பொருட்களையும் சேவைகளையும் வழங்குவதற்காக தங்களைப் பதிவு செய்து கொள்ள விரும்பும் அரச பொறுப்பிலுள்ள வர்த்தக நிறுவனங்கள், பொது கூட்டுத்தாபனங்கள், அங்கீகரிக்கபட்ட வழங்குநர்கள், உள்ளூர் முகவர்கள், தயாரிப்பாளர்கள், விநியோகஸ்தர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் என்பன நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு இத்தால் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட பதிவு செய்தல் நடைமுறை ஊடாக பொருட்கள் மற்றும் சேவை வழங்குநர்களிடமிருந்து தேசிய கொள்முதல் நடைமுறையின் கீழ் பதிவு செய்யப்பட்ட பட்டியலிலிருந்து இதன்பின் விலைக்கோரும் நடைமுறைகள் எடுத்துச் செல்லப்படவுள்ளன. நீர்ப்பாசனத் திணைக்களத்தின் வருடாந்த தேவைப்பாடுகளுக்கு மட்டுமே பதிவு செய்யப்பட்ட வழங்குநர்கள் / சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படும் என்பதுடன் பொதுவாக பட்டியல்படுத்தப்பட்ட மட்டுப்படுத்திய வழங்குநர்களிடம் விலைகள் கோரப்படுகின்றன. எவ்வாறாயினும் அவசியமேற்படும் சந்தர்ப்பங்களில் குறும் பட்டியலிடப்பட்ட வழங்குநர்கள் அல்லது ஏனைய வளங்குநரிடமிருந்து விலைகளைக் கோரும் உரிமையை நீர்ப்பாசனத் திணைக்களம் தன்னகத்தே கொண்டுள்ளது.

01. **பொதுவானவை**

